மாநகர சபை, யாழ்ப்பாணம்.

-பக்கங்கள் : பதினெட்டு

Registered as a Newspaper

# உதயன்

ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2039 கார்த்திகை 21 சனிக்கிழமை (06.12.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:010

## ஜெயானந்தமூர்த்தி, அரியநேந்திரன், கஜேந்திரன், சிவாஜிலிங்கம்

# நான்கு தமிழ் எம்.பிக்கள் நாட்டை விட்டு வெளியேறாமல் தடை விதிக்கக் கோரி மனு

## ஆனால் அழைப்பாணை அனுப்ப மட்டும் நீதிவான் உத்தரவு

கொழும்பு, டிசம்பர்6

நாட்டுக்குள் தனி இராச்சியம் அமைக்கும் நோக்கோடு, பிரிவினை கோரி வெளிநாடுகளில் பிரசாரம் செய்த குற்றத்திற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராகத் தாங்கள் சட்ட நடவடிக்கை எடுக்கப் போகின்றார்கள் எனத் தெரிவித்துள்ள குற்றப் புலனாய்வுப் பொலிஸார், அந்த நால்வரில் ஏற்கனவே நாட்டில் இருப்போரை நாட்டைவிட்டு வெளியேறக் கூடாது என உத்தரவு பிறப்பிக்குமாறு கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றில் நேற்று மனுச் செய்தனர்.

அந்த மனுவைப் பரிசீலித்த நீதிவான், தடை உத்தரவு எதையும் விதிக்காமல், மேற்படி நான்கு எம்.பிக்களையும் எதிர்வரும் பத்தாம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு அழைப்பாணை பிறப்பிப்பதற்கு மட்டும் கட்டளையிட்டார்.

(17 ஆம் பக்கம் பார்க்க)

## பெற்றோலின் விலை 20 ரூபாவால் குறைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.6

யாழ்ப்பாணத்தில் நேற்று நள்ளிரவு முதல் பெற்றோலின் விலை லீற்றருக்கு 20 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதாகப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் யாழ். அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணத்தில் ஒரு லீற்றர் பெற்றோலின் புதிய விலை 132 ரூபா 50 சதம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இன்று முதல்

(18 ஆம் பக்கம் பார்க்க)

கல்விச்சுடரில்
இன்று - வரலாறு 1

பிந்திய செய்தி

## அழைப்பாணை அனுப்பும் உத்தரவும் வாபஸ்

கொழும்பு, டிசெ.6

நான்கு தமிழ் எம்.பிக்களுக்கு எதிராக அழைப்பாணை விடுக்கும்படி நேற்றுக்காலை கட்டளையிட்ட கொழும்பு நீதிவான் நீதிமன்றம் அந்த உத்தரவையும் நேற்று மாலை வாபஸ் பெற்றுவிட்டதாக பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன. குற்றப் புலனாய்வுத் துறையினர் தாக்கல் செய்திருந்த விண்ணப்பத்தின் பேரில் எஸ்.கஜேந்திரன், எம்.கே.சிவாஜிலிங்கம், எஸ்.ஜெயானந்தமூர்த்தி, பி.அரியநேத்திரன் ஆகிய நான்கு தமிழ் எம்.பிக்களையும் எதிர் வரும் 10ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு நோட் டீஸ் உத்தரவு பிறப்பிக்க கொழும்பு பிரதம நீதிவான் நிஷாந்த ஹப்பு ஆராய்ச்சி உத்தரவிட்டிருந்தார். (18 ஆம் பக்கம் பார்க்க)

## சகலரும் சேர்ந்து இராணுவத்துக்கு மரண அடி கொடுக்கும் போது இழந்த நிலங்களை மீட்போம்



### அரசியல்துறைப் பொறுப்பாளர் நடேசன் சொல்கிறார்

கிளிநொச்சி, டிச. 06

சகலரும் இணைந்து ஒரு மரணஅடியை சிங்கள இராணுவத்துக்குக் கொடுக்கும் போது, இழந்த நிலங்கள் கட்டாயம் மீட்கப் படும். அத்தோடு இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் சொல்லொணாத் துயரத்தை அனுபவித்து வரும் மக்களுக்கு நிம்மதியும் கிட்டும்.

அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் இவ்வாறு கூறியுள்ளார்.

வட்டக்கச்சிக் கோட்டப் பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்கள் மத்தியில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

(18 ஆம் பக்கம் பார்க்க)

## சூறாவளியின் கரு குழம்பி நகர்ந்து விட்டது இன்று காலநிலையில் முன்னேற்றமிருக்கும்

கொழும்பு, டிசெ.6

வங்காள விரிகுடாவின் மத்தியில் மையங் கொண்டிருந்த சூறாவளியின் கரு குழம்பிப் போய் விட்டதாகவும், அது வடமேற்குத் திசையில் நகர்ந்து செல்லும் சாத்தியம் தோன்றியுள்ளதாகவும் கால நிலை அவதான நிலையம் நேற்றிரவு பத்து மணிக்கு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப் பட்டது.

அதன் காரணமாக நேற்று(வெள்ளி) இரவும் இன்றும் தற்காலிகமான சிறிய

(18 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி அகதிகளுக்கு ஐரோப்பிய ஒன்றியம் 2.5 மில்லியன் டொலர் நிதி உதவி வழங்கியது

கொழும்பு, டிசெ. 06

வன்னியில் வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட மக்களின் அவசர உதவிகளுக்காக 2.5மில்லியன் டொலர்களை ஐரோப்பிய ஒன்றியம் வழங்கியுள்ளது.

கடும் மழையால் பாதிக்கப்பட்டுள்ள வன்னிப் பிரதேச மக்களுக்கு உடனடியாகத் தேவையான உதவிகளை வழங்குவதற்காக இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது என்று ஐரோப்பிய ஒன்றிய உதவிகளுக்கான ஆணையாளர் லூயிஸ் மைக்கல் தெரிவித்துள்ளார்.

அதே வேளை-

(18 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்த நிறுத்தத்தை இந்தியா வலியுறுத்தினால் அதற்கு உத்தரவாதம் தரக் கோருமாம் இலங்கை

கொழும்பு, டிசெ.6

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தை நிறுத்துமாறு இலங்கை அரசிடம் இந்தியா நேரடியாகக் கோருமானால்-

அத்தகைய யுத்தநிறுத்தத்தின் ஏற்பாடுகளை விடுதலைப் புலிகள் இயக்கம் மீறமாட்டாது என்ற உத்தரவாதத்தை இந்தியா தர வேண்டும் என்று இலங்கை பதிலுக்குக் கேட்குமாம்.

-விடயமறிந்த வட்டாரங்கள் கொழும்பில் இவ்வாறு தகவல் வெளியிட்டன.

யுத்தத்தை நிறுத்துமாறு இதுவரை இலங்கையிடம் இந்தியா கோரவில்லை (18 ஆம் பக்கம் பார்க்க)

## கனகராயன்குளம் பகுதி இராணுவத்தினர் வசம்!

கொழும்பு, டிசெ.6

வன்னியில் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினர் வெள்ளிக்கிழமை கனகராயன் குளத்தை கைப்பற்றியுள்ளனர் என்று பாதுகாப்பு அமைச்சுத் தெரிவித்துள்ளது.

ஏ-9 வீதியில் தமது முன்னரங்குகளை விஸ்தரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினர் புளியங்குளத்திலிருந்து கிழக்காக 10 கிலோ மீற்றர் (18 ஆம் பக்கம் பார்க்க)

## கிணறுகளைச் சுத்தம் செய்தல்

வெள்ளப்பெருக்கினால் சகல கிணறுகளும் அசுத்தமடைந்துள்ளன. எனவே, குடிநீர்ப் பாவனைக்குப் பயன்படும் அனைத்துக் கிணறுகளும் இறைத்துச் சுத்தமாக்கப்பட்டு குளோரின் இடப்படவேண்டும்.

கிணறுகளைச் சுத்தம் செய்யும்போது கவனிக்கவேண்டியவை

- கிணறுகளில் நீர்மட்டம் ஓரளவு வற்றிய பின்னரே இறைக்கப்படவேண்டும்.
- கிணற்றில் நீர்மட்டம் உயர்வாகவுள்ளபோது இறைத்தால் வெளியேயுள்ள அசுத்த நீரும் அண்மையிலுள்ள மலக்குழியிலிருந்து கழிவு நீரும் மீண்டும் கிணற்று நீருடன் கலக்கலாம் என்பதுடன் கிணற்று கட்டுமானத் திற்கும் ஆபத்து ஏற்படலாம்.
- பாதுகாப்பற்ற சுற்றுக் கட்டில்லாத கிணறுகளில் நீர் நிறைந்திருக்கும்போது விபத்து மரணங்கள் ஏற்படலாம்.
- எனவே பாதுகாப்பற்ற கிணறுகளுக்கு நிரந்தரமான சுற்றுக் கட்டுகளை அமைத்து அல்லது தற்காலிகமாக தகரம், தடிகள், கிடுகினால் மறைப்பிட்டு பாதுகாப்பானதாக மாற்றுங்கள்

சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம்.

care
அனுசரணை: Care International

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

மலிவு மலிவு

அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு சகல துணி வகைகளும் மிகக் குறைந்த விலையில், சகல ரெடிமெட் ஆடைகளும் மேலதிக விசேட கழிவுடனும் பெற்றுக்கொள்ள 01.12.2008 தொடக்கம் 31.12.2008 வரை விரையுங்கள்!

**லைடன் புடைவை நிலையம்**

410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (பஸ் நிலையம் முன்பாக)

**திருமண சேவை**

*1976 ஆம் ஆண்டு 12இல் செவ்வாய் 20 3/4 பாவமுடைய கனடா சிற்றிசனுடைய மணமகனுக்கும், 1962ஆம் ஆண்டு பிறந்த விவாகரத்து பெற்ற கனடா மணமகனுக்கும், 1976ஆம் ஆண்டு பிறந்த (கதலிக்) B.B.A. முடித்த மணமகனுக்கும் படித்த அழகான மணமகள்கள் தேவை. 1975ஆம் ஆண்டு பிறந்த செவ்வாய்க்குற்றமுள்ள கனடா மணமகளுக்கு படித்த மணமகன் தேவை. டாக்டர்கள், இஞ்சினியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், லிகிதர்கள், வர்த்தகர்கள், பாவம் கூடிய, குறைந்த தகுதியான மணமக்களும் வெளிநாட்டில் பிரஜா உரிமைபெற்ற மணமக்களும் எம்மிடமுள்ளனர்.*

தொடர்பு: கமலக்கண்ணன் திருமண சேவை

இல.171/7, நல்லூர் வடக்கு வீதி, மனோன்மணி அம்மன் கோவிலடி, நல்லூர்.

## மரண அறிவித்தல்

### ஜோசப் ஞானப்பிரகாசம் அரியரட்ணம்

**(FORMERLY STAFF JAFFNA COLLEGE & JOURNALIST ASSOCIATED PRESS AND REUTERS)**



கொழும்பைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஜோ.அரியரட்ணம் அவர்கள் (05.12.2008) வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் - மேரி நேசமணி தம்பதியினரின் ஏகப்புதல்வனும் காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் ஞானம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், சாந்தாதேவியின் அன்புக் கணவரும், ஈவ்லின் வந்தனா (COLOMBO INTERNATIONAL RED CROSS), பிறிசில்லா ரஷ்மி (கொழும்பு), ஜோர்டானா ரூப்மிலா (Teacher, St.John's Parish Nursery), ஜொஹானன் அனுஷ்மன் (DISTRICT OFFICER-'CHA') ஆகியோரின் அன்புத் தந்தையும், சேனக்க பண்டார திசாநாயக்க (HRC, COLOMBO), பரமநாதன் ரூபேந்திரன் (FORUT COLOMBO) லெனின் கிறெகறி (Bastian Hotel) ஆகியோரின் மாமனாரும் ஏரன் மெல்வின் (SJC), அபிகேல் ரிகேஷா, ஆராதனன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*இல.16,*
*சோமசுந்தரம் அவனியூ,*
*சுண்டுக்குளி.*

(80490)

தகவல்:
குடும்பத்தினர்.

**PANDA Express**
UNIVERSAL COURIER
*No 167, Kasthuriyar Rd, Jaffna.* (Computer Express Building)
Phone : 021 222 8250, 0777 222422

யாழ்நகரில் இருந்து சர்வதேச ரீதியாக இருக்கும் உங்கள் உறவுகளிற்கு வேண்டிய ஆவணங்கள், பொதிகள் என்பவற்றை மிககுறைந்த கட்டணத்தில் உலகின் எந்தநாட்டிற்கும் பாதுகாப்பாகவும் விரைவாகவும் அனுப்பிவைக்கப்படும்

நீங்கள் குறிப்பிடும் முகவரியில் பாதுகாப்பாக ஒப்படைக்கப்படும்

உள்ளத்து அன்பை உறவுகளுடன் பரிமாற PANDA Express

கீழ்குறிப்பிடப்பட்ட இடங்களில் உங்கள் பொதிகள், ஆவணங்கள்ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

**Head Office**
PANDA EXPRESS,
No 30-1/20, W.E.De Silva Mw.
Colombo-06
0112500207

**Jaffna Office**
Computer Express
No 167, Kasthuriyar Rd,
Jaffna.
021 222 8250

**Chavakachcheri Office**
Tharsan Communication
Sangaththanai,
Chavakachcheri.

**Manippai Office**
Thinesh Bake House
180, Jaffna Rd,
Manippai

**Nelliyadi Office**
Computer Express
#07, Kanpollai Lane,
Kodikamam Road,
Nelliyadi.
0777222422

கணக்கியல்துறை ஆர்வலர்களிற்காக!
முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன்!
கம்பனிக்கணக்குகளுடன், VAT இனையும் உள்ளடக்கி
நெல்லியடியிலும், யாழ்நகரிலும்.....

**Diploma in Computerized Accounting**

உங்கள் நிறுவன கணக்குகளை நீங்களே கணனிமயப்படுத்தும்படியான 100% செய்முறைப்பயிற்சியுடன்..

சர்வதேச ரீதியில் முன்னணியிலுள்ள கணக்கியல் மென்பொருட்களான

**Quick Book + ACCPAC + MYOB**

ஆகியவற்றினூடாக கற்பிக்கப்படும்

*Course Contents*
Fundamentals of IT
Manual Accounting
Financial Accounting
Cost Accounting
Taxation (including VAT)
Stock Control
Bank Reconciliation
Budgeting
Fore Casting

நெல்லியடியில் ஆரம்பம்:
09/12/2008, 11/12/2008 10AM
13/12/2008, 14/12/2008 10AM

யாழ்நகரில் ஆரம்பம்:
10/12/2008, 12/12/2008 02PM
13/12/2008, 14/12/2008 10AM

**COMPUTER EXPRESS**
Head Office : #167, Kasthuriyar Rd, Jaffna
Branch : #07, Kanpollai Lane,
Kodikamam Rd, Nelliyadi
Phone : 0212228250 / 0777222422

## கல்விடிப்ளோமா கற்கைநெறி 12ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.6

இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய நிலையத்தால் நடத்தப்படும் பட்ட மேற்கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்கான நாள்பாடசாலை வகுப்பு நாளை நடைபெறாது.

எதிர்வரும் 12 ஆம் 14ஆம் திகதிகளில் நடைபெறும் என இணைப்பாளர் அறிவித்துள்ளார். (1)

## யாழ்.இந்து ஆரம்பப்பாடசாலை பரிசளிப்பு விழா இன்று

யாழ்ப்பாணம், டிசெ.6

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் வே.ஞானகாந்தன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(சிறப்பிதழ் 8ஆம் 9ஆம் பக்கங்களில்)

## வாழும் கலைப் பயிற்சி

யாழ்ப்பாணம், டிசெ.6

வாழும்கலைப் பயிற்சியை ஏற்கனவே மேற்கொண்டவர்களை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் ஒன்றுகூடுமாறு வாழும்கலை நிலையத்தினர் கேட்டுள்ளனர். (1)

## உயர் தொழில் நுட்ப நிறுவன அரையாண்டுப் பரீட்சை

யாழ்ப்பாணம், டிசெ.6

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள் இன்று ஆரம்பமாகி 10 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கின்றன.

இந்தப் பரீட்சைகள் கடந்த் 26 ஆம் திகதி ஆரம்பமாகி மூன்று தினங்கள் இடம்பெறவிருந்தன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணையை நிறுவன அறிவித்தல் பலகையில் பார்வையிடலாம் என்று நிறுவனப் பணிப்பாளர் கே.கதிரமலை தெரிவித்தார். (1)

## அவைக்காற்று நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.6

வட இலங்கை சங்கீத சபையின் அவைக்காற்று நிகழ்வு இன்று தொடக்கம் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நடைபெறவிருக்கின்றது என்று சபையின் தலைவரான யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (1)

## மரண அறிவித்தல்கள்

### சிதம்பரப்பிள்ளை மகாலிங்கம்



திக்கரை, களபூமியை வசிப்பிடமாகக் கொண்ட சிதம்பரப்பிள்ளை மகாலிங்கம் நேற்று (05.12.2008) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - பூமணி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சிவகாமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் அன்னைலட்சுமியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.12.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தில்லை மயானத்தில் தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*திக்கரை, களபூமி,*
*காரைநகர்.*

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

### V.R.சுந்தரம்பிள்ளை பாலேந்திரா

(ஓய்வுபெற்ற தபாலதிபர்)



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் தலையாழியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட V.R.சுந்தரம்பிள்ளை பாலேந்திரா நேற்றுமுன்தினம் (04.12.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான V.R.சுந்தரம்பிள்ளை - சிவக்கொழுந்து தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான கனகசபை - அழகுசுந்தரம் தம்பதியினரின் அன்பு மருமகனும் புஸ்பராணியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) அன்புக் கணவரும், சுரேஸ், செந்தில்குமார், சுகந்தி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் மோகினி, கலையரசி, மயூரன் (நியூ கமல் செரமிக்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் லோகநாதன் (ஓய்வுபெற்ற நில அளவை அத்தியட்சகர்), குணவதி, சோதிமதி, வைத்திய கலாநிதி குணபூஷணம் (மலேசியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சிவபாக்கியம், வைத்திய கலாநிதி தர்மலிங்கம் (கொழும்பு), சிவசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற புகையிரத நிலையத் தொலைத்தொடர்பு அத்தியட்சகர்), வைத்திய கலாநிதி ஜெயரட்ணம் (மலேசியா), நீலாயதாட்சி, கனகலக்ஷ்மி ஆகியோரின் அன்பு மைத்துனரும் பிரதீபன், ராகுல், காலஞ்சென்ற சாம்பவி மற்றும் சுரேக்கா, அனோஜன், அபிஷா, கிஷானி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.12.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*76, சபாபதி வீதி,*
*தலையாழி, யாழ்ப்பாணம்.*
T.P.: 0776622122, 0775359103

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் சதாசிவம்



புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சதாசிவம் நேற்று (05.12.2008) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - இராசம்மா தம்பதியினரின் ஏகபுத்திரனும், காலஞ்சென்றவர்களான சின்னப்பு - சின்னம்மா தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்ற பராசக்தியின் அன்புக் கணவரும் நாகேஸ்வரி, மகேஸ்வரி, கெங்காலக்சுமி, மகேந்திரராசா, ஆறுமுகராசா ஆகியோரின் அன்புத் தந்தையும் மாரிமுத்து, நவரெத்தினம், சண்முகலிங்கம், சரோஜா, இந்திரா ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2008) சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புளியங்கூடல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புளியங்கூடல்.

தகவல்:
ஆறுமுகராசா (மகன்),
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

### திருமதி வள்ளியம்மை கனகசபை



கருகம்பனையைப் பிறப்பிடமாகவும் C1-G2 சொய்சா புர பிளாட்ஸ், மொறட்டுவையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி வள்ளியம்மை கனகசபை 02.12.2008 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சு.கனகசபையின் (இளைப்பாறிய கிராம அலுவலர்) அன்பு மனைவியும், கேசவமூர்த்தி(கொழும்பு), மகேந்திரன்(முன்னாள் நெறியாளர் சபை உறுப்பினர், தெ.ப.நோ.கூ. சங்கம்), ஜெயேந்திரன் (கனடா), அருந்தவராணி(கொழும்பு), வசந் தினி(கனடா), அனுராதா(லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சித்திரா(ஆசிரியை, உரும்பிராய் இந்துக்கல்லூரி), ரஞ்சினி(கனடா), கார்த்தவீரியன் (கனடா), யோகேஸ்வரன்(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், அருண்முகன் (யாழ்.இந்துக்கல்லூரி), விதுரா(கனடா), சிஷாந்(கனடா), காயத்திரி(கனடா), தேனுகா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பத்மாவதி, பொன்னுத்துரை, நவரத்தினம், புவனேஸ்வரி பொன்மயிலைநாதன், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், குமரேசபிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.12.2008) ஞாயிற்றுக்கிழமை கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் பி.ப 3மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*[illegible]வென் தெற்கு, சுன்னாகம்.*
T.P. 0602153537, 077 3145678

தகவல் :
மகேந்திரன்
(மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# பயங்கரவாதத்தை ஒடுக்க முன்னர் அதன் தோற்றுவாயை அழியுங்கள்!

''கெடுகுடி சொற் கேளாது'' - என்பர். அப்படித்தான் நிற்கிறது கொழும்பு அரசும்.

யுத்தத்தை நிறுத்தும்படி யார் சொன்னாலும் கேட்கப் போவதில்லை என்று அடம் பிடிக்கின்றது அது.

'முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா' - என்பது போல போர்வெறித் தீவிரத்தில் முனைப்புக் கொண்டு நிற்கும் பௌத்த - சிங்களப் பேரினவாதம், ஈழத் தமிழர்களை ஆயுத முனையில் அடக்கி, ஒடுக்கி, சங்காரம் செய்த பின்னர் தான் மிச்சம் எதுவும் என்று சன்னதம் ஆடுகின்றது.

*''யுத்தத்தை நிறுத்தி, புலிகளுடன் அமைதிப் பேச்சை மேற்கொள்ளுமாறு பல தரப்புகளிடமிருந்தும் அழுத்தம் வருகின்றது. ஆனால், நாம் எந்த அழுத்தத்துக்கும், சவாலுக்கும் அடிபணிய மாட்டோம். யுத்தம் நிறுத்தப்பட மாட்டாது.''* என்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவே இலங்கை அரசின் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் அறிவித்துவிட்டார்.

இலங்கையில் தமிழர் தாயகம் மீது கொழும்பு அரசு தொடுத்திருக்கும் யுத்தத்தை உடனடியாக நிறுத்தச் செய்து, அமைதித் தீர்வுக்கான சமாதானப் பேச்சுகளை உடன் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை தமிழகத்தில் வலுத்து வருகின்றது.

இது தொடர்பான தமிழகத்தின் ஒட்டுமொத்த நிலைப்பாடு தமிழக சட்டசபையில் ஏகமனதான தீர்மானமாக நிறைவேற்றப்பட்டுள்ள பின்னணியில், தமிழகத்தின் பல கட்சிப் பிரமுகர்களும் இவ்விடயம் சம்பந்தமாக தமது ஏகோபித்த வற்புறுத்தலை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை நேரில் சந்தித்து வெளியிட்டிருக்கின்றனர். இதனையடுத்து, யுத்தத்தை நிறுத்துமாறு இலங்கை அரசை வற்புறுத்துவதற்காக தமது விசேட பிரதிநிதியாக இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜியைக் கொழும்புக்கு அனுப்புவதற்கு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தீர்மானித்திருக்கின்றார்.

இலங்கைக்கு வருகை தரவிருக்கும் இந்திய வெளிவிவகார அமைச்சர் முகர்ஜி, இங்கு யுத்தத்தை நிறுத்துமாறு கோரும் வற்புறுத்தலை இந்திய மத்திய அரசின் நிலைப்பாடாக முன்வைப்பாரா அல்லது தமிழகத்தின் அழுத்தத்தை எடுத்து வந்து கொழும்புக்குத் தெரிவிக்கும் புதுடில்லியின் வெறும் செய்தியாளராக - தூதுவராக - மட்டுமே செயற்படுவாரா என்பது தெரியவில்லை.

எந்த நிலைப்பாட்டை அவர் வெளிப்படுத்தப் போகின்றார் என்பதைப் பொறுத்திருந்துதான் நாம் பார்க்கவேண்டும்.

ஆனால், யுத்தத்தை நிறுத்துவதற்கு வலியுறுத்த இந்திய வெளிவிவகார அமைச்சர் இங்கு வரவிருக்கின்றார் என்ற தகவல் நேற்றுமுன்தினம் புதுடில்லியில் கசியத் தொடங்கியதுமே அதற்கு உடனடியாகவே இலங்கை நாடாளுமன்றத்தில் வைத்து பிரதமர் மூலம் பதிலடி தந்துவிட்டது கொழும்பு அரசு.

அழுத்தம் எந்தப் பக்கத்தில் இருந்து வந்தாலும் எமக்குக் கவலையில்லை. யுத்தத்தை நாம் நிறுத்த மாட்டோம் - என்பதை பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா இவ்வாறு விரைந்து - இவ்வாறு தடிப்பாக - சூளுரைத்தமை இந்தியாவுக்கான பதிலடியன்றி வேறில்லை.

''பயங்கரவாதிகளான புலிகளை அழித்த பின்னர்தான் மறுவேலை. பயங்கரவாதம் தோற்கடிக்கப்படும் வரை யுத்தம் தொடரும்'' - என்று அடித்துக் கூறியிருக்கின்றார் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா.

புலிகள் மேற்கொள்வது பயங்கரவாதமா, விடுதலைப் போராட்டமா என்பது வேறுவிடயம். பிரதமர் கூறுகின்றமை போல் அதைப் பயங்கரவாதமாகக் கொண்டாலும் கூட, அது அரச பயங்கரவாதத்தின் பெறுபேறேயன்றி - பின்விளைவேயன்றி - வேறில்லை என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

ஆகவே, பிரதமர் கூறும் பயங்கரவாதத்தை அடக்குவதாயின், அதற்கு முதலில் அதன் தோற்றுவாயான அரச பயங்கரவாதத்தை அடக்கி, ஒடுக்கவேண்டும்.

தமிழர் தாயகம் எங்கும் அரச பயங்கரவாதமும், அராஜகமும், ஆக்கிரமிப்பும் கட்டவிழ்ந்து தறிகெட்டு அட்டகாசமாகப் பெருக்கெடுத்து ஓடுகையில், பயங்கர வாதத்தை அடக்குவது குறித்து அரசின் பிரதமர் உபதேசம் செய்கின்றமை 'யாரோ வேதம் ஓதுவது போல' தோற்றுகின்றது.

முப்பது ஆண்டுகளுக்கு மேல் தங்களது உரிமைகளுக்காக - நீதிக்காக - நியாயம் வேண்டி - அமைதி வழியில் போராடினார்கள் தமிழர்கள். ஆனால், பௌத்த - சிங்களப் பேரினவாத மேலாதிக்கம் அவர்களுக்கு நியாயம் செய்யவில்லை. அது மட்டுமல்ல, சிங்களப் பேரினவாதத்தின் ஆட்சித்துறையின் ஆயுத பலம் தமிழ் மக்களின் 'அஹிம்சையை' நொருக்கி, சின்னாபின்னமாக்கியது. ஒடுக்கு முறையாளர்களின் வன்முறை ஒடுக்கப்பட்டவர்களின் சாத்வீகத்தை அடக்கி ஒடுக்கிய குரூரம் தொடர்ந்து அரங்கேறியது.

இந்த வரலாற்று நிகழ்வு - அனுபவப் பட்டறிவு - தமிழ் தேசியப் போராட்டம் ஆயுத வழிக்குத் திரும்புவதற்கு தோற்றுவாயாக அமைந்தது என்பது கண்கூடு.

இனக் காழ்ப்புணர்வில் ஊறிப் போயிருக்கும் கொடிய அடக்குமுறையாளரின் இராணுவ அதிகாரத்தின் முன்னே, தமிழ் மக்கள் வெறும் சாத்வீக அணுகுமுறையின் தார்மீகப் பலத்தோடு எதிர்த்து நிற்பது சாத்தியமற்றது என்ற பாடமே அவர்களை இன்று இந்த வழியை நாட வைத்தது என்பது வரலாற்று உண்மை.

அஹிம்சை முறையில் - சாத்வீக நெறியில் - காந்தீயப் பாதையில் - அறவழியில் - தமிழர்கள் போராட்டம் நடத்திய போது நீதியோ, நியாயத் தீர்வோ வழங்காமல், 'அரச பயங்கரவாதம்' மூலம் அதை அடக்கி, ஒடுக்கி, தமிழர்களை ஆயுதப் போராட்டத்தைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைக்கு நெட்டித் தள்ளிய சிங்களத் தலைமைகள், இப்போது தமிழரின் ஆயுதப் பேராட்டத்தைப் பயங்கரவாதமாகச் சித்திரித்து, அந்தப் பயங்கரவாதத்தை அழித்த பின்னர் நியாயத் தீர்வு வழங்குவோம் என்று கூறுவது கேலிக்குரியது; அபத்தமானது.

# பிள்ளைகளின் திருட்டுச் செயலுக்கு உடந்தை எனச் சந்தேகிக்கப்படும் தாயார் கைது

வலி.வடக்கு, டிசெ.6

பிள்ளைகளின் திருட்டு நடவடிக்கைளுக்கு உடந்தையாக இருந்த சந்தேகத்தின் பேரில் நான்கு பிள்ளைகளின் தாயார் சுன்னாகம் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுன்னாகம் மின்சாரசபைக்கு அருகாமையில் உள்ள ஆலய உண்டியலை உடைத்த குற்றச்சாட்டின் பேரில் சுழிபுரம் பகுதியைச் சேர்ந்த 11, 15 வயது சிறுவர்கள் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு பொலிஸில் ஒப்படைக்கப்பட்டனர். இச்சிறுவர்கள் நன்னடத்தைப் பாடசாலையில் நீதிமன்றப் பணிப்பின் பேரில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

இதனைத் தொடர்ந்து பொலிஸார் இச்சிறுவர்களின் தாயாரைக் கைது செய்து மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்தனர். அவரை நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன் இரண்டு வார காலத்திற்கு விளக்கமறியலில் வைக்கும்படி கட்டளையிட்டார். (202-86)

# முறைசாராக் கல்விப் பிரிவின் கற்கை நெறிகள் மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.6

யாழ். கல்வி வலய முறைசாரா கல்விப் பிரிவினால் நடத்தப்பட்டு வந்த கணக்காய்வு, சமூக முகாமைத்துவ பயிற்சி நெறிகள் மீண்டும் ஆரம்பமாக வுள்ளன.

இந்தக் கற்கைநெறிகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை வழமை போல் நடைபெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (204)

# கழிவுப் பொருள்களை சேகரித்து அகற்றும் தொட்டிகள் இல்லை

யாழ்ப்பாணம், டிசெ.6

தென்மராட்சிப் பகுதியில் பொது இடங்களில் கழிவுப்பொருள்கள் சேகரிக்கக்கூடிய தொட்டிகள் இல்லையென முறையிடப்படுகின்றது.

அரச அலுவலகங்கள், பாடசாலைகள், பொதுக்கிராமிய வைத்தியசாலைகள், பிரதேசசபை, நகரசபை, பொது ஆதாரவைத்திசாலை ஆகியன பொது மக்கள், மாணவர்களுக்கு பல சேவைகளை வழங்குகின்றன.

பொதுமக்களின் சுகாதார சேவைகளை மேம்படுத்தும் வகையில் கழிவுப் பொருள்களை சேகரித்து அகற்றக் கூடிய தொட்டிகள் இல்லை எனக் குறிப்பிடப்படுகின்றது.

இது தொடர்பாக உயர் அதிகாரிகள் கவனம் எடுத்து உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு கழிவு அகற்றும் தொட்டிகளை அமைக்க ஆவன செய்தல் வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# தென்மராட்சியில் ஆசிரியர்களுக்கு செயலமர்வுகள்

யாழ்ப்பாணம், டிசெ.6

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் அடுத்த வருடம் (2009) தரம் 6,7,8,9,11 ஆகிய வகுப்புகளில் பின்வரும் பாடங்கள் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் நடைபெறவுள்ளதாக என வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். எதிர்வரும் செவ்வாய்க் கிழமை தரம் 8 வகுப்புகளில் ஆங்கில பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலும் தரம் 6,7,8 ஆகிய வகுப்புகளில் சங்கீத பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் தரம் 8 வகுப்புகளில் விஞ்ஞான பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் சாவகச்சேரி மகளிர் கல்லூரியிலும் எதிர்வரும் புதன்கிழமை விசேட கல்வி ஆசிரியர்களுக்கு நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்திலும் - எதிர்வரும் 14 ஆம் திகதி தரம் 8 வகுப்புகளில் சுகாதாரமும் உடற் கல்வியும் பாட ஆசிரியர்களுக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் தரம் 9,10,11 ஆகிய வகுப்புகளில் சங்கீத பாடம் கற்பிக்கும் தரம் 10,11 வகுப்புகளில் விஞ்ஞான பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் சாவகச்சேரி மகளிர் கல்லூரியிலும் செயலமர்வுகள் நடத்தப்படும் என அறிவித்துள்ளார். (202-207)

# அச்சுவேலியில் பரீட்சை நிலையம் மாற்றம்

யாழ்ப்பாணம், டிசெ.6

எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாக இருக்கும் ஜி.சீ.ஈ. (சாதாரண) பரீட்சைக்காக அமைக்கப்பட்ட அச்சுவேலி புனித திரேசா மகளிர் கல்லூரி மண்டப இலக்கம் II அச்சுவேலி மத்திய கல்லூரி மண்டப இலக்கம் II இற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

அச்சுவேலி புனித திரேசா மகளிர் கல்லூரி மண்டப இலக்கம் II இல் தோற்றவுள்ள பரீட்சார்த்திகள் இம் மாற்றத்துக்கமைய தோற்றுமாறு அவர் கேட்டுள்ளார். (1)

# கலை, கலாசாரப் போட்டி

கோப்பாய், டிசெ.6

யாழ்.மாவட்டத்தில் நடைபெறவுள்ள கைத்தொழில் கல்வி கண்காட்சிக்காக ஒவ்வொரு பிரதேச செயலக் பிரிவு ரீதியாக கலை, கலாசார போட்டி நடத்தப்படவுள்ளது.

இப்போட்டியில் வலி.கிழக்கு பிரதேசத்தில் இப்பிரிவிற்குட்பட்ட 15-30 வயதிற்கிடைப்பட்ட இருபாலாரும் பங்குபற்றலாம்.

சுயவிவரங்களுடன் விண்ணப்பங்களை எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்பாக பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு கோப்பாய் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் கேட்டுள்ளார்.

மேலதிக விவரங்களைப் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெறலாம். (202-72)

# உள்ளூராட்சி உதவியாளர்களுக்குப் பதவி உயர்வு

யாழ்ப்பாணம், டிசெ.6

உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் உள்ளூராட்சி உதவியாளர்கள் நகர சபை, பிரதேசசபை ஆகிய வற்றுக்குசெயலாளர்களாக நியமிக்கப் பட்வுள்ளனர்.

இதற்கான விண்ணப்பம் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரினால் கோரப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி சபைகளில் நிலவும் செயலாளர் பதவி வெற்றிடங்களை தகைமையுள்ள உள்ளூராட்சி உதவியாளர்கள் மூலம் நிரப்புவதற்கு மாகாண ஆளுநர் அங்கீகாரம் வழங்கியுள்ளார்

நேர்முகப் பரீட்சைமூலம் கிடைக்கும் புள்ளிகளின் அடிப்டையில் செயலாளர் பதவிக்கு நியமிக்கப்படுவர். விண்ணப்பங்களை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்துள்ளார். (202, 207)

# இருமணி நேரம் காலையில் மின் வெட்டு

யாழ்ப்பாணம், டிசெ.6

குடாநாடு முழுவதும் இன்று காலை 10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை மின்தடை நடைமுறையில் இருக்கும் என்று மின்சார சபையின் பிராந்திய அலுவலகம் அறிவித்துள்ளது.

அவசர திருத்த வேலைகள் காரணமாகவே மின்தடை நடைமுறைப் படுத்தப்படுவதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (1)

# பொஸ்கோவில் நாளை மாணவர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.6

யாழ்.சென். பொஸ்கோ வித்தியாலயத்தின் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இ.இராஜசூரி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயமும் சிறப்பு விருந்தினர்களாக வணிகமுகாமைத்துவ பீடாதிபதி க.தேவராசா, யாழ். கோட்டக் கல்வி அதிகாரி திருமதி வ. சிவபாலன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக யாழ். பல்கலைக் கழக கிறிஸ்தவ நாகரிகத்துறை விரிவுரையாளர் அருட்தந்தை ஜி.லி. பிலேந்திரன், புதிய உயர்கல்லூரி பணிப்பாளர் திருமதி ச.அருள்நங்கை ஆகியோர் கலந்துகொள்வர். (1)

# நிகழ்வுகள்

பருத்தித்துறை, டிசெ.6

பருத்தித்துறை தும்பளை நேசகம் மெதடிஸ்த சிற்றாலயத்தின் 18ஆவது ஆண்டு நிறைவு விழா, நன்றி செலுத்தும் விழா, நேசகம் இல்லச் சிறார்களின் ஒளிவிழா என்பன இன்று காலை 9 மணிக்கு பருத்தித்துறை முகாமைக் குரு டி.அழகராஜா தலைமையில் நடைபெறவுள்ளன. (202-236)

* * *

யாழ்ப்பாணம், டிசெ.6

யாழ்.வலயத்திற்குட்பட்ட சகல பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும் என வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இந்தக் கூட்டத்திற்கு இலவச பாடநூல் பற்றாக்குறை அல்லது மேலதிகம் போன்ற விவரங்களைக் கொண்டு வருவதுடன், அதனைத் தொடர்ந்து ஏற்கனவே பாடசாலை மட்ட திட்டமிடலில் பங்குபற்றிய 25 பாடசாலை அதிபர்களுக்கான திட்ட முன்வைப்புக் கலந்துரையாடலும் இடம்பெறும். (204)

* * *

யாழ்ப்பாணம், டிசெ.6

அகவொளிகுடும்ப வள நிலையத்தில் வன்முறையற்ற தொடர் பாடல் பயிற்சி நெறியில் கலந்து கொண்டவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் 'இதயம் திறந்த தொடர்பாடல்' நூல்வெளியீட்டு விழாவும் இன்று சனிக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு அகவொளி நிலையத்தில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக் கழக மெய்யியல்துறைத்தலைவர் க.அன்ரன்டயஸ் பிரதம விருந்தினராகவும் மருத்துவபீட உடல் நோயியல் பிரிவு சிரேஸ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் திருமதி எஸ்.ரவிச்சந்திரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (204)

## நாளை

| | |
|---|---|
| கார்த்திகை 22 | 07.12.2008 ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | நவமி மு.ப.09.39வரை |
| நட்சத்திரம்: | உத்தரட்டாதி மு. இ. 10.54வரை |
| [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] |

# முதியோர் பராமரிப்பு சேவைத் தொண்டர்களாக இளைஞர், யுவதிகளுக்குப் பயிற்சி வழங்கப்படும்

நாவற்குழி, டிசெ.6

முதியோர்களை பராமரிக்கும் நோக்கோடு வடக்கு மாகாண சமூகநலத் துறைத் திணைக்களம் பராமரிப்பு சேவைத் தொண்டர்களாக 25 இளைஞர், யுவதிகளை முதற்கட்டமாகத் தெரிவு செய்து அவர்களுக்குப் பயிற்சிகளை வழங்கவுள்ளது.

பயிற்சி பெறும் இத்தொண்டர் கள் தமது சேவைகளை வைத்திய சாலைகளிலும் முதியோர்கள் வசிக்கும் வீடுகளிலும் வழங்கவுள்ளனர்.

இப்பயிற்சி நெறியில் இணைந்து சேவைகளை மேற்கொள்ள விரும்புவோர் தத்தமது பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தரிடம் தமது விண்ணப்பங்களை இம்மாத இறுதிக்குள் சமர்ப்பிக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

இவர்களுக்கான பயிற்சி ஒழுங்கினை சமூகநலத்துறைத் திணைக்களத்தின் மாவட்ட அலுவலர் மற்றும் மாவட்டதிட்ட இணைப்பாளர் ஆகியோர் மேற்கொள்ளவுள்ளனர். (202-288)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கையில்லாப் பிரேரணையை முறியடிக்கும் நாடாளுமன்ற அமர்வுகள் யாவும் ஒத்திவைப்பு!

## கனடா பிரதமர் சுழியோட்டம்

ஒட்டாவா, டிச. 06

கனடா நாடாளுமன்றத்தை ஒத்திவைக்குமாறு அந்த நாட்டின் பிரதமர் ஸ்டிபன் ஹார்பர் விடுத்த வேண்டுகோளை ஆளுநர் நாயகம் மிச்சலி ஜீன் ஏற்றுக்கொண்டுள்ளார்.

இதன் காரணமாக பிரதமரின் அரசு நம்பிக்கையில்லா வாக்கெடுப்பை எதிர்கொள்ளும் அபாயத்திலிருந்து தப்பியுள்ளது.

பிரதமர் ஹார்பரின் கொன்சவேர்ட்டிவ் அரசு வீழ்ச்சியடைந்துள்ள, பொருளாதாரத்தை தூக்கி நிறுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவில்லை எனக் குற்றஞ்சாட்டிய கனடாவின் லிபரல் மற்றும் புதிய ஜனநாயக கட்சிகள் தமக்குள் ஒப்பந்தமொன்றை செய்து கொண்டதுடன் எதிர்வரும் திங்கட்கிழமை நம்பிக்கையில்லா வாக்கெடுப்பை கொண்டு வரத் தீர்மானித்திருந்தன.

இதனைத் தொடர்ந்தே பிரதமர் ஹார்பர் நாடாளுமன்றத்தை ஒத்தி வைக்குமாறு ஆளுநர் நாயகத்தை கேட்டிருந்தார்.

இருவருக்குமிடையிலான பேச்சுக்குப் பின்னர் கனடாவின் நாடாளுமன்றத்தை ஜனவரி 26 ஆம் திகதி இடைநிறுத்தி வைக்க ஆளுநர் நாயகம் இணங்கியுள்ளார்.

பிரிட்டிஷ் மகாராணியின் பிரதிநிதியென கருதப்படும் ஆளுநர் நாயகம் ஜீனிற்கு இது குறித்து இறுதி முடிவெடுக்கும் அதிகாரமுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆளுநரின் அறிவிப்பு வெளியானவுடன் நாடாளுமன்றத்தின் அமர்வுகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டன.

எனினும், எதிர்க்கட்சியான தாராளவாதக் கட்சியின் தலைவர் ஸ்டிபன் டியோன் அரசு, பொருளாதாரம் உட்பட ஏனைய விடயங்களில் பாரிய மாற்றத்தை மேற்கொள்ளாத பட்சத்தில் அதனை கவிழ்ப்பதற்கான முயற்சி தொடரும் என தெரிவித்துள்ளார்.

கனடாவின் வரலாற்றில் பிரதமர் ஒருவர் நாடாளுமன்றத்திலிருந்து அஞ்சி ஓடுவது இது முதல் தடவை என்றும் அக்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

புதிய ஜனநாயகக் கட்சி கனடாவின் துயரமான நாள் என வர்ணித்துள்ளது.

## ஒபாமாவுடன் பேச தயாராகிறது கியூபா

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி பராக் ஒபாமாவுடன் கியூபா பேச்சுகளில் ஈடுபடலாம் என பிடல் காஸ்ட்ரோ தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியை, இரு நாடுகளுக்கும் நடுநிலைமையான நாடொன்றில் சந்திக்கத் தயார் என கியூபாவின் ஜனாதிபதி ரவூல் காஸ்ட்ரோ தெரிவித்துள்ளதை தொடர்ந்து பிடல் காஸ்ரோவின் இந்த சாதகமான சமிக்ஞை வெளியாகியுள்ளது.

ஒபாமா விரும்பும் எந்த இடத்திலும் கியூபா அவருடன் பேச்சுகளை மேற்கொள்ளலாம் என பிடல் தெரிவித்துள்ளார்.

எனினும், கியூபா மக்களின் இறைமையுடன் கூடிய உரிமைகள் விட்டுக்கொடுக்கப்படாதவை என்றும் பிடல்தெரிவித்துள்ளார்.

பராக் ஒபாமா கியூபா அரசுடன் பேச்சுகளை மேற்கொள்ள தயார் என தெரிவித்துள்ளதுடன் அந்த நாட்டின் மீதான பொருளாதாரத் தடையை தளர்த்த தயார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## இடதுசாரி கட்சித் தலைவர் பங்களாதேஷில் மரணம்

பங்களாதேஷ் இடதுசாரிதலைவர் நூருல் இஸ்லாம், தீ விபத்தில் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி வியாழக்கிழமை காலமானார்.

கனதந்திரி கட்சியின் தலைவராக இருந்தவர் நூருல் இஸ்லாம். இம் மாதம் 29 ஆம் திகதி நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலில் அவாமி லீக் கட்சி கூட்டணியில் நூருல் இஸ்லாம் வேட்பாளராக போட்டியிடவிருந்தார்.

அவரது வீட்டில் புதன்கிழமை திடீர் தீ விபத்து ஏற்பட்டது. இதில் எரி காயங்களுக்குள்ளான அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிர் இழந்தார். மின் கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டதாக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் அவரது மரணத்தில் மர்மம் இருப்பதாகவும் இதுபற்றி விசாரணை நடத்தப்படவேண்டும் என்றும் அவரது உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.




## 30 ஆண்டுகளுக்குப் பின்னர்

# ஆப்கான் முன்னாள் ஜனாதிபதியின் உடல் எச்சங்கள் கண்டுபிடிப்பு

காபூல், டிச. 06

கம்யூனிஸ புரட்சியின்போது கொல்லப்பட்ட ஆப்கானிஸ்தானின் முதல் ஜனாதிபதி மொஹமது தாவூத் கானின் உடல் எச்சங்கள் முப்பது ஆண்டுகளுக்குப் பின்னர் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

தலைநகரான காபூலின் புறநகர்ப் பகுதியிலுள்ள இராணுவ தளத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணியின்போது, அரசினால் அமைக்கப்பட்ட ஆணைக்குழுவின் உறுப்பினர்களால் இந்த உடல் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

முஹமது தாவூத் கான்,1973 ஆம் ஆண்டு ஆப்கானின் இறுதி மன்னர் ஷாகீர் ஷாவின் ஆட்சியைக் கவிழ்த்து பதவிக்கு வந்தவர். மீட்கப்பட்ட இவரது உடல் எச்சங்கள் விசேட அரச மரியாதையோடு, அடக்கம் செய்யப்படும் என்று அதிகாரியொருவர் தெரிவித்தார்.

காபூலின் கிழக்கே உள்ள புல்-ஈ-சார்க்கி பகுதியில் அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்



பட்டன. அப்போது இரு பாரிய புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றில் டசின் கணக்கான உடல் எச்சங்கள் கிடந்தன. அவற்றின் மத்தியில் முன்னாள் ஜனாதிபதியின் உடல் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன என்று சுகாதார அமைச்சுப் பேச்சாளரொருவர், ஏ.பி.செய்தி நிறுவனத்துக்கு விவரித்தார்.

1978 ஆம் ஆண்டு தலைதூக்கிய கம்யூனிஸ புரட்சியின்போது ஜனாதிபதி மாளிகைக்குள் அப்போதைய ஜனாதிபதி முஹமது தாவூத் கானும் அவரது 17 குடும்ப உறுப்பினர்களும் மற்றும் சிலரும் படுகொலை செய்யப்பட்டார்கள் என்றும் அவர் விளக்கினார்.

பற்கள், உடல் எச்சங்களுக்கருகிலிருந்த சிறிய தங்க குர்ஆன் ஆகியவற்றின் மூலமாக அவரது உடல் எச்சங்கள் அடையாளங் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவர் சவூதி விஜயத்தை மேற்கொண்ட சமயம் சவூதி மன்னரால் அன்பளிப்புச் செய்யப்பட்டதே இச்சிறிய தங்க குர்ஆன் ஆகும் என்றும் அப்பேச்சாளர் குறிப்பிட்டார்.

1978 ஆம் ஆண்டு இடம்பெற்ற கம்யூனிஸ புரட்சியின்போது, 20 இலட்சம் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 60 இலட்சம் பேர் அண்டை அயல் நாடுகளுக்கு ஓடியுள்ளனர். இது ஆப்கானின் வரலாற்றில் இருள் சூழ்ந்த காலப் பகுதியாக கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் காலப் பகுதி முதல் 10 வருட கால சோவியத் ஆக்கிரமிப்பு, சிவில் யுத்தங்கள், தலிபான்களின் எழுச்சி ஆகியவற்றால் ஆப்கான் சின்னாபின்னமாகச் சிதைந்து வந்துள்ளது.

தாவூத் கான் தமது பதவியின் போது, ஆப்கானை குடியரசு நாடாகப் பிரகடனப்படுத்தினார். பரந்தளவில் மறுசீரமைப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்தினார். சோவியத் ஒன்றியத்துக்கு எதிராக மேற்கத்திய நாடுகளுடனான உதவிகளைக் கட்டி எழுப்பி வந்தார் என அதிகாரியொருவர் நினைவு கூர்ந்தார்.

## ஈராக்கில் கார்க் குண்டுவெடிப்பு 15 பேர் பலி; பலர் படுகாயம்

பக்தாத், டிச. 06

ஈராக்கிய நகரான பளுஜாவில் இடம்பெற்ற இரட்டைக் கார்க் குண்டுத் தாக்குதல்களில் 15 பேர் கொல்லப்பட்டனர். டசின் கணக்கானோர் காயமடைந்தனர். இரு பொலிஸ் காவலரண்களை இலக்கு வைத்து இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன என பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

தாக்குதல்களுக்குள்ளான இரு பொலிஸ் காவலரண்களில் ஒன்று, கோலானுக்கு மேற்கே அமைந்துள்ளது. மற்றொன்று, சூர்ட்டாவுக்கு கிழக்கில் உள்ளது. ஒரு சில நிமிடங்களில் இவ்விரு தாக்குதல்களும் இடம்பெற்றுள்ளன என பாதுகாப்பு அதிகாரியொருவர் ஏ. எப். பி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

குண்டுத் தாக்குதலில் ஒரு பொலிஸ் காவலரண் தரைமட்டமாகிவிட்டது. அருகிலுள்ள அநேக வீடுகளும் சேதமடைந்துள்ளன. காயமடைந்தவர்கள் உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள். பலர் ஆபத்தான கட்டத்திலிருந்தனர் என சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் ஏ.பி. செய்தி நிறுவனத்துக்கு விளக்கினார்.

உடல்கள் இரத்தவெள்ளத்தில் சிதறிக் கிடந்தன. தாக்குதல்கள் நடைபெற்ற இரு பகுதிகளிலும் உடனடியாக ஊரடங்கு அமுலாக்கப்பட்டது. தலைநகரான பக்தாத்தின் மேற்கே 40 மைல் (64 கிலோ மீற்றர்) தொலைவில் பளுஜா அமைந்துள்ளது என்று ஊடகவியலாளர்கள் குறிப்பிட்டார்கள்.

பளுஜா நகர் மேற்கு அன்பார் மாகாணத்தில் உள்ளது. 2003 ஆம் ஆண்டு, ஈராக் மீது அமெரிக்கப் படையெடுத்ததும், இங்குள்ள சுனி தீவிரவாதிகள், அமெரிக்கப் படைகளுக்கு எதிராக மூர்க்கமான தாக்குதல்களை நடத்தி வந்துள்ளார்கள். சமீபகால அமைதிக்குப் பின்னர், மீண்டும் வன்முறைகள் தலைதூக்கியுள்ளன என்று உள்ளூரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## லஷ்கர் - இ - தொய்பாவின் அரசியல் பிரிவை தடை செய்க!

### பாகிஸ்தானுக்கு அமெ. அழுத்தம்

புதுடில்லி, டிச. 06

காஷ்மீரில் முக்கிய தீவிரவாத அமைப்பான லஷ்கர்-இ-தொய்பாவின் அரசியல் பிரிவான ஜமாட் - உட்டவாவை உடனடியாகத் தடை செய்யுமாறு அமெரிக்கா பாகிஸ்தானைக் கேட்டுள்ளது.

பாகிஸ்தானுக்கு விஜயம் மேற்கொண்ட அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொண்டலீசா ரைஸ் பாகிஸ்தான் ஜனாதிபதி அசிவ் அலி சர்தாரியுடனான சந்திப்பின்போது இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

பாகிஸ்தானுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்கக் கடற்படை அதிகாரி அட்மிரல் மைக் முலெனும் இதே வேண்டுகோளை விடுத்துள்ளார்.

லஷ்கர்-இ-தொய்பா அமைப்பின் அரசியல் பிரிவைத் தடை செய்யவேண்டும். அந்த அமைப்பின் தலைவர் ஹபிஸ் முகமட் சயீட்டிற்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அமெரிக்கா கேட்டுள்ளது.

மும்பாய்த் தாக்குதலின் பின்னணியில் பாகிஸ்தானின் உளவுப் பிரிவான ஐ.எஸ்.ஐ. உள்ளதாக இந்தியா மிகவும் உறுதியான ஆதாரங்களைச் சமர்ப்பித்த பின்னரே கொண்டலீசா ரைஸ் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அமெரிக்கா விடுத்துள்ள உறுதியான வேண்டுகோள் இதுவென தெரிவிக்கப்படுகின்றது.

மும்பாய்த் தாக்குதலை பாகிஸ்தானிலிருந்து செயற்படும் லஷ்கர்-இ-தொய்பா அமைப்பே திட்டமிட்டு மேற்கொண்டது எனவும் அமெரிக்கா கருதுகின்றது.

## அமெ. படை நடவடிக்கை ஆப்கானில் தோல்வியாம்

லண்டன், டிச. 06

ஆப்கானில் நிலைகொண்டுள்ள அமெரிக்கக் கூட்டுப் படையினர், தலிபான் தீவிரவாதிகளை ஒழிப்பதில் எதிர்பார்க்கப்பட்ட வெற்றியை ஈட்டவில்லை. இதற்கு அவர்களிடம் குடிகொண்டுள்ள மதுப்பழக்கமே காரணமென ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தப் படையினரால் தலிபான் தீவிரவாதிகளை ஒழிக்க முடியவில்லை. தீவிரவாதிகளின் கார்க் குண்டுத் தாக்குதல், தற்கொலைப் படைத் தாக்குதல், துப்பாக்கிச் சண்டை ஆகியவற்றால் இராணுவத்தினர் ஏராளமானவர்கள் பலியாகியுள்ளனர். ஆப்கான் தீவிரவாதிகளிடம் இராணுவம் தோற்றுப் போவதற்கு இராணுவத்தினரின் போதை பழக்கமும், குண்டு உடலும் தான் காரணம் என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானுக்கு 3,500 வீரர்களை ஜேர்மனி அனுப்பியிருந்தது. அந்த வீரர்கள் அதிகமாக குடிக்கிறார்கள். இவர்கள் கடந்த 1 ஆண்டில் மட்டும் 90 ஆயிரம் போத்தல் வைன் குடித்துள்ளனர். 17 இலட்சம் 'பீர்' காலி செய்துள்ளனர். பாதுகாப்பு பணியில் ஈடுபட்ட நேரத்தை விட போதையில் மயங்கிய நேரம் தான் அதிகம் என தெரிய வந்துள்ளது.

அதுமட்டுமல்ல, உடற்பயிற்சி செய்யாததாலும் வயிறு புடைக்கச் சாப்பிட்டதாலும் உடல்கள் பெருத்து [illegible] என்ற தகவலும் வெளியாகியுள்ளது.

## பெனாஸீர் பூட்டோவுக்கு ஐ.நாவின் சிறப்பு விருது

இஸ்லாமாபாத், டிச. 06

பாகிஸ்தானில் படுகொலை செய்யப்பட்ட முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோவுக்கு ஐநா சார்பில் மனித உரிமை விருது வழங்கப்படவுள்ளது.

ஐ.நா. தலைமையகத்தில் நடைபெறும் விழாவில் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கி மூனிடமிருந்து. இந்த விருதை பெனாஸிரின் மகன் பிலாவல் பெற்றுக்கொள்வார்

பாகிஸ்தானில் மீண்டும் ஜனநாயகத்தை ஏற்படுத்துவதற்காக பெனாஸிர் நடத்திய போராட்டங்களை கௌரவிக்கும் பொருட்டு, 2008 ஆம் ஆண்டுக்கான ஐ.நா. மனித உரிமை விருது அவருக்கு, மரணத்துக்குப் பின் வழங்கப்படுகிறது. இந்த விருது வழங்கும் விழா வரும் 10 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.மாநகரசபை எல்லைக்குள்

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் குடிதண்ணீர் தொட்டிகள் அமைத்து நீர் விநியோகம்

## நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என ஆணையாளர் தகவல்

நல்லூர்,டிசெ.6

கடந்த வாரம் குடாநாட்டில் ஏற்பட்ட 'நிஷா' சூறாவளி, வெள்ளப்பெருக்கு என்பவற்றால் குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவியது. இதனை நிவர்த்தி செய்யும் நோக்கில் யாழ்.மாநகரசபை எல்லைக்குள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் குடிதண்ணீர்த் தொட்டிகளை அமைத்து நீரை விநியோகிக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இத்தகவலை யாழ்.மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கிணறுகள் வெள்ளத்தினால் மூடப்பட்டுள்ளதால் பொதுமக்கள் அந்த நீரைப் பயன்படுத்துவது தொற்றுநோய்கள் ஏற்பட ஏதுவாகும். யாழ்.நகரின் சுகாதார சேவைகளை யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளருடன் இணைந்து செயற்படுத்தவுள்ளோம்.

இடம்பெயர்ந்து 18 பாடசாலைகளில் தங்கியுள்ள மக்களுக்கும் வன்னியில் இருந்து வந்து முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கும் குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொண்டுள்ளோம். பாத்திரங்களில் தண்ணீரை நிரப்பிக் குளிப்பதற்கு முன் அந்த நீரைச் சுத்தமாக ஆக்கக்கூடிய குளிகைகள் வழங்கும் செயற்பாடுகளும் யாழ்.மாநகர சபை சுகாதாரப் பகுதியின் மருத்துவ உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படுகின்றன. இக்குளிகைகளை நீரில் போட்டு 30 நிமிடத்தின் பின் குளிப்பதற்குப் பயன்படுத்தமுடியும். துர்நாற்றம் வீசும் இடங்களில் உரிய மருந்துகள் தெளிக்கும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டுள்ளது - என்றார். (202-111)

## சண்டிலிப்பாய் செயலகமும் சேதம்

நவாலி,டிசெ.6

'நிஷா' சூறாவளி, மழை என்பவற்றால் சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் மீது மரங்கள் வீழ்ந்துள்ளதால் அதன் இரு பகுதிக் கூரைகள், கட்டடங்கள் சேதமடைந்துள்ளன.

மேலும் தொலைபேசிக் கேபிள்கள் பாதிக்கப்பட்டதுடன் கணனி உபகரணங்கள் என்பனவும் பெரும் சேதமடைந்துள்ளன.

இதனால் காரியாலய வேலைகளை உடன் செய்து முடிப்பதில் பல தடங்கல்கள் ஏற்பட்டுள்ளன. (202-100)

## சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 11,199 குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.6

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேசத்தில் இதுவரை 11 ஆயிரத்து 199 குடும்பங்களைச் சேர்ந்த 42 ஆயிரத்து 336 பேர் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பிரதேசத்தில் 2 பேர் இறந்தும், 2 ஆயிரத்து 101 வீடுகள் முழுமையாகவும் 5 ஆயிரத்து 117 வீடுகள் பகுதியாகவும் சேதமடைந்துள்ளன.

பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள 24 நலன்புரி நிலையங்களில் மூவாயிரத்து 818 குடும்பங்களைச் சேர்ந்த 16 ஆயிரத்து 138 பேர் தங்கியிருந்தனர் எனவும் புள்ளி விவரங்கள் மூலம் தெரியவருகின்றது.

தற்போது கிராமசேவகர்களினூடாக அந்தந்தப் பிரிவில் ஏற்பட்ட சேதங்கள் பதியப்பட்டு வருவதாகவும், முதற்கட்டமாக முற்றாகச் சேதமடைந்த வீடுகளுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக இந்தப் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (204-112-100)

## கச்சாய் நூலகத்தின் நூல்கள் சேதம்

யாழ்ப்பாணம்,டிசெ.6

சாவகச்சேரி பிரதேச சபை கச்சாய் பொதுநூலகத்துள் வெள்ளம் புகுந்ததால் சுமார் ஆயிரத்திற்கு மேற்பட்ட பயன்தரு நூல்கள் வெள்ளத்துள் அமிழ்ந்து, நனைந்து சேதமடைந்துள்ளன என பொது நூலக நூலகர் திருமதி சாந்தினி பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

இரவுவேளை வெள்ளம் நூலகத்துள் புகுந்து சேதத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதனையடுத்து பொது நூலக உத்தியோகத்தர்கள் நனைந்த நூல்களை சூரிய வெளிச்சத்தில் காயவைத்து வருகின்றனர். (202-131)

## தென்மராட்சியில் வெள்ளத்தால் 13,122 குடும்பங்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.6

தென்மராட்சி பிரதேசத்தில் இதுவரை 13 ஆயிரத்து 122 குடும்பங்களைச் சேர்ந்த 41 ஆயிரத்து 692 பேர் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 30ஆம் திகதி நண்பகல் வரை தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு கிடைத்த தகவல்களின்படி இவ்விவரங்கள் தெரியவருகிறது.

மேலும் பிரதேசத்தில் ஆயிரத்து 879 வீடுகள் முழுமையாகவும் 4 ஆயிரத்து 629 வீடுகள் பகுதியாகவும் சேதமடைந்துள்ளன.

பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள 55 நலன்புரி நிலையங்களில் 20 ஆயிரத்து 841 பேர் தங்கியிருந்தனர் எனவும் புள்ளிவிவரங்கள் மூலம் தெரியவருகிறது.(202-207)

## தென்மராட்சி கிழக்கில் பெரும் அழிவு

யாழ்ப்பாணம்,டிசெ.6

கடந்தவாரம் குடாநாட்டை உலுக்கிய ''நிஷா'' என்ற சூறாவளியுடன் கூடிய மழை தென்மராட்சி கிழக்குப் பகுதியிலும் பெரும் அழிவுகளை ஏற்படுத்தியுள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபையின் கச்சாய் உபபணிமனையின் சுற்றுமதிலின் வடக்குப் பகுதிச் சுவர் இடிந்து நிலத்தில் வீழ்ந்து சேதமடைந்துள்ளது.

வரணி பொதுநூலகத்தில் பனைமரம் வேருடன் சாய்ந்து வடக்குப்பக்க வேலியின் மீது வீழ்ந்துள்ளது. வரணி உபபணிமனையின் வாசல் பக்கத்தில் நின்ற நீண்டகாலத்தைக் கொண்ட சஞ்சீவி மரமொன்று வேருடன் சாய்ந்துள்ளது எனச் சாவகச்சேரி பிரதேசசபைச் செயலாளர் வே.சிவராஜலிங்கம் தெரிவித்தார். (202-131)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 'சோஆ' நிறுவனம் பொருள் உதவி

கோப்பாய்,டிசெ.6

'சோஆ' தொண்டு நிறுவன அமைப்பினால் வெள்ளத்தினால் பாதிப்புற்ற பல்வேறு பிரதேச மக்களுக்கு நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

தெல்லிப்பழை, மருதங்கேணி, உடுவில் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் ஆயிரத்து 300 குடும்பங்களுக்குத் தலா 3 ஆயிரத்து 500 ரூபா பெறுமதிக்கு மேற்பட்ட 21 வகையான உணவல்லாத பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் உடுவில், தெல்லிப்பழை, அல்லைப்பிட்டி, மணற்காடு ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள முகாம்களில் தங்கியுள்ள 1200 குடும்பங்களுக்கு குடும்ப உறுப்பினர் ஒருவருக்கு ஆயிரத்து 200 ரூபாவிற்கு மேற்பட்ட பெறுமதியுடைய உலருணவுப் பொதிகளும் விநியோகிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (202-72)

## பாலைதீவுக் கரையில் சுறாமீன் ஒதுங்கியது

வண்ணை,டிசெ.6

பாலைதீவுக் கரையோரம் 25 அடி நீளமான பாரிய சுறாமீன் கரையொதுங்கி இருப்பதாக நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பாலைதீவுக்குக் கடற்தொழில் செய்யச் சென்ற மீனவர்கள் தெரிவித்தனர்.

கடந்த வாரம் குடாநாடு தழுவிய அளவில் வீசிய 'நிஷா' புயலின் தாக்கத்திற்குட்பட்டு மேற்படி பாரிய சுறாமீன் செத்துக் கரையொதுங்கி இருக்கலாமென அவர்கள் கூறினர்.

பழுதடைந்த நிலையில் கரையொதுங்கிய சுறாமீனின் பாகங்கள் கழுகு போன்றவற்றின் உணவுக்குக்கூடப் பயன்படாமல் கிடப்பதாகக் கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர்.

ஒரேநாளில் சென்று தொழில் பார்த்துக்கொண்டு, அதேநாளில் மாலைக்கு முன்பதாகத் திரும்பிவிடவேண்டிய நிலைமையில் அதனை மண்ணில் புதைக்கும் நேரங்கள் அவர்களுக்கு இல்லை.

காலக்கிரமத்தில் அழுகி பாரிய முள்ளுகளின் எச்சங்களே மிஞ்சு மெனவும் தெரிவித்தனர். (202-160)

## நெடுந்தீவுச் சங்கத்தின் 'உதயதாரகை' சேதம்

நல்லூர்,டிசெ.6

நெடுந்தீவு பல நோ.கூ. சங்கத்திற்குச் சொந்தமான 'உதயதாரகை' படகு கடந்த வாரம் இடம்பெற்ற மழையினாலும் பலத்த காற்றினாலும் சேதமடைந்துள்ளது.

மழைநீர் படகின் உட்புகுந்த நிலையில் உதயதாரகை நீரில் மூழ்கியது.

இதேசமயம் சங்கத்தின் மற்றொரு படகான சமுத்திராதேவியும் சிறிது சேதத்திற்கு உள்ளானது. (202-111)

## பாம்புகள் மரங்களில்

யாழ்ப்பாணம்,டிசெ.6

தென்மராட்சிப் பிரதேசத்தில் அண்மையில் ஏற்பட்ட பெருவெள்ளத்தினால் பாம்புகள் மரங்களில் தங்கியுள்ளதாகப் பொதுமக்கள் தெரிவித்தனர்.

காணிகளில் வெள்ளம் தேங்கி நின்றதால் பாம்புகள் மரங்களில் ஏறியிருப்பதாகவும், இதனால் பறவை இனங்கள் மரங்களில் தங்கமுடியாமல் வீதியோரங்களில் நிற்பதாகக் கூறினர்.

இதேவேளை குளங்களில் தங்கியிருந்த முதலைகள் குடியிருப்புப் பகுதிகளுக்குள் நடமாடுவதாகவும் தெரிவிக்கப்பட்டது, பகல்வேளைகளில் சனநடமாட்டம் குறைந்த வீதிகளில் படுத்திருப்பதாகவும் இரவுவேளைகளில் குடியிருப்புப் பகுதிகளுக்கு இரைதேடி வருவதாகவும் தெரிவித்தனர்.

இதேவேளை பிரதேசத்தில் உள்ள காடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் காட்டுப் பன்றிகள் கிராமங்களுக்குள் சென்று அழிவுகளை ஏற்படுத்தி வருவதாகவும் கூறுகின்றனர். (202-207)

## நாவலடி அ.த.க.பா. மதில் வீழ்ந்தது

காற்றுடன் கூடிய பெருமழையால் கொடிகாமம் நாவலடி ஆ[illegible] தமிழ்க்கலவன் பாடசாலையின் [illegible] வீதிப் பக்கமான மதில் நிலத்தில் வ்ழந்துள்ளது.

இப்பகுதியில் பெருவெள்ளம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (202-131)

## கைதடி - நீர்வேலி வீதியில் தொடர்ந்தும் வெள்ளக்காடு

கோப்பாய், டிசெ.6

கைதடி-நீர்வேலி இணைப்பு வீதி தொடர்ந்தும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் இதனூடான போக்குவரத்து முற்றாகப் பாதிப்படைந்துள்ளது.

மக்கள் தற்போது செம்மணி வீதியைப் பயன்படுத்தியே பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர். (202-72)

## நெடுந்தீவில் மண்எண்ணெய் தட்டுப்பாடு நீங்கியது

நல்லூர்,டிசெ.6

நெடுந்தீவுப் பகுதிக்கான மண்எண்ணெய் நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கம் காரைநகர் ஊடாக நேற்றுமுன்தினம் நெடுந்தீவுக்கு எடுத்துச் சென்றதையடுத்து அங்கு மண்எண்ணெய்க்கான தட்டுப்பாடு நீங்கியது.

நிவாரணப் பொருள்கள் உட்பட ஏனைய அத்தியாவசியப் பாவனைப் பொருள்கள் மீண்டும் இதே மார்க்கமாக எடுத்துச் செல்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மிகவும் கூடிய பாரத்துடன் பண்ணைப் பாலத்தின் ஊடாகக் கொண்டு செல்வதில் சிரமங்கள் இருப்பதாகவும் சங்க வட்டாரங்களில் இருந்து அறியப்படுகின்றது. (202-111)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## சண்டிலிப்பாயில் வீடுகளின் சேதவிவரம் சேகரிப்பு

நவாலி,டிசெ.6

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வீடுகள் சேதமடைந்தமை தொடர்பான மதிப்பீடுகளைச் செய்வதற்கு குழுவொன்று பிரதேச செயலரினால் நியமிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவினர் தற்போது பாதிப்புற்ற வீடுகளுக்குச் சென்று சேதவிவரங்களைச் சேகரித்து வருகின்றனர்.

இதற்கமைய முழுமையாக சேதமடைந்த வீடொன்றுக்கு ஒரு லட்சம் ரூபாவும் பகுதி சேதமடைந்த வீட்டிற்கு 40 ஆயிரம் ரூபாவும் கட்டம் கட்டமாக வழங்கப்படும்.

இதற்கான சுற்றறிக்கை மீளக்குடியேற்றம் மற்றும் அனர்த்த நிவாரண அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (202-72)

## வரணியில் வெள்ளத்தால் கால்நடைகள் அழிவு

யாழ்ப்பாணம்,டிசெ.6

வரணிப் பகுதியில் கால்நடைகள் பெருமளவில் இறந்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அப்பகுதியில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக மக்கள் எல்லாம் இடம்பெயர்ந்த வேளையில் கால்நடைகளைக் கைவிட்டு வந்தனர். ஒரு வாரத்தின் பின்னர் வீடுகளுக்குச் சென்றவர்கள் கால்நடைகளின் சடலங்கள் காணிகளுக்குள் கிடப்பதைக் கண்டதாகவும், ஒரு வாரமாக உணவின்றி வெள்ளத்தில் நின்ற கால்நடைகள் வெள்ளம் வற்றியபின்னர் நடக்க முடியாமல் விறைப்பு நிலை ஏற்பட்டு திடீரென வீழ்ந்து இறப்பதாகவும் தெரிவித்தனர்.

மாடுகள் பலவற்றைக் காணாததால் வெள்ளம் அதிகரித்தவேளையில் பாதுகாப்புத் தேடி வேறு பிரதேசங்களுக்கு நடந்து சென்றிருக்கலாம் அல்லது வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு இறந்திருக்கலாமெனவும் தெரிவிக்கப்பட்டது. (202-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சேர்.பொன் இராமநாதனின் குருபூசை தின நிகழ்வு கடந்த புதன்கிழமையன்று யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. நிகழ்வில் சேர்.பொன் இராமநாதனின் திருவுருவச் சிலைக்கு யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசியர் என்.சண்முகலிங்கன் மலர்மாலை அணிவிப்பதை முதலாவது படத்தில் காணலாம்.
துணைவேந்தர் உரையாற்றுவதையும் அருகில் பரமேஸ்வராக் கல்லூரி இயக்குநர் சபைத்தலைவர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலய பிரதமகுரு சிவ ஸ்ரீ சோ.இ.பிரணதார்திஹரக் குருக்கள், பல்கலைக்கழக இந்துமன்றத் தலைவர் கு.கோபிராஜ், பல்கலைக்கழக இந்து மன்றப் பெருந்தலைவர் கலாநிதி மா.வேதநாதன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் இரண்டாவது படத்தில் காணலாம்.


உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# திருமண அழைப்பு

நிகழும் மங்களகரமான சர்வதாரி வருடம் கார்த்திகைத் திங்கள் 23ஆம் நாள் (08.12.2008) திங்கட்கிழமை பிற்பகல் 12.03 மணி முதல் 12.33 மணிவரையுள்ள கும்ப லக்கினமும் ரேவதி நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்

திரு.திருமதி அம்பிகைபாலன் ஜெகதாம்பிகை தம்பதியரின் செல்வப் புதல்வன்
திருவளர் செல்வன் சசீந்திரன்
(கஜானி ஜுவலறி, பருத்தித்துறை)
அவர்களுக்கும்



திரு.திருமதி சுந்தரலிங்கம் பாக்கியலஷ்சுமி தம்பதியரின் கனிஷ்ட புத்திரி
திருவளர் செல்வி
உஷாநந்தினி
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தான கல்யாண மண்டபத்தில் (நாச்சிமார் கோயில்)
திருமாங்கல்யதாரணம் செய்யப்
பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
தங்கள் நல்வரவை இனிதே நாடும்:

திரு.திருமதி அம்பிகைபாலன் குடும்பத்தினர்,
இல.11, கன்னார லேன், நல்லூர்,
யாழ்ப்பாணம்.
திரு.திருமதி சுரேஸ்குமார் றூபி குடும்பத்தினர்,
திரு.திருமதி பாஸ்கரன் கலா குடும்பத்தினர்,
திரு.திருமதி பரமேஸ்வரன் ஜெயந்தி குடும்பத்தினர்.
(இரு வீட்டார் அழைப்பு)

திரு.திருமதி சுந்தரலிங்கம் குடும்பத்தினர்,
பூநாறி லேன், கொக்குவில் மேற்கு,
கொக்குவில், யாழ்ப்பாணம்.
திரு.திருமதி பிரபாகரன் புவனேஸ்வரி குடும்பத்தினர்,
திரு.திருமதி சுதாகரன் உதயகுமாரி குடும்பத்தினர்,
திரு.திருமதி தயாகரன் சுபாசினி குடும்பத்தினர்.
திரு.திருமதி முரளிதரன் நிஷாந்தினி குடும்பத்தினர்.

(80468)


## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ.6
சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் வார இறுதி நாள்களில் நடத்தப்படும் 'நிக்கெட்' ஆங்கிலப் பயிற்சியில் கலந்து கொண்ட பட்டதாரி ஆசிரியர்கள் அனைவரையும் இன்று சனிக்கிழமை மகளிர் கல்லூரிக்கு வருகை தருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிரேமகாந்தன் அறிவித்துள்ளார்.
(202-207)

## டிப்ளோமாக் கற்கைக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், டிசெ.6
தேசிய கல்வி நிறுவக பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கைநெறி 2009/2010 இற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
விவரங்களை மாகாணக் கல்விப் பணிமனை, யாழ்.கல்வி வலயம், தென்மராட்சிக் கல்வி வலயம், மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம், நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், யாழ்.இந்துக் கல்லூரி, யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி, கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம், கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை ஆகிய இடங்களில் பார்வையிடலாம் என தேசிய கல்வி நிறுவக யாழ்.பிராந்திய இணைப்பாளர் திருமதி ச.வில்வநாதன் தெரிவித்தார்.
(202)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வன் பத்மநாதக் குருக்கள் சர்வேஸ்வரசர்மா
யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் கல்வி கற்று 2008 தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றி 155 புள்ளிகள் பெற்றுச் சித்தி எய்திய எமது புத்திரன் ப.சர்வேஸ்வர சர்மா (06.12.2008 சனிக்கிழமை) இன்று பாடசாலையில் நடைபெறும் பரிசளிப்பு விழாவில் தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்படுவதையிட்டு அகமகிழ்வதோடு, அவருக்குக் கல்வி கற்பித்த பாடசாலை அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம். மேலும் இவர் கல்வியில் சிறப்புற்று விளங்க எமது குலதெய்வங்களையும் வேண்டி நிற்கின்றோம்.
அன்புள்ள பத்மநாதக் குருக்கள் குடும்பத்தினர்.
துரைராசா வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
(80465)



# யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்- வ:து
## நத்தார் புதுவருட பண்டிகைக் காலத்தை முன்னிட்டு விசேட விலைக் கழிவு

**01. கூட்டுறவு நகர் 1 127, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**
**02. கூட்டுறவு நகர் 2 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

**01. கேக்:**
கேக் தயாரிப்பதற்கான சகல பொருள்களும் உள்ளடக்கப்பட்ட ரூபா 750/= பெறுமதியுடைய பொதி ஒன்று விசேட விலைக் கழிவுடன் ரூபா 690/= இற்கு விற்பனைக்கு விடப்பட்டுள்ளது.
500 கிராம் மாஜரின், 500 கிராம் மா, 500 கிராம் சீனி, 50 கிராம் பிளம்ஸ், 50 கிராம் கஜு, 50 கிராம் கலர் புருட்ஸ், முட்டை, பேக்கிங் பவுடர், ஓயில் பேப்பர், வனிலா, 50 கிராம் இஞ்சி அல்வா, 50 கிராம் பூசனி அல்வா, 50 கிராம் மிக்ஸ் புருட்

**02 காகிதாதி:**
கொள்வனவு செய்யும் காகிதாதி பொருள்களின் அளவுக்கேற்ப இரண்டு பேனாக்கள் இலவசமாக வழங்கப்படும்

| கொள்வனவு செய்யும் பொருள் | கொள்வனவு செய்யும் தொகை | இலவசமாக வழங்கப்படும் பொருள் |
|---|---|---|
| 80 பக்கம் அட்லஸ் கொப்பி | 12 | 02 பேனா இலவசம் |
| 120 பக்கம் அட்லஸ் கொப்பி | 06 | 02 பேனா இலவசம் |
| 160 பக்கம் அட்லஸ் கொப்பி | 05 | 02 பேனா இலவசம் |
| 200 பக்கம் அட்லஸ் கொப்பி | 04 | 02 பேனா இலவசம் |
| 240 பக்கம் அட்லஸ் கொப்பி | 04 | 02 பேனா இலவசம் |
| 320 பக்கம் அட்லஸ் கொப்பி | 04 | 02 பேனா இலவசம் |
| 400 பக்கம் அட்லஸ் கொப்பி | 03 | 02 பேனா இலவசம் |

**03. பாதணிகள்:**
அதிரடி விலைக்கழிவில் விற்றுத் தீர்த்தல் முறையில் சகல பாதணிகளும் விசேட விலைக்கழிவு வழங்கப்பட்டுள்ளது.

| கொள்வனவு செய்யும் பொருள் | கொள்வனவு செய்யும் தொகை | இலவசமாக வழங்கப்படும் பொருள் |
|---|---|---|
| சீ.ஆர்.கொப்பி 01 | 02 | 02 பேனா இலவசம் |
| சீ.ஆர்.கொப்பி 02 | 03 | 02 பேனா இலவசம் |
| சீ.ஆர்.கொப்பி 03 | 03 | 02 பேனா இலவசம் |
| சீ.ஆர்.கொப்பி 04 | 02 | 02 பேனா இலவசம் |
| சீ.ஆர்.கொப்பி 05 | 02 | 02 பேனா இலவசம் |
| இரட்டை றூள் | 06 | 02 பென்சில் இலவசம் |
| நாலு றூள் | 06 | 02 பென்சில் இலவசம் |



**04. பரிசுப் பொருள்கள்:**
பிறந்ததினம், திருமண நிகழ்வுகள் மற்றும் கொண்டாட்டங்களின் போது வழங்கக் கூடிய பரிசுப் பொருள்கள் வகைகளும் விசேட விலைக் குறைப்புச் செய்யப்பட்டுள்ளது.

05. இக்கால கட்டத்தில் கொக்கக்கோலா 1.5லீற்றர் சோடா 05 கொள்வனவு செய்பவர்களுக்கு 01 கொக்கக்கோலா 1.5.லீற்றர் சோடா இலவசமாக வழங்கப்படும். சோடா ஒன்றின் விலை ரூபா 140 மட்டுமே.

06. மேற்படி காகிதாதி பொருள்கள் கொள்வனவு செய்யும் பாவனையாளர்கள் அதற்குரிய சிட்டையைப் பாதுகாப்பாக வைத்திருப்பதன் மூலம் 2009 ஜனவரி மாதத்தில் நடைபெறும் பரிசுக் குலுக்கலில் தாங்களும் அதிஷ்டசாலியாக முடியும்.

மேற்படி விலைக்கழிவு விற்பனையில் தாங்களும் பங்கேற்று நந்தார் புதுவருட பண்டிகையைச் சிறப்பாகக் கொண்டாடுமாறு எமது அன்பார்ந்த வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்**
எமது நத்தார் புதுவருட நல் வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.


(சி/555883)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பிரதேசங்களாக வடக்கு - கிழக்கு அரச யாப்பில் அங்கீகரிக்கப்பட வேண்டும்

கலாநிதி ஆ.க.மனோகரன் எழுதிய 'இலங்கைத் தேசிய இனமுரண்பாடுகளும் சமாதான முன்னெடுப்புகளும்' - ஒரு வரலாற்றுப் பார்வை 1948- 2007 என்ற நூல் வெளியீட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு, இராமகிருஷ்ண மிஷன் கருத்தரங்கு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட முன்னாள் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் நிகழ்த்திய வெளியீட்டுரையின் சில பகுதிகள் கடந்த இரு நாள்களிலும் பிரசுரமாகியிருந்தன. இது இறுதிப் பகுதியாகும்.



க.வி.விக்னேஸ்வரன்

அப்படியானால் வெளிநாட்டவர் எம் நாட்டை விட்டு ஏகியதன் பின்னர் வடக்கு - கிழக்கு தமிழ் மொழியால்தான் ஆளப்பட வேண்டும். மற்றைய ஏழு மாகாணங்களும் சிங்கள மொழியால் ஆளப்படலாம். அதற்கு அவர்கள், இன்றுதான் எமது அரசயாப்பு இரு மொழிகளுக்கும் சம அந்தஸ்தைக் கொடுத்துள்ளதே என்பார்கள். அதிகாரம் உங்கள் வசம் இருக்கும்போது அப்படிப்பட்ட ஏற்பாடுகளால் எந்தப் பயனும் இல்லை என்பதே அதற்கு எங்கள் மறுமொழி. வெளிநாட்டு அனுசரணையுடன் வடக்கு - கிழக்கு பிரதேசங்கள் தமிழ் பேசும் பிராந்தியங்களாக அரசயாப்பில் அறிவிக்கப்பட வேண்டும்.

மற்றைய ஏழு மாகாணங்களும் சிங்கள மொழி பேசும் பிராந்தியங்களாகப் பிரகடனப்படுத்தாலாம். இந்த ஏற்பாடு மாற்றப்பட முடியாத உள்ளார்ந்த உரிமையாக அரசயாப்பில் உள்ளடக்கப்பட வேண்டும். எந்த ஒரு சிங்களம் பேசும் பெருமகனும் வடக்கு - கிழக்கில் அரச வேலை பெறுவதென்றால் தமிழறிவு கொண்டிருக்க வேண்டும். அதேபோல் தமிழ் பேசும் மக்கள் மற்றைய ஏழு மாகாணங்களில் வேலை பெறச் சிங்கள மொழித் தேர்ச்சிபெற்றிருக்க வேண்டும். தேசிய கீதம் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தமிழிலேயே இசைக்கப்படவேண்டும். இவை முதல்படி.

இவற்றின் தாற்பரியம் என்ன என்று பார்த்தோமானால், இன அடிப்படையில் இன்று போராடும் இலங்கை மக்கள், மொழி அடிப்படையிலேயே தமது வேற்றுமைகளை வளர்த்து வந்துள்ளனர் என்பதை இந்த மாற்றத்தால் உணரத் தொடங்குவார்கள். இதற்கு புத்த பிக்குகள் உடன்படமாட்டார்கள். ஆனால் வெளிநாட்டு மத்தியஸ்தம் அவர்களை வழிக்குக் கொண்டுவர வேண்டும். மொழிவாரியான வேற்றுமை என்பது பிரத்தியேகமாக நாங்கள் அவதானிக்கக்கூடியதொன்று. இதில் தமிழ் பேசும் கிழக்கிலங்கை முஸ்லிம், கிறிஸ்தவ மக்களும் இணைவார்கள் இதுகாறுந் தம்மை இரண்டாந்தர மக்களாக நினைத்துவந்த வடக்கு - கிழக்குத் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் தமிழ்மொழியில் தமது வாழ்விடங்களில் சட்டப்படி பணியாற்ற முடியும் என்று கண்டதும் ஒரு சிறிதளவாவது மன நிறைவை அடைவார்கள்.

கிழக்கில் பாரம்பரியமாக வாழும் சிங்கள மக்கள் இதனால் எந்தவித பதற்றமும் அடைய மாட்டார்கள். அவர்கள் பொதுவாகவே இரு மொழியும் அறிந்தவர்கள். அரசு அண்மையில் அங்கு அனுப்பியவர்களுக்குத்தான் தமிழ் தெரியாது. அதேபோல் இன்று சிங்கள ஆதிக்கத்தினால் தெற்கில் உள்ள ஏழு மாகாணங்களிலும் இருக்கும் தமிழர்கள் சிங்கள மொழியைத் தெரிந்திருக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தத்திற்கு ஏற்கனவேஉள்ளாக்கப்பட்டிருக்கின்றனர். அந்த நிர்ப்பந்தம் தொடரும். ஆனால் சிங்கள மொழியைப் புறக்கணிக்கும் தமிழ் பேசும் மக்களுக்கு வடக்கு - கிழக்கில் போய் வாழும் வசதிகள் இருக்க வேண்டும்.

இந்த முதற்படியை நடைமுறைப்படுத்த இரு முக்கிய சிங்களப் பெரும்பான்மைக் கட்சிகளும் ஒன்றிணைந்து அதற்கு ஏதுவாக செயற்பட்டால் நாளைக்குக்கூட அரச யாப்பில் இதற்கமைவான திருத்தம் கொண்டுவரப்படலாம். ஒற்றையாட்சியா ஒன்றிணைக்கப்பட்ட ஆட்சியா - என்ற கேள்விக்கு இடம் இல்லாமலே இத் திருத்தம் கொண்டுவரப்படலாம்.

வடக்கு - கிழக்கு ஆளுநர்கள் தமிழில் கருமமாற்ற வேண்டியிருக்கும். ஆனால் சிங்களம் பேசும் மக்களுக்குச் சிங்கள மொழி பெயர்ப்புகள் அனுப்பப்பட வேண்டும். அதேபோல் மற்றைய ஏழு மாகாணங்களிலும் தமிழர்களுக்கு தமிழ் மொழிபெயர்ப்புகள் வழங்கப்படவேண்டும். அவ்வாறு செய்யாதுவிட்டால் வடக்கு - நாடொன்றினுள் இரு தரப்பாரும் வெவ்வேறாக வாழ சிங்கள மக்கள், தலைவர்கள் இணக்கம் தெரிவிக்கக் கூடும் என்ற நப்பாசையின் வெளிப்பாடே இவையாவும். அவ்வாறு இணக்கம் தெரிவிக்க மறுத்தால் சர்வதேச நாடுகளின் அனுசரணையுடன் அப்பேர்ப்பட்ட இணக்கத்தைப் பெறலாம் என்ற அடிப்படை எண்ணத்தின் விளைவே என்று கூடக் கூறலாம். இரு மொழி பேசும் நாடாக இலங்கையைப் பிரகடனப்படுத்த முடியாது என்று சிங்கள மக்களின் தலைவர்கள் ஆணித்தரமாகக் கருத்துத் தெரிவித்தால், வெளியிடப்படும் நூலின் ஆசிரியரின் முடிவுக்கு நாங்கள் யாவரும் வரவேண்டியிருக்கும் என்பதையும் நான் இங்கு கூறிவைக்க விரும்புகின்றேன்.

அவலங்கள், அனர்த்தங்கள், அனுபவங்கள் எம்மை அண்டும் போது எமது அறிவும் விரிவடைகிறது. இன்று முடியாது என்றிருப்பவை நாளை முடியும் என்று பேசப்படுகின்றன. அயர்லாந்துப் பிரச்சினை இதற்கு ஒரு எடுத்துக்காட்டு. நான் அரசியல் தீர்வொன்றை உங்கள் முன் வைக்கவில்லை. வெளியுலுகத்திற்கு சிங்கள மக்களின் தலைவர்களின் உண்மைச் சொரூபத்தை எடுத்துக்காட்டத் தோதான ஒரு வழிமுறையை நான் கூறியுள்ளேன். தமிழர்கள் அனைவரும் பயங்கரவாதிகள் என்று கூறப்படும் நிலையில் ஆகக்குறைந்தது மொழிவாரியான இந்த உரிமையை, உடனே அளிப்பீர்களா - என்று கேட்டு அதற்கு அவர்கள் மறுத்தால் எதைத்தான் அவர்களிடம் நாம் எதிர்பார்க்க முடியும் - என்ற கேள்வியை சர்வதேச அரங்கில் முன்னரும் பின்னருங்கூட வந்தார்கள். பாண்டியர், பல்லவர் முதலிலும் சேரர், நாயக்கர் போன்றவர்கள் பின்னரும் வந்தார்கள். சரித்திர காலத்திற்கு முன்னரும் வந்தார்கள் - பின்னரும் வந்தார்கள். அவர்கள் அனைவரதும் வாரிசுகளே இன்றைய இலங்கைத் தமிழ் மக்கள். சரித்திர காலத்திற்கு முன்பிருந்து இங்கு வாழ்ந்து வரும் ஒரு பாரம்பரிய மக்கள் கூட்டத்தினரின் அங்கத்தினரே இவர்கள். குறிப்பிட்ட காலத்தில் மட்டும் வந்தேறிய குடிகள் அல்லர் வடக்கு - கிழக்குத் தமிழர்கள் என்பதை அவருக்குத் தெளிவுபடுத்தினேன்.

கொழும்பில் அல்லது வடக்குக் கிழக்கிற்கு வெளியில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்குத் தமது பாரம்பரியம் தெளிவாகத் தெரியாமல் இருக்கலாம். இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட இன்னல்கள், இம்சைகள், இன்னாமை பற்றித் தெரியாமல் இருக்கலாம். அரச பத்திரிகைகளைப் பார்த்து ஏதோ பயங்கரவாத இயக்கங்களின் படுகொலைகளே இங்கு நடக்கின்றன என அவர்கள் யூகிக்கலாம்.

ஆனால் ஓர் இனத்தை அழிக்கத் தொடர்ந்து எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் பற்றி, திட்டமிட்டுச் செயற்படும் பெரும்பான்மை அரசியற் கட்சித் தலைவர்கள் பற்றி, அறிந்துகொள்ள இன்றைய நூல் வசதி அளிக்கும்.

அரச பயங்கரவாதம் என்பது பெரும்பான்மை மக்கள் தலைவர்களின் அடிமனதில் இருந்து வந்திருக்கும் இன

## வெளிநாட்டு மத்தியஸ்தம் இதற்கு உறுதுணை புரியவேண்டும் என்கிறார் முன்னாள் நீதியரசர்

கிழக்கிலும் சிங்கள மொழிபெயர்ப்புகள் சிங்கள மக்களுக்குக் கிடைக்காது என்ற பயம் அவ்வாறு நடக்காமல் இருக்க வழிவகுக்கும். கொழும்பில் மும்மொழிகளிலும் நடைமுறைகள் ஆற்றப்படவேண்டும். அங்கு சிங்களம் பேசாதோர் தான் பெரும்பான்மையர் என்பது மனதில் நிலைநிறுத்தப்பட வேண்டும்.

இரண்டாம் கட்டத்தில் தமிழ் பேசும் மக்களும் சிங்களம் பேசும் மக்களும் தம்மைத் தாமே ஆள்வதற்கு வழி வழிவகுக்க வேண்டும். இங்கு தமிழ் பேசும் மக்களிடையே இருந்துகொண்டு உரிமைகள் கோரும் முஸ்லிம்களும், சிங்களம் பேசும் மாகாணங்களில் வாழும் மலையக மக்களும் முக்கியமாகக் கருத்தில் கொள்ளப்பட்டு அவர்கள் தனித்துவமாகத் தம்மைத் தாமே ஆள வழிகள் வகுக்கப்படவேண்டும்.

சமச்சீர்மையற்ற நிர்வாக அலகுகள் (Asymmetrical administrative units) மூலம் மக்கள் கூட்டங்கள் வாழும் இடங்களை இணைக்க வேண்டும். இதற்கான அரச யாப்பு மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும். இவற்றிற்கு முன்னோடியாகத் தேர்தல்கள், சர்வதேசப் படையினர் பாதுகாப்பில் நடைபெற வேண்டும்.

இருதரப்பாரும் தம்மைத் தாமே ஆள்வதற்கு வழிவகுக்க வேண்டும் என்று கூறும்போது மொழிவாரியாகப் பிரிந்திருக்கும் கனேடிய - கியுபெக் மாநில அனுபவங்கள் கருத்திற்கு எடுத்துக்கொள்ளப்படலாம். எமது நாட்டுக்கு ஏற்றவாறு மாற்றங்களை நாங்கள் நாடலாம். தீர்வுகளுக்குப் பஞ்சமில்லை. ஆனால் தீர்க்க வேண்டும் என்ற மனோநிலைதான் அருகிவிட்டது. முக்கியமாகச் சிங்கள அரசியற் தலைவர்களிடையே அறவே அருகிவிட்டது.

இந்த நிலையில் ஒருமித்த முன்வைக்கலாம் என்றபடியால்தான் இந்த வழிமுறையை இங்கு கூறிவைக்கின்றேன்.

ஆசிரியர் தமது நூலில் என்ன முடிவுக்கு வந்துள்ளார் என்பதல்ல முக்கியம். அவர் எதற்காக அந்த முடிவுக்கு வரவேண்டியிருந்தது என்பதே முக்கியம். நாட்டின் கடந்தகால நடவடிக்கைகள், மக்களிடையே ஏற்பட்டுள்ள கசப்புணர்வுகள், வடக்குக் கிழக்குத் தமிழ் மக்கள் திட்டம் இட்டுத் தொடர்ந்து ஏமாற்றப்பட்டு வந்தமை, பெருமளவில் அரச படைகளால் கொலை செய்யப்பட்டமை போன்ற பல காரணங்கள் அவரின் முடிவுக்கு ஏதுவாக அமைந்துள்ளன. அவற்றை நாம் எல்லோரும் அறிந்து வைத்திருப்பது இன்றைய காலகட்டத்தில் நன்மை பயக்கும்.

எம்முள் பலருக்கு எமது பாரம்பரியம் தெரியாதிருப்பது வருத்தத்தைத் தருகிறது. படித்த ஒருவர் என்னிடம் கி.பி. 10 ஆம் - 11 ஆம் நூற்றாண்டுகளில் சோழர் காலத்தில் அல்லவா தமிழர்கள் இங்கு வந்தார்கள் என்று ஒருநாள் என்னிடம் கேட்டார். அப்படியல்ல என்றுவிட்டு பல விடயங்களை நான் அவருக்குக் கூறவேண்டியிருந்தது. ஒரு கல்லூரியின் மாணவர்கள் அக் கல்லூரியில் பாலர் ஆரம்ப வகுப்புகளில் சேரலாம். மத்திய வகுப்புகளில் சேரலாம். அல்லது கல்விப் பொதுத்தராதரப் பரீட்சைக்கான சாதாரண அல்லது உயர்தர வகுப்புகளில் சேரலாம். ஆனால் கல்லூரியை விட்டதும் அவர்கள் அனைவரும் அக் கல்லூரியின் பழைய மாணவர்கள் என்றே அடையாளம் காணப்படுகின்றார்கள். அதேபோல் 10 ஆம் 11 ஆம் நூற்றாண்டுகளிலும் தமிழர்கள் இந் நாட்டுக்கு வந்தார்கள். அதற்கு

ஒழிப்பு மனோநிலையின் வெளிப்பாடே என்பது தெரியவரும். சென்ற 90 வருடங்கள் எவ்வாறு திட்டமிட்டுச் செயலாற்றிப் படிப்படியாகத் தமிழ் மக்கள் அன்று வாழ்ந்து வந்த இடங்களில் இருந்து, நாட்டில் இருந்து, அவர்களின் சூழல்களில் இருந்து துரத்தப்பட்டு வந்துள்ளனர் என்பது தெரியவரும்.

நான் கொழும்பில் பிறந்திருந்தாலும் எனது ஆரம்பகால வாழ்க்கையை அனுராதபுரத்திலும் குருநாகலையிலும் கழித்தவன். அன்றெல்லாம் அநுராதபுரத்தில் 50 விகிதத்திற்கு மேல் தமிழர்களே வாழ்ந்து வந்தார்கள். காணிச் சொந்தக்காரர்களாக இருந்தார்கள். முக்கிய பதவிகளில் இருந்தார்கள். புனித நகர நிர்மாணிப்பு என்ற பெயரில் பழைய வதிவிடங்களில் இருந்து தமிழர்கள் அகற்றப்பட்டார்கள். கதிர்காமத்திலும் அதே நிலைதான்.

திஸ்ஸமகாராமையில் எத்தனையோ ஏக்கர் விளைநிலங்களின் சொந்தக்காரர்களாக இருந்த தமிழ் மக்கள் இனக் கலவரங்களின் போது கொல்லப்பட்டார்கள் அல்லது அடித்துத் துரத்தப்பட்டார்கள். சிந்தித்துச் செயலாற்றி, திட்டம் போட்டுச் செயலாற்றித் தமிழர்களைத் தெற்கில் இருந்து விரட்டி அடித்துள்ளார்கள் சிங்கள மக்களின் தலைவர்கள் என்பது கண்கூடாகத் தெரிகின்றது.

இவற்றைச் சர்வதேச அரங்குகளில் அவர்கள் புரியும் மொழியில் எடுத்துச் சொல்ல எமக்குத் தகைமையுடைய தலைவர்கள் இன்றில்லை. இருந்த தலைவர்களை நாங்கள் இல்லாதாக்கி விட்டோம். கண்ணீரில் கரைந்து வாடுகின்றது தமிழினம். இந்த நிலையில் நடந்தவற்றை எழுத்திலேனும் எடுத்தியம்பக் கலாநிதி மனோகரன் முன்வந்துள்ளமை பாராட்டுக்குரியது - என்றார். *

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்

# யாழ் இந்து ஆரம்ப



**க.ஸ்ரீதுசன்**

162 புள்ளிகள்
மாவட்ட நிலை 7



**ஸ்ரீ. ஸ்ரீசங்கீதன்**

160 புள்ளிகள்
மாவட்ட நிலை 8

இன்று 6.12.2008 சனிக்க

முதல் 22 மாணவர்கள் தங்கப்பதக்கங்களை

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2008 இல் 119 மாணவர்களைச் சித்தியடையச் செய்து 60.4 % சித்தி மூலம் யாழ். மாவட்டத்திலும் வடக்குக் கிழக்கு மாகாணத்திலும் அகில இலங்கையிலும் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாக இருப்பதற்குக் கடின உழைப்பால் உயர்வுகள் பெற வைத்த அதிபர், உபஅதிபர், பகுதித் தலைவர்கள், தர இணைப்பாளர்கள், ஆசிரியப் பெருந்தகைகள் அனைவரையும் மனம் நிறைந்து நன்றியுணர்வோடு பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம்.





ந.செந்தூரன் 157 | ஆ.ஆரங்கன் 157 | ஜெ.டயானந்தன் 157 | ப.சர்வேஸ்வரசர் 155

உ.கஜானி 152 | இ.சஜீந்திரா 149 | சு.திவாகரன் 149 | ப.வைகுந்தன் 149 | ச.சாயிசுதன் 149 | அ.தயாசாகர 148

ச.யாழரசன் 144 | சி.சிவசங்கரி 144 | க.யுவநீதா 144 | ச.நிவேனுதன் 143 | மு.காயத்திரி 143 | உ.நவரத 142 | ஜெ.சது 142

இ.ஆரூரன் 141 | த.காருண்யன் 141 | பா.தஜீவ் 141 | வி.கௌதமி 141 | பா.லோகப்பிரியன் 141 | யோ.துளசிகன் 140 | த.ஜீவதாரணி 140 | த.லக்ஷிக 138

சி.சிவநீவன் 136 | கு.கயந்தன் 136 | சி.ஆதிரை 136 | ச.மதுசன் 135 | ஜெ.பார்த்திபன் 135 | இ.கிருஷ்ணாகினி 135 | க.அஜிதா 135 | ஜெ.காஞ்சனா 135 | ஜெ.பேரழக 134

பி.மதுஷன் 133 | சு.அபிராம் 132 | பொ.யேமிகா 132 | ஸ்ரீ.பிரணவன் 132 | ச.கோவர்த்தன் 131 | சி.விதுர்சன் 131 | சி.பியாஷ்கரா 131 | சி.திலக்சன் 131 | அ.அகீபன் 130 | இ.மாதி 130

சி.கபிலன் 128 | க.சினோஜிதா 128 | ச.கீர்த்தனா 128 | சா.ஜிருசிகன் 127 | மோ.விதுர்ஷா 127 | பு.கஜானன் 127 | நி.சஞ்சீவன் 126 | த.உமேஷ் 126 | ஸ்ரீ.ஹர்சனா 126 | சி.சாயிசங்கர் 126 | தி.நரம 125

ம.சஞ்சீவ் 123 | வி.கௌசல்யா 123 | பி.தர்சனா 123 | க.கஜிலா 123 | இ.நிதூசன் 122 | ச.மதுஷா 121 | றே.விதுஷனா 121 | ச.சானுஷன் 120 | க.கஜனி 120 | சி.ரஞ்சித் 120 | சி.ராமானு 120

ஞா.அபர்ணா 118 | க.பிரணவன் 117 | ஜெ.விதுஷா 117 | செ.கேதாரகன் 117 | அ.சாரங்கி 117 | சு.பிரணவன் 116 | சு.அமலன் 116 | ம.கிங்ஷன் 116 | ஜெ.ஸ்ரீரம்மியா 116 | ற.கமீலா 116 | வி.ரம்மி 116

## இந்துவின் ஆரம்பம் இனிய ஆரம்பம்

**யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை,**
**யாழ்ப்பாணம்.**

புலன

அனுசரணையாளர்: திரு.சந்திரசேகரம் சிறிரஞ்சன் (பெற்றோர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ின்றோம்
# ... பாடசாலை

2008 சனிக்கிழமை நடைபெறும் 2008 இற்கான பரிசளிப்பு விழாவில்
...பதக்கங்களையும் ஏனைய மாணவர்கள் பதக்கங்களையும் பரிசில்களையும் பெறுகின்றார்கள்



ப.சர்வேஸ்வரசர்மா 155 · ந.சுமித்திரசாந்த் 154 · ப.கேனுஜா 154 · த.தக்ஷயன் 153 · லோ.தர்ஷிகன் 153 · சி.பிரவீன் 153

அ.தயாசாகரி 148 · பா.ஸ்ரீஷாயுச்ஜா 148 · சு.ஸிவஷாந்த் 146 · ப.பபிலன் 145 · த.கரிதாஸ் 145 · சி.வைஷ்ணவி 145

ஜெ.சது...ன் 142 · த.டினோஜன் 142 · த.நாகலோஜினி 142 · கி.சிவமைந்தன் 141 · நா.துவாரகன் 141 · பா.கஜேந்திரன் 141

த.லக்ஷிகா 138 · வீ.கஜபவன் 138 · சி.விதுர்சனசர்மா 138 · மு.நிவேதா 138 · ஈ.மகிழ்யா 137 · செ.துஷ்யந்தி 137

ஜெ.பேரழகன் 134 · இ.சஜீவன் 134 · சு.மிதுன்ராஜ் 134 · க.சிவசொரூபி 134 · யோ.பானுஜா 133 · ஸ்ரீ.நிவேதன் 133

இ.மாதினி 130 · சோ.கஜன் 129 · சோ.மதுஷன் 129 · லோ.பகவான் 128 · சு.லாவண்யன் 128 · கு.லயசுஜன் 128

தி.நர்மதா 125 · அ.கோபிஜா 125 · பு.ரட்ஷிகா 124 · சி.டர்ஷிகா 124 · க.ஜெயகாந் 123 · ச.கலையரசி 123

சி.ராமானுஜன் 120 · ர.மிதுளா 120 · சி.விஷாகனன் 119 · யோ.ரஞ்சுதா 119 · ஜெ.ஜவாஹர் 118 · யோ.பிறேமரூபன் 118

வி.ரம்மியா 116

இவர்கள் அனைவரும் சகல கலைகளும் பெற்றுக் கல்வியில் சிறப்புற வாழ்த்துவதோடு தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை கல்விச் செயற்பாடுகளிலும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் மிக நுணுக்கமாகச் செயற்திறனுடன் கருத்தூன்ற வைத்து உன்னத நிலைக்கு வித்திட்ட பாடசாலை ஆசிரியப் பெருந்தகைகளுக்கு நன்றி கலந்த கௌரவிப்புக்களையும் பாராட்டுக்களையும் வழங்கி, இன்று பெருவிழா எடுத்துச் சிறப்பிப்பதையிட்டு பெருமையும் பேருவகையும் அடைகின்றோம். கடந்த பல வருடங்களாகத் தொடர்ந்து முன்னிலை பெற்ற எமது பாடசாலை வருங்காலத்திலும் பல முன்னேற்றகரமான சாதனைகளைப் படைத்து வெற்றி வாகை சூடவும் அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள் நலமும் வளமும் பெருக வாழ்வாங்கு வாழவும் வாழ்த்துகின்றோம்.

## புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் பெற்றோர்கள்.

...றோர்)

# சிறுவர்களைப் படையில் சேர்ப்பதற்குத் தடை: அரசு – யுனிசெவ் – கருணா கூட்டு ஒப்பந்தம்

கொழும்பு,டிச.6

சிறுவர்களை படைக்குச் சேர்க்காமல் இருப்பதை உத்தரவாதப்படுத்தி, தற்போது படைகளில் உள்ள சிறுவர்களை விடுவித்து அவர்கள் மீண்டும் சமூகத்துடன் இணைவதை உத்தரவாதப்படுத்தும் செயற்திட்ட ஒப்பந்தம் ஒன்றில் இலங்கை அரசு, யுனிசெவ் மற்றும் கருணா அணியான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பு ஆகியன நேற்றுமுன்தினம் முக்கூட்டு ஒப்பந்தம் ஒன்றில் கைசாத்திட்டது.

கருணா குழுவின் சார்பில் அதன் தலைவரும்எம்.பியுமான வி.முரளிதரன் (கருணா) இந்த ஒப்பந்தத்தில் கிழக்கு மாகாண முதலமைச்சரும் மேற்படி அமைப்பின் பிரதிநிதியுமான சிவநேசத்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) முன்னிலையில் நேற்று முன்தினம் கைச்சாத்திட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச் செயற்திட்ட ஒப்பந்தமும், அதில் கைசாத்திட்ட சகல தரப்புகளும் அடுத்த மூன்றாண்டுகளுக்குள் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகள் பற்றிய தெளிவானதொரு கால அட்டவணையை பிரேரிக்கிறது.

இதில் கருணாவுடன் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் சுஹத கம்லத்தும், யுனிசெப்பின் இலங்கைக்கான பிரதிநிதி பிலிப்பே துவாமெல்லேயும் கைச்சாத்திட்டார்கள்.

புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் சுஹத கம்லத் இவ்விடயம் தொடர்பாக கருத்து வெளியிடுகையில் -

சர்வதேச சட்டத்திற்கு முரணானதும், பிள்ளைகளுக்கு பெருமளவு உடலியல், உளவியல் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதுமான சிறுவர் ஆட்சேர்ப்பு முதலான விவகாரங்களைச் சிறப்பாகக் கையாளும் விடயத்தில் மூன்று தரப்புக்களின் கடப்பாட்டை இந்த ஒப்பந்தம் தெளிவாக எடுத்துரைக்கிறது- என்றார்.

யுனிசெப்பின் இலங்கைக்கான பிரதிநிதி பிலிப்பே துவாமெல்லே கருத்து வெளியிடுகையில் ''இந்த உடன்படிக்கை தெளிவானதொரு அரசியல் கடப்பாட்டை வெளிப்படுத்தி நிற்கிறது. அத்துடன் இது தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பு பிள்ளைகளைப் படையணிகளில் சேர்த்து அவர்களைச் சண்டைக்காகப் பயன்படுத்துவதற்கு முற்றுப்புள்ளி வைக்கிறது'' - என்றார்.

''இனிமேலும், குறித்த செயற்திட்டத்தை திடமான முறையில் அமுல்படுத்தி, எதிர்காலத்தில் குறுகிய கால எல்லைக்குள் பிள்ளைகள் ஆக்கபூர்வமான பெறுபேறுகளைப் பெற வழிவகுக்க வேண்டும்'' என்று அவர் மேலும் தெரிவித்தார். (சி)

# அமைச்சர்களின் வீடுகளில் மழைக்காலத்தில் ஒழுக்காம்

கொழும்பில் அரசால் அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ இல்லங்கள் மழைகாலங்களில் ஒழுகுகின்றன என்றும் அவ்வில்லங்களுக்குள் மலசலகூட கழிவுகள் வருகின்றன என்றும் பிரதி அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கம நேற்று முன்தினம் நாடாளுமன்றில் கூறினார்.

பிரதி அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ இல்லம் தொடர்பாக ஜே.வி.பி.யின் எம்.பியான ஆர்.பி.ரணவீர பத்திரண எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே பிரதி அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சர்களின் உத்தியோகபூர்வ இல்லங்களை நிர்வகிக்கும் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு இது தொடர்பாக முறைப்பாடு செய்தும்கூட எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

''நீங்கள் மழையில் நனைவதையிட்டு நாம் கவலையடைகிறோம். உடனடியாக அந்த வீட்டைத் திருத்திக்கொள்ளுங்கள்'' என்று ஆர்.பி.ரணவீர பத்திரண மஹிந்தானந்த அளுத்கமகேயிடம் கூறினார்.

அமைச்சர்களின் வீடுகளைக்கூட திருத்தமுடியாத அரசால் எப்படி மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியும் என்று எதிர்க்கட்சி பிரதம கொறடா ஜோஸப் மைக்கல் பெரேரா சபையில் கேள்வி எழுப்பினார். (சி)

# தெற்கில் 40 பஸ்களில் அரசின் குண்டுப்பொதி!

கொழும்பு,டிச.6

தெற்கில் 40 பஸ்களில் அரசு குண்டு போன்ற பொதிகளை வைத்தது என்று பிரதி அமைச்சர் மஹிந்தாநந்த அளுத்கமகே நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வரவு-செலவுத் திட்டத்தின் பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மற்றும் அவசரக்காலச் சட்ட நீடிப்பு பிரேரணை ஆகியவை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

தமது படையினர் பயங்கரவாதிகளை வெற்றிகரமாகப் பலவீனப்படுத்தி வரும் இந்தச் சந்தர்ப்பத்தில் எதிர்க்கட்சித் தலைவர் புலிகளுக்கு ஆதரவாகப் பேசி வருகிறார்.

இதன் காரணமாகத்தான் நாம் ரணிலுக்கும் அவரது தலைமைத்துவத்திற்கும் புலிப்பட்டம் சூட்டுகின்றோம். ஐ.தே. கட்சி எம்பிக்கள் அனைவருக்கும் நாம் இந்தப் பட்டத்தைச் சூட்டவில்லை.

எமது அரசு பாதுகாப்புப் படையினரின் நலனில் மிகவும் அக்கறையுடன் செயற்படுகிறது.

பயங்கரவாதத் தாக்குதலில் இருந்து தென் பகுதி மக்களைப் பாதுகாப்பதற்காக நாம் விசேட வேலைத் திட்டங்களை மேற்கொண்டு வருகிறோம்.

நாம் அண்மையில் மக்கள் மத்தியில் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 40 பஸ்களில் குண்டுப் பொதிகளை வைத்தோம். அவை உண்மையில் குண்டுகள் அல்ல வெறும் பொதிகள் மாத்திரம் தான்.

ஆனால், அந்தப் பொதிகள் தொடர்பில் மக்கள் விழிப்படையவில்லை. இதனால் பின்னர் நாம் விரிவான விழிப்புணர்வு வேலைத்திட்டத்தை ஆரம்பித்து அதில் வெற்றியும் கண்டுள்ளோம்.

எமது திட்டமிட்ட இவ்வாறான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் காரணமாகவே தெற்கில் பயங்கரவாதத் தாக்குதல்கள் குறைவடைந்துள்ளன - என்றார். (அ-சி)

# புலிகள் தவிர்ந்த வேறு அமைப்புகளிலும் தற்கொலை குண்டுதாரிகள் உள்ளனர்

## சபையில் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

கொழும்பு,டிச.6

''தற்கொலை குண்டுதாரிகள் புலிகள் அமைப்பில் மாத்திரமன்றி வேறு சில அமைப்புகளிலும் உள்ளனர்''

- இவ்வாறு ஐ.தே.கட்சி எம்.பி. லக்ஷ்மன் கிரியெல்ல நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வரவு-செலவுத் திட்டத்தின் பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு மற்றும் அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணை ஆகியவை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாகக் கூறியவை வருமாறு:-

தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்படும்போது அதைப் புலிகள் செய்தனர் என்று அரசு கூறுகின்றது.

இந்த நாட்டில் தற்கொலை குண்டுதாரிகளாக இருப்பவர்கள் புலிகள் மாத்திரமல்ல என்பதை நாம் முதலில் விளங்கிக்கொள்ள வேண்டும்.

வேறு சிலரும் தற்கொலை குண்டுத் தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

கருணா அணியினரின் தற்கொலைக் குண்டுத் தாக்குதலால் வன்னிப் புலிகள் 6 பேர் மட்டக்களப்பில் கொல்லப்பட்டனர் என்று 2006ஆம் ஆண்டு சிங்கள பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

இதன் காரணமாகவே நாம் ஜானக பெரேராவின் கொலை தொடர்பில் சந்தேகப்படுகின்றோம் - என்றார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் சபையில் அமர்ந்திருந்த கருணா அம்மான் எதுவும் பேசாமல் கிரியெல்லவின் உரையைக் கேட்டு சிரித்துக் கொண்டிருந்தார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 29.11.1942

மறைவு: 29.11.2006

திதி: நவமி (06.12.2008)

### அமரர் கந்தையா மகேஸ்வரன்

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

புதிய செம்மணி வீதி,
முதலாம் ஒழுங்கை,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள். (80444)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 17 . 09 . 1935



மறைவு 18 . 11 . 2007

### அமரர் யோசப் அருளானந்தம்

(துரை ஐயா)

திதி: 06.12.2008

ஆண்டொன்று உருண்டோடினாலும் ஐயா!
ஆறாது எம் கவலைகள் மாறாது எம், சோகங்கள்
தேடுகின்றோம் அனுதினமும் ஆறவில்லை எம் மனங்கள் ஐயா!
எப்போ நீர் வருவீர் ஆசையுடன் காத்திருப்போம்.

இல.4, றக்கா வீதி,
யாழ்ப்பாணம். (80473)

என்றும் உங்கள் நினைவில் சங்கமிக்கும்:
குடும்பத்தினர்.

## வீடு வாடகைக்கு

இல.72, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தில் சிறிய வீடு வாடகைக்கு உண்டு.
தொலைபேசி இல. 060 221 8456 (80459)

## விற்பனைக்கு

சண்டிலிப்பாய், லீலா பேக்கரிக்கு நேர்முன் ஒழுங்கையில் (Driver) சின்னப்புவின் காணியிலுள்ள முதிர்ந்த பனை மரங்கள் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: சி.நாகராசா,
சின்னப்பிள்ளையார் ஒழுங்கை, V.M.வீதி, பருத்தித்துறை.

## வாடகைக்கு

யாழ்.நாவலர் வீதி (பருத்தித்துறை வீதிக்கு அருகில்), இல.266, மேல் மாடி வீடும், இல.149, கஸ்தூரியார் வீதியில் 40' அகலமும் 60' நீளமும் கொண்ட மேல்மாடி வீடும், அதன் உட்புறக் கடைகளும் உடன் வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 021 222 3479 (தவம்),
0776042103. (80453)

## சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், டிசெ.6

சாவகச்சேரி நகரசபை வளாகத்தில் அமைந்துள்ள விறுமர் ஆலய மணவாளக் கோல சங்காபிஷேகம் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை காலை 6 மணி தொடக்கம் நடைபெறும்.

சிவஸ்ரீ தியாக உமாசுதக் குருக்கள் தலைமையில் கிரியைகள் நடைபெறும்.

தொடர்ந்து ''மங்கலநாதம்'' என்னும் நூல் வெளியீடும் ஆய்வுரையும் இடம் பெறும். (202-207)

## செயலமர்வு

யாழ்ப்பாணம், டிசெ.6

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் அடுத்த வருடம் தரம்-8 வகுப்புகளில் கணிதம் கற்பிக்கவுள்ள ஆசிரியர்களுக்கு புதிய கல்விச் சீர்திருத்தம் தொடர்பான இருநாள் செயலமர்வு நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் செவ்வாய், புதன்கிழமைகளில் நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (202-207)

## வினைத்திறன் பரீட்சைகள்

யாழ்ப்பாணம், டிசெ.6

மத்திய மகாகாண அரச திணைக்கள அலுவலகங்களில் கடமையாற்றும் அலுவலகப் பணியாளர் சேவை வகுப்பு III, II ஆகியவற்றைச் சேர்ந்தவர்களுக்கான வினைத் திறமை காண்தடைப்பரீட்சை எதிர்வரும் ஜனவரி மாதத்தில் நடத்தப்படவுள்ளது.

அலுவலகப் பணியாளர்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 22ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக் குழுவின் செயலாளர் சி.திருவாகரன் கேட்டுள்ளார். (202-207)

* * *

யாழ்ப்பாணம், டிசெ.6

வடக்கு மகாகாண பொதுச் சேவையின் இலங்கை தொழில் நுட்பவியல் சேவை வகுப்பு II பிரிவு 'ஆ' பிரிவு 'அ' ஆகியவற்றின் அலுவலர்களுக்கான வினைத் திறமை காண்தடைப்பரீட்சை எதிர்வரும் ஜனவரி மாதத்தில் மாகாண பொதுச்சேவைகள் ஆணைக் குழுவினால் நடத்தப்படவுள்ளது.

விண்ணப்பங்களை எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் நிறுவனத் தலைவர் ஊடாக அனுப்பி வைக்குமாறு மகாகாண பொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் சி. திருவாகரன் அறிவித்துள்ளார். (202-207)

## இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்

### யாழ்ப்பாணம்

### வழங்குநர்களைப் பதிவு செய்தல்- 2009

### REGISTRATION OF SUPPLIERS- 2009

இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனத்தின் கொங்கிறீற் உற்பத்திப் பகுதிக்கும் யாழ்.அலுவலகத்திற்கும் 2009ஆம் ஆண்டு காலப்பகுதிக்குத் தேவையான பின்வரும் பொருள்களையும் சேவையினையும் வழங்கக் கூடிய வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

**பொருள்கள்**

01. உடைந்த சல்லிக்கல் (Crushed Metal) 1/2'', 3/4
02. மணல்
03. மணல்காடு மணல்
04. முறுக்குக் கம்பிகள் (Tore Steel)
05. மென் உருக்குக் கம்பிகள் (M.S.Bars)
06. கட்டுக் கம்பிகள் (Binding Wire)
07. கட்டட வேலைக்கான உபகரணங்கள்
08. மின்சாரப் பொருள்களும் மின்சார உபகரணங்களும்
09. வாகன உதிரிப்பாகங்கள் (Mitsubishi Double Cab) வாகனத்திற்குரியவை
10. ரயர்களும் ரியூப்களும் (Tyre & Tubes)
11. துவிச்சக்கர வண்டி உதிரிப்பாகங்கள்
12. காகிதாதிகளும் அலுவலகப் பாவனைப் பொருள்களும் (Stationary and Office Requisites)
13. அலுவலகத் தளபாடங்கள்
14. கணனிப் பொருள்களும் உதிரிப் பாகங்களும் (Computer Spares)

**சேவை**

01. வாகனம் பழுது பார்த்தல்
02. கணனி பழுது பார்த்தல்

மேற்கூறப்பட்ட பொருள்களையும் சேவையினையும் வழங்குவதற்கான கூட்டுத்தாபனத்தில் பதிவு செய்துகொள்ள விரும்புபவர்கள் 24.12.2008ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கிடைக்கத்தக்க வகையில் தங்களின் பெயர், முழுவிலாசம், வழங்கப்படக்கூடிய பொருள், சேவை விவரம் கொண்ட விண்ணப்பத்தினை பின்வரும் விலாசத்திற்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

விநியோக உத்தியோகத்தர்,
இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்,
கே.கே.எஸ்.வீதி,
இணுவில்.
தொலைபேசி இல. 0212227890 (சி/555867)

## ஆறாவது ஆண்டின் ஆறாத்துளிகள்



மண்ணுலக முத்தெனவே
05.04.1926

விண்ணுலக வித்தெனவே
13.12.2002

திதி: நவமி (06.12.2008)

நெடுந்தீவைச் சேர்ந்த

### அமரர் தனுக்கோடி புண்ணியமூர்த்தி

(இளைப்பாறிய அரச மருந்துக் கலவையாளர்)

வாடியே வருபவரை நாடியே நலமாக்கி விட்டு
ஓடியே சென்றதெங்கே ஒளிமுகம் மனையிலிங்கே
ஆண்டுகள் ஆறானாலும் ஆறவில்லை எம்மனமோ
அனலாகத் துடிக்கின்றோம் அன்புமுகம் காண்பதற்கே!

19/1, சாஸ்திரியார் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (80467)

ஆறாண்டு அகன்றாலும் அகலாத நினைவோடு:
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவு

### திருமதி புஸ்பராணி மதியாபரணம்

மலர்வு: 01.01.1960



உதிர்வு: 06.11.2008

07.12.2008

முந்தித் தவமிருந்து முந்நூறு நாள்
சுமந்த அன்னையே!
நீங்கள் எமை விட்டுப் பிரிந்து 30 நாள்கள்
இருள் யுகமாய்ப் போனதம்மா!
இறையொளி என்னும் பேரொளியில்
உம் ஆன்ம ஒளி சேர்ந்திட எம் பிரார்த்தனைகள்.

ஓம் சாந்தி!

06.11.2008 அன்று சென்னையில் இறைபதமெய்திய எம் அன்னையின் பிரிவுச் செய்தி கேட்டு எமக்கு நேரிலும், தொலைபேசியிலும் ஆறுதல் அளித்தவர்கள் மற்றும் பல வழிகளிலும் எமக்கு உதவிய நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (07.12.2008) ஞாயிற்றுக் கிழமை சென்னையில் இடம்பெறும். அன்றையதினம் யாழ்ப்பாணத்தில் அன்னாரது இல்லத்தில் இடம்பெறும் மதியபோசன நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்களைக் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நி.மு.:
3ஆம் கட்டை,
மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.

த.மு.: 3/253, 11ஆவது ஒழுங்கை,
பச்சையப்பன் தெரு,
பெரியார் சாலை, பாலவாக்கம்,
சென்னை - 41.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### இஸ்தாக்கி நவரெட்ணம் கபிரியேல்

பழைய வாடி வீட்டுத்தெரு, மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட இஸ்தாக்கி நவரெட்ணம் கபிரியேல் 01.12.2008 அன்று புத்தளத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இஸ்தாக்கி- இராசம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை -வள்ளியம்மை தம்பதியரின் மருமகனும் திருஞானசோதியின் அன்புக் கணவரும் Dr. நிர்மலா, மதிவளன் (பொறியியலாளர்), திவாகரன், Dr.சாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் கமிலஸ் லோகநாதன் (பட்டயக் கணக்காளர்), டெனி சர்மிளா, தயானந்தி, Dr. கலைவாணி ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற இராசதுரை, இரத்தினபூபதி, காலஞ்சென்ற திருவிளங்கம், சிவசோதி ஆகியோரின் மைத்துனரும் கரிஸ், மிதுரன், கீர்த்தனா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் 03.12.2008 அன்று புத்தளத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆஸ்பத்திரி ஒழுங்கை,
இணுவில் மேற்கு,
இணுவில். (80472)

தகவல்:
திருமதி த.இரத்தினபூபதி
(கமலம்),
க.சிவசோதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35 தொடக்கம் 37 வரையான வினாக்களுக்கு பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.

A - ஆளுனர் கேக்குலீஸ் றொபின்சன்
B - வெஸ்ட் றிஜ்வே
C - வில்லியம் கிரேகிரி
D - டொரிங்டன்
E - எட்வட்பாண்ஸ்
F - வில்மட் ஹோட்டன்
G - ஹென்றிவாட்
H - றொபட்பிறவுன்றிக்
I - தோமஸ் மெயிற்லண்ட்
J - ஆதடர் கோடன்

35. இலங்கையில் பிரித்தானிய ஆட்சிக்காலத்தின் போது நீர்ப்பாசனத் திணைக்களத்தை ஆரம்பித்த வரையும்,பேராதனை நுவரெலியா குறுக்கு வீதியை அமைத்தவரையும் சரியாகக் காட்டும் விடை.
1) A யும் G யும் 2) C யும் D யும் 3) C யும் Fஉம் 4) B யும் Fஉம்

36. கண்டி - கொழும்பு பெரு வீதி அமைக்கக் காரணமானவரும் இலங்கையில் நிர்வாகத்துறையில் சிறப்புப் பெற்ற பிரித்தானிய ஆள்பதிலையும் காட்டும் சரியான விடை
1) E யும் Dயும் 2) E யும் A யும் 3) D யும் G யும் 4) Eயும் I உம்

37. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் 10 வருடங்களுக்குள் திருப்பிக் கொடுக்கும் கடன் திட்டத்தை ஆரம்பித்துவரும் 164க்கு மேற்பட்ட மதகுகள் அமைத்த பெருமைக்குரியவரையும் சரியாகக் காட்டும் விடை
1) A யும் B யும் 2) F உம் Jயும் 3) C யும் G யும் 4) A யும் J யும்

38 தொடக்கம் 40 வரையிலான வினாக்களுக்கு பின்வரும் ஆண்டுகளை அடிப்படையாக வைத்து விடை தருக.
A - 1934 B - 1914 C - 1917 D - 1911 E - 1938 F - 1945

38. ''பூயி'' என்ற பிஞ்சு அரசவம்ச சிறுவனான இளவரசன் கடத்தப்பட்ட ஆண்டும் ஐக்கிய நாடுகள் சபை தோன்றிய ஆண்டும் முறையே சரியாகக் காட்டும் விடை,
1) C யும் F யும்
2) A யும் F யும்
3) D யும் F யும்
4) B யும் F யும்

39. முதலாம் உலகப்போர் ஆரம்பமான ஆண்டும், மாஓசேதுங்கின் நீண்ட நடைப்பயணம் ஆரம்பித்த ஆண்டினையும் ஒழுங்கு முறையாகக் காட்டும் விடைத்தொகுதி,
1) B யும் C யும்
2) B யும் A யும்
3) C யும் F யும்
4) B யும் A யும்

40. ரஷ்யாவில் அக்டோபர் புரட்சி ஏற்பட்ட ஆண்டு, இத்தாலிய சர்வாதிகாரி தூக்கிலிடப்பட்ட ஆண்டும் முறையாகக் காட்டும் விடைத்தொகுதி,
1) C யும் B யும்
2) C யும் F யும்
3) A யும் C யும்
4) D யும் F யும்

## வரலாறு II (மூன்று மணித்தியாலம்)

* (அ) பகுதி வினாவிற்கு கட்டாயமாக விடையளித்தல்வேண்டும்.
* (ஆ) பகுதியில் உள்ள ஐந்து வினாக்களில் எவையேனும் மூன்றிற்கும்
* (இ) பகுதியில் உள்ள நான்கு வினாக்களில் எவையேனும் இரண்டிற்கும்
* முதலாம் வினா உட்பட எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை எழுத வேண்டும்.

### பகுதி - II (அ)

1) தரப்பட்டுள்ள இலங்கைப்புற உருவப்படத்தில் பின்வரும் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற இடங்களைக் குறித்துப் பெயரிடுக.
பாகியன்கல, பெலிலன, ஊராத்தொட்ட, யாப்பகூவ, ஜஜ்ரந்தி,வேத்தியகிரி, அத்துகல்புரய, பராக்கிமபுர, உருவெல, கங்காதிலக.

2) தரப்பட்டுள்ள உலகப்புறவுருவப்படத்தில் பின்வரும் இடங்களைக் குறித்து பெயரிடுக.
லிஸ்பன், ஹங்கேரி, அந்தமான் தீவு, போலந்து, எதன்ஸ், கேரளா, இஸ்தான்புல், ஜோர்ஜியா

3) A, B, C, D ஆகிய படங்களை அடிப்படையாகக்கொண்டு அதன் கீழ் உள்ள வினாக்களுக்கான விடையை சுருக்கமாக எழுதுக.

A

1) படத்தில் காணப்படும் இவரது பெயர் என்ன?
2) இவர் இந்தியாவில் 1498 ஆம் ஆண்டு அடைந்த துறைமுகத்தின் பெயர் என்ன?
3) இவர் கடல் பிரயாணங்களை யாருடைய கடல் பாதையை பின்பற்றி மேற்கொண்டார்?

B

1) இவ்விகாரையின் பெயர் என்ன?
2) இது எந்த யுகத்திற்குரியது?
3) எம்மன்னன் ஆட்சிக்காலத்தில் இது கட்டப்பட்டதாக வரலாறு கூறுகிறது?

C

1) இப்படத்தில் காட்டப்படுபவர் யார்?
2) இவர் புரட்சிகரமான சோசலிஸ கருத்துக்களை பரப்பிய நாடு எது?
3) அந்நாட்டில் இவரது ஆட்சியின் பின் பொறுப்பேற்றவர் யார்?

D

1) இக்கட்டடத்தின் பெயர் என்ன?
2) இந்தியாவில் எந்த மாநிலத்தில் உள்ளது?
3) இதைக் கட்டிய மன்னனின் பெயர் என்ன?

### பகுதி -II (ஆ) இலங்கை வரலாறு

இப்பகுதியில் மொத்தம் ஐந்து வினாக்கள் உள்ளன. விரும்பிய எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.

01. ( திஸ்ஸாவாவி, அபயவாவி, நாச்சதூவகுளம், கந்தளாய் குளம், பராக்கிரம சமுத்திரம், கலாவாவி, கிரித்தலைக்குளம்)
மேலே தரப்பட்டுள்ள விடயங்களை கருத்திற் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு பொருத் தமான விடையைத் தெரிவு செய்து ஒழுங்கை முறைப்படி எழுதுக.
1) A. அவுக்கணபுத்தர் சிலையானது இக்குளத்திற்கு அருகாண்மையில் உள்ளது.
B. இலங்கை வரலாற்றில் முதலாவதாகக் கட்டிய குளமாகக் கருதப்படுவது.
C. ரன்மசு பூங்காவுக்கு சுரங்கக்கால்வாய் வழியாக நீர் வழங்கல் நடவடிக்கைகளைமேற்கொள்ளும் குளமாக கருதப்படுவது.
2) புராதனக் காலத்தில் நீர்ப்பாசனத்துறையில் அதிக உன்னதமான நுட்பமுறைகள் பயன்படுத்தப் பட்டுள்ளது என்பதற்கான சான்றுகள் எவையேனும் நான்கு தருக.
3) நீர் குறிப்பிட்ட சான்றுகளில் எவையேனும் இரண்டினை தந்து அதன் விசேட அம்சங்களை சுருக்கமாக விளக்குக.
4) '' புராதன காலத்தில் இலங்கையில் பிரமாண்டமான நீர்ப்பாசனத்தொகுதி ஒன்று அமைக்கப் பட்டிருந்தது போல் நவீன காலத்தில் அவ்வாறான விருத்திமிக்கத் தொகுதியொன்றை காண்பது மிகவும் அரிதாகவே உள்ளது'' இக் கூற்றினை இரண்டு காரணிகளின் உதவியுடன் சுருக்கமாக விளக்குக.

02. (அநுராதபுரம் , பொலன்னறுவ, யாப்பகூவ, குருணாகல், தம்பதெனியா,கோட்டை, கம்பளை)
இலங்கையில் புராதனகால இராசதானிகள் காணப்பட்ட இடங்களே மேலே தரப்பட்டுள்ளன. இதனை அடிப்படையாகக்கொண்டு முதலாம் வினாவில் உள்ள A, B, C பகுதிகளுக்கான பொருத்தமான விடையை அதே ஒழுங்கில் எழுதுக.
1) A - கவிசிலுமின காவியம் எழுதப்பட்டது.
B - சிங்கள இலக்கியங்களில் ஒன்றான பாறம் சதகய எழுதப்பட்டது.
C - புனித தலதாமாளிகையை சுற்றி வளைந்து புனிததந்ததாதுவையும் ஏனைய செல்வங்களையும் பாண்டிய நாட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டது.
2) இலங்கையில் இராசதானிகள் புராதன காலத்தில் தென்மேற்குநோக்கி இடம்பெயரவைப்பதில் செல்வாக்கு செலுத்திய எவையேனும் நான்கு காரணிகளைத் தருக.
3) நீர் குறிப்பிட்ட காரணிகளுள் இரண்டினைத் தெரிவு செய்து அது எவ்வாறு இராசதானிகள் தென்மேற்கு நோக்கிய இடப்பெயர்வுக்கு காரணமாய் அமைந்தது என சுருக்கமாய் விளக்குக.
4) இராஜட்ஷடயிலிருந்து மக்கள் ஈரவலயத்தினை நோக்கி குடிபெயர்ந்தபோது அவர்களது ''வாழ்க்கை கோலத்திலும் சமூக அமைப்பிலும் குறிப்பிடத்தக்க அளவு மாற்றங்கள் நிகழவில்லை'' இக் கூற்றை நீர் ஏற்பீரா; இரு காரணிகள் உதவியுடன் சுருக்கமாக விளக்குக.

03. 1) A - கண்டியிலும் காலியிலும் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தின்போது தர்மராஜக்கல்லூரியை நிறுவியவர்
B - பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் பைபிளை பேர்ஸிவல் அடிகளாருடன் இணைந்து தமிழில் மொழி பெயர்த்தவர்.
C - 1875 ஆம் ஆண்டு பிரித்தானியர் ஆட்சிக்காலத்தின்போது பேலியகொடை வித்தியாலங்கார பிரிவேனாவை ஆரம்பித்தவர்.
(அநகாரிக தர்மபால, ஒல்கொட், விபுலானந்த அடிகள், சேர் பொன்னம்பலம் இராமநாதன், குணானந்ததேர், இரத்மலான ஸ்ரீ தம்மாலோக்கதேரர் - சுமங்களதேரர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்.)
மேலே தரப்பட்டுள்ள A, B, C ஆகிய வினாக்களுக்கு பொருத்தமான நபர்கள் யார் என தெரிவு செய்து அதே ஒழுங்குப்படி தருக.
2) பிரித்தானியர் இலங்கையை ஆட்சிசெய்த காலத்தில் பௌத்த, இந்து, இஸ்லாமிய கலாசார மறுமலர்ச்சி இயக்கங்கள் உருவாகியமைக்கான காரணங்கள் எவையேனும் நான்கு தருக.
3) பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் மது ஒழிப்பு இயக்கம் உருவாக்கியமைக்கான எவையேனும் இரு காரணிகளை குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.
4) இலங்கையில் பிரித்தானியர் ஆட்சிகாலத்தின்போது தோன்றிய கலாசார மறுமலர்ச்சி இயக்கத்தில் பௌத்த மதத்தின் மறுமலர்ச்சிக்காக பாடுபட்டவர்கள் பலபேர் இருந்தாலும் விசேடமாக கேணல் ஒல்கொட் அவர்களையும் அநகாரிக தர்மபாலாவையும் முன்னிலையில் வைத்தே பௌத்த இயக்கங்கள் நோக்குகிறது. இவ்விருவர்களை அடிப்படையாய் கொண்டு சுருக்கமாய் விளக்குக.

04. 1) புராதனக்கால கண்டியுகத்தின் போது நிலங்களின் வகைகள் பலதரப்பட்டதாக இருந்தது. அந்த வகையில் அவை பின்வருமாறு:-
A - அரச மாளிகையின் உபயோகத்துக்கென ஒதுக்கப்பட்ட நிலம்.
B - விற்க முடியாததும், நன்கொடையாக கொடுக்க முடியாததுமான நிலம்.
C - சாதாரண மக்கள் பரம்பரை பரம்பரையாக பயன்படுத்தப்பட்டு வந்த நிலங்கள். இவற்றின் பெயர்கள் யாவை என அடைப்புக்குள் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதே ஒழுங்கு முறையில் எழுதுக.
2) ''புராதன கண்டிய யுகத்தில் குற்றவாளிகளுக்கு வழங்கப்பட்ட தண்டனைகள் எவையேனும் நான்கு தருக.
3) இலங்கையில் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக கம்பனிக்கு எதிராக கிளர்ச்சி எழ காரணம் வருமானம் திரட்ட சென்னை நிர்வாகிகளை நியமித்தமையும் - புதிய வரிகளை அறவிட்டமையுமே ஆகும். இக்கூற்றினை சுருக்கமாக ஆராய்க.
4) 1848ஆம் ஆண்டு பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட விவசாயக் கிளர்ச்சிக்கு கோல்புறுக் ஆணைக்குழுவின் சிபாரிசுகளும், 1840ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட தரிசுநில சட்டமும் காரணமாக எவ்வாறு அமைந்தது என சுருக்கமாக விளக்குக .

05. 1) பிரித்தானியர் ஆட்சிக்காலத்திலும் இலங்கை சுதந்திரமடைந்த பின்னும் பின்வரும் ஆண்டுகளில் சந்தித்த யாப்பு முறைகளை அதே ஒழுங்கில் தருக.
a. 1947
b. 1972
c. 1978
2) இலங்கை ஜனாதிபதியினால் வழங்கப்படும் நியமனங்கள் எவையேனும் நான்கு தருக.
3) ''இலங்கை ஜனநாயக நாடாக இருந்தாலும் தூய ஜனநாயகத்தை காணமுடியாமல் உள்ளது'' என்பது அரசியல்வாதிகளின் கருத்து. இக்கூற்றினை இரு காரணிகளை அடிப்படையாய் கொண்டு சுருக்கமாய் விளக்குக.
4) 1972 ஆம் ஆண்டு, 1978 ஆம் ஆண்டு இலங்கை சந்தித்த யாப்புகளின் பண்புகளை சுருக்கமாக தருக.

### பகுதி - II (இ) உலக வரலாறு

இப்பகுதியானது நான்கு வினாக்களைக் கொண்டது. விரும்பிய எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.

06. 1) சுருக்கமான விடை தருக,
A. - மத்தியதரைக்கடல் பிரதேசத்திலிருந்து இந்தியாவுக்கு ஆரியர்கள் வந்த கணவாய் எது?
B. - இந்தியாவில் மேகதூதம் காவியம் எழுதப்பட்ட யுகம்.
C. - இந்தியாவில் காணப்பட்ட 16 குடியேற்றங்களில் காசி குடியேற்றத்தின் தலைநகரம் எது?
2) புராதன இந்தியாவில் தொழில்கள் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டிருந்த நான்கு வகைக் குலங்களும் எவை?
3) ''மகாத்மாகாந்தியானவர் இந்திய வரலாற்றில் சிறப்பான ஓர் இடத்தைப் பெற்றுள்ளார்'' இக்கூற்றினை இரு காரணிகள் உதவியுடன் சுருக்கமாய் விளக்குக.
4) ''இந்தியாவில் பல்வேறு அரசியல் யுகங்கள் நிலவிவந்தாலும் குப்தர் யுகம் ஒரு சிறப்பான இடத்தைப் பெறுகிறது'' இரு காரணிகளின் உதவியுடன் விளக்குக.

07. 17ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் இந்தியாவில் பல்வேறு வர்த்தக நிலையங்கள் ஐரோப்பியரால் உருவாக்கப்பட்டது. அவ்வாறு உருவாக்கப்பட்ட வர்த்தக நிலையங்கள் அடைப்புக்குள் தரப்படுகிறது. அவற்றினைக் கருத்திற் கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடையினை ஒழுங்கு முறைப்படி எழுதுக. (கோவா, நாகபட்டினம், புதுச்சேரி, ஹூக்ளி)
1) A. - டச்சுக்காரர் அமைத்த வர்த்தக நிலையம் ஒன்று.
B. - போர்த்துக்கேயர் அமைத்த வர்த்தக நிலையம் ஒன்று.
C. - பிரெஞ்சுக்காரர்கள் அமைத்த வர்த்தக நிலையம் ஒன்று.
2) பிரித்தானியர் இந்தியாவினை ஆட்சி செய்த காலத்தில் தோன்றிய இந்திய தேசியக் காங்கிரஸின் நோக்கங்கள் எவையேனும் நான்கு தருக.
3) ''ஜப்பானில் கொண்டு வரப்பட்ட மெஜிஜி சீர்திருத்தமானது ஓர் ஒளிமயமான காலத்தை உருவாக்கியது'' இரு காரணிகளின் உதவியுடன் சுருக்கமாக விளக்குக.
4) ''1959ஆம் ஆண்டு காலப்பகுதியில் சீனாவில் கொண்டுவரப்பட்ட முன்னோக்கிப்பாய்ச்சல் வேலைத் திட்டமானது பல்வேறு செயல்திட்டங்களை முன்னெடுத்தாலும் ஒரு திருப்தியற்ற திட்டம்'' என சீன மக்கள் கூறினர் இதற்கான காரணத்தை 2 விடயங்கள் அடிப்படையில் சுருக்கமாக விளக்குக.

08. 1) மறுமலர்ச்சி என்பதால் நீர் கருதுவது என்ன?
2) ஐரோப்பாயாவில் மறுமலர்ச்சி ஏற்பட்ட துறைகள் எவையேனும் நான்கு தருக.
3) ''ஐரோப்பாவில் நிலவிவந்த மானியமுறையானது சிலுவை யுத்தம் மற்றும் அங்கு நிலவிய பஞ்சம், கொள்ளை நோய்களால் மறைவடைந்தது'' எனக் கூறுவது பொருத்தமா, இரு தலைப்பின் அடிப்படையில் சுருக்கமாய் விளக்குக.
4) ''ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சியானது குறித்த ஒரு துறைக்குள் நின்று விடவில்லை. அது பரந்துபட்டதாகவே காணப்பட்டது'' .இக்கூற்றினை இரு தலைப்பின் உதவியுடன் சுருக்கமாய் விளக்குக.

09. பின்வரும் நிகழ்வுகள் ஏற்பட்ட ஆண்டுகளை ஒழுங்கு முறைப்படி எழுதுக.
1) a. சரஜிவோ கொலை
b. பிரான்சியப் புரட்சி
c. ரஷ்ய புரட்சி
2) ரஷ்ய புரட்சி ஏற்பட்டமைக்கான காரணங்கள் எவையேனும் நான்கு தருக.
3) பிரான்சிய புரட்சிக்கு 16ஆம் லூயி எவ்வாறு காரணமானான் எனவும், பிரான்சியப் புரட்சி உலகில் பல நாடுகளில் மக்கள் ஆட்சி ஏற்படக் காரணமானது எனவும் சுருக்கமாக விளக்குக.
4) ''உலக நன்மைக்காக அமைக்கப்பட்ட சர்வதேச சங்கமானது தமது நோக்கங்களை நிறைவேற்றுவதில் அனேக சந்தர்ப்பங்களில் தவறியுள்ளது.'' இக் கூற்றினை இரு காரணிகள் உதவியுடன் சுருக்கமாக விளக்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# Special Guidance for O/L 2008 Students

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மாதிரிப் பரீட்சை - 2008 டிசம்பர்


General Certificate of Education (Ord.Level) Model Examination - 2008 December

## வரலாறு -1

One hour

ஆக்கம் :- திரு.R.றமேஸ், கண்டி/இந்து தேசிய கல்லூரி, புசல்லாவை.

தரப்பட்டுள்ள உலக வரைபடத்தைப் பயன்படுத்தி 1-5 வரையான வினாக்களுக்கு விடையளிக்குக.





01. மாஓ சேதுங் தனது கட்சிக் கொள்கைகளைப் பரப்பிய நாட்டைக் குறிக்கும் இலக்கம்,
1) 3 2) 4 3) 7 4) 2

02. பாஸிசவாதக் கருத்துக்களைப் பரப்பி இத்தாலிய சர்வாதிகாரியாக இருந்த முசோலினியையும் அவனது மனைவியையும் புரட்சிக்காரர்கள் சுட்டு மின்கம்பத்தில் உடல்களைத் தொங்கவிட்டிருந்த நகரத்தைக் குறிக்கும் எழுத்து,
1) B. 2) C. 3) F. 4) E.

03. புராதன ஜேர்மனியானது கிழக்கு, மேற்கு என்ற இரு பிரிவுகளாக இருந்தது. இவ்விரு பிரிவுகளையும் பிரிக்கும் எல்லையாக பேர்லின் சுவர் காணப்பட்டது. பேர்லின் சுவர் அமைந்துள்ள இடத்தைக் காட்டும் ஆங்கில எழுத்து,
1) E. 2) C. 3) A. 4) D.

04. கி.பி 17ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலப்பகுதியில் இலங்கையை ஏகாதிபத்தியக் கொள்கையின் கீழ் அடிமைப்படுத்தி வைத்திருந்த நாட்டைக் குறிக்கும் ஆங்கில எழுத்து,
1) C. 2) E. 3) A. 4) D



05. மீகெட்டுவத்த குணானந்ததேரரால் பாணந்துறை விவாதம் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நடத்தப்பட்டது. இந்த விவாதத்தின் புரட்சிகரமான கருத்துக்களை வானொலி வாயிலாகவும், பத்திரிகை வாயிலாகவும்கேட்டு கவரப்பட்டு இலங்கை வந்த கேணல் ஸ்டில் ஒல்கொட்டின் தாய்நாட்டைக் குறிக்கும் எழுத்து,
1) A. 2) F.
3) D 4) B.

06. கண்டிய மன்னன் ஸ்ரீ விக்ரம இராஜசிங்கன் கைதுசெய்யப்பட்ட இடமான மெதமாநுவர என்ற இடத்தைக் காட்டும் சரியான இலக்கம்,
1) 5 2) 2
3) 3 4) 4

07. 1602 ஆம் ஆண்டு இலங்கைக்கு வருகைதந்த ஒல்லாந்த இனத் தளபதி ஸ்பில் பேர்ஜன் தான் வந்திறங்கியதாகக் கருதும் துறை முகத்தைக் குறித்துநிற்கும் எழுத்து,
1) W. 2) X.
3) V 4) Y.

08. ஆரியர் கூட்டத்தில் ஒருவரான உருவெல என்ற ஒருவனால் உருவெல கிராமம் அமைக்கப்பட்டது. கோண நதி எனும் பெயரில் இருந்து தற்போது கலா ஓயா என அழைக்கப்படும் நதியைக் குறிக்கும் எழுத்து,
1) B. 2) C. 3) D. 4) A.

09. இலங்கையைச் சோழர்கள் ஆட்சிசெய்த காலத்தில் இந்துமதச் செல்வாக்கால் எருது நீக்கப்பட்டு செதுக்கப்பட்டிருக்கும் சந்திரவட்டக்கல் காணப்படும் இடத்தைக் குறிக்கும் இலக்கம்,
1) 6 2) 4 3) 7 4) 1

10. புதுறுவகலை புத்தர்சிலை காணப்படும் இடத்தைக் காட்டும் ஆங்கில எழுத்து,
1) I. 2) G. 3) F. 4) E.

11. இலங்கையை ஆட்சிசெய்த வலகம்பா மன்னனைப் பற்றிக் கூறப்படும் கூற்றுக்களில் மிகப் பொருத்தமான கூற்று எது?
1) பௌத்தம் பரவ வழிவகுத்ததுடன் அதிக விகாரைகளைக் கட்டியவன்.
2) திராவிடர்களிடமிருந்து தான் இழந்த நாட்டைத் தானே மீட்டவன்.
3) இலங்கை வரலாற்றில் பாரிய குளங்களைக் கட்டுவதற்கு அடித்தளமிட்டவன்.
4) சோழர்களின் பிடியிலிருந்து இராஜரட்டையை மீட்டவன்.

12. இறுகல் குலதிலக பிரிவெனா என்பது,
1) தெவிநுவரப் பிரதேசத்தில் இலக்கிய மறுமலர்ச்சிக்கு வழிவகுத்த கல்விப்பீடம்.
2) சேனன், குத்திக்கன் காலத்தில் அழிவுக்கு உட்பட்ட விகாரைப் பிரிவெனா.
3) இலங்காதிலக விகாரைக்கு அண்மையில் பிக்குமார் கல்விகற்ற கல்விப் பிரிவெனா.
4) பொலன்நறுவ கல் விகாரைக்கு அண்மையிலுள்ள பிரிவெனா.

13. அநுராதபுரத்தில் எப்பா ,மாப்பா ஆகியோர் பற்றிய தவறான கூற்று பின்வருவனவற்றுள் எது?
1) அரசனுடைய சகோதரர்களுக்கு வழங்கப்பட்ட பதவிகள் இவை.
2) அரசன் இறந்தால் மாப்பா சிங்காசனம் ஏறுவான்.
3) அரசனின் விசுவாசமுள்ள இருவருக்கு வழங்கப்பட்ட பதவிகள் இவை.
4) இளைய சகோதரர்கள் றுகுணு, மலையரட்டைக்கு எப்பாக்களாக நியமிக்கப்படுவர்.

14. 15 ஆம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தபோது இலங்கை 3 அரசியல் பிரிவுகளின் கீழ் இயங்கிவந்தது. அவற்றுள் ஒன்றான கோட்டை இரசதானியின் எல்லை,
1) கல்யாணி நதிக்கும் வளவை கங்கைக்கும் இடையில்.
2) தெதுறுஓயாவுக்கும் வளவகங்கைக்குமிடையில்.
3) மல்வத்துஓயாவுக்கும் வளவகங்கைக்குமடையில்.
4) தெதுறுஓயாவுக்கும் வளவகங்கைக்குமிடையில்.

15. புராதன கண்டி யுகத்தில் திருமண முறையானது மூன்று வகையில் காணப்பட்டது. இதில் பின்ன என்ற திருமணமானது எம்முறையில் இருந்தது?
1) மணமகள் மணமகன் வீட்டில் தங்கும் முறை.
2) மணமகன் மணமகள் வீட்டில் தங்கும் முறை.
3) மணமகனும் மணமகளும் தனியே தங்கும் முறை.
4) பலபேர் ஒரு பெண்ணுக்குக் கணவர்களாக இருக்கும் முறை.

16. கண்டி இராசதானியில் வலிவிற்ற ஸ்ரீசரணங்கதேரர் உபசம்பதா நிகழ்வினை அடைந்த பின் பௌத்த சமயத்துக்கு அரும்பெரும் தொண்டாற்றினார். இவரது பணிகள் மேற்கொள்ளப்பட்ட காலத்தில் கண்டி மன்னனாக இருந்தவன் யார்?
1) ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கன். 2) கீர்த்திஸ்ரீ ராஜசிங்கன்.
3) கீர்த்திஸ்ரீ நரேந்திரசிங்கன். 4) முதலாம் விமலதர்மசூரியன்.

17. இலங்கை லரலாற்றில் புராதனகாலத்தில் சிங்கள மக்களால் உருவாக்கப்பட்ட ஒரு கிராமியப் பழமொழியானது பின்வருமாறு கூறப்பட்டது. 'இஞ்சி கொடுத்து மிளகாய் வாங்கியது போல' என இப் பழமொழியுடன் தொடர்புடையதாக நீர் கருதும் இலங்கை அரசனும் அந்நிய இனத்தவரையும் சரியாகக் கூறும் ஒழுங்கு பின்வருவனவற்றுள் எது?
1) முதலாம் இராஜசிங்கன், ஒல்லாந்தர். 2) 2 ஆம் இராஜசிங்கன், ஒல்லாந்தர்.
3) ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கன், ஆங்கிலேயர். 4) செனரத், போர்த்துக்கேயர்.

18. இலங்கை வரலாற்றில் சிங்கள இலக்கியங்களின் பொற்காலம் நிலவிய இராசதானியாகக் கூறப்படுவது,
1) குருணாகலை. 2) தம்பதெனியா. 3) கோட்டை. 4) கம்பளை.

19. ஜானகிஹறன, சியபஸ்கர என்னும் பெயரால் அழைக்கப்படுபவை,
1) கோட்டை இராசதானி காலத்தில் எழுந்த நூல்கள்.
2) மகிந்ததேரரால் உபதேசம்செய்த பௌத்தமத சூத்திரம்.
3) அநுராதபுர காலத்தில் எழுந்த பாளி மற்றும் வடமொழி நூல்கள்.
4) பொலன்நறுவைக் காலத்தில் எழுந்த பௌத்த ஒழுக்கவிதிகளைக் கூறும் நூல்கள்.

20. சிகிரியா ஓவியம் பற்றிய பிழையான கூற்று பின்வருவனவற்றுள் எது?
1) கி.பி 3 ஆம் நூற்றாண்டுக்குரிய இது அஜந்தா ஓவியத்தை ஒத்துள்ளது.
2) கி.பி 5 ஆம் நூற்றாண்டுக்குரிய இது கருங்கல் உலர்சுதை ஓவியமாகும்.
3) சிகிரியா மலையின் மேற்பாகத்தில் 500 அப்சராஸ்களின் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன.
4) சிகிரிய ஓவியத்தில் மஞ்சள், கபிலம், சிவப்பு, நீலம் ஆகிய வர்ணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.



21. படத்தில் காட்டப்பட்டுள்ள புத்தர்சிலையின் செல்வாக்கின் அடிப்படையிலே இலங்கையின் சமாதிநிலைப் புத்தர்சிலைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இச்சிலையானது, இந்தியாவில் காணப்படும் அதேவேளை, பாரியளவு புத்தர்சிலை நிர்மாணிக்கப்பட்ட கலைப்பாணியை ஒத்தும் உள்ளது. இப் புத்தர்சிலையின் பெயரும் அதன் கலைப்பாணியும் முறையே,
1) அஜந்தா புத்தர்சிலை , குப்தர் கலைப்பாணி.
2) ஸ்வேதகம் புத்தர்சிலை , பல்லவர் கலைப்பாணி.
3) சாஞ்சிசாரணாத் புத்தர்சிலை , பல்லவர் கலைப்பாணி.
4) சாரணாத் புத்தர் சிலை , குப்தர் கலைப்பாணி.

22. இலங்கையின் 'வரலாற்றுக்கு முற்பட்ட யுகம்' எனக் கணிக்கப்படும் காலப்பகுதி,
1) கி.மு 6ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலப்பகுதி.
2) கி.மு 3ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலப்பகுதி.
3). கி.மு 6ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி 3ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதி.
4) கி.மு 453 இற்கு முற்பட்ட காலப்பகுதி.

23. ஆரியர் இலங்கையில் பல்வேறு நதிக்கரைகளுக்கு அண்மையில் குடியேற்றங்களை அமைத்துக் கொண்டனர். பின்வரும் குடியேற்றங்களை விஜிதபுர , தீகவாவி, அனுராத கம ஆகிய குடியேற்றங்கள் காணப்பட்ட நதிக்கரைகள் முறையே,
1) மல்வத்து ஓயா, கல் ஓயா, மகாவலி கங்கை.
2) மகாவலி கங்கை, மல்வத்து ஓயா, தெதுறு ஓயா.
3) மகாவலி கங்கை, கல் ஓயா, மல்வத்து ஓயா,
4) தெதுறு ஓயா, கலா ஓயா, கல்யாணி நதி.

24. A - தப்ரபேன், B - செரண்டிப், C - தம்பபண்ணி, D - சீலன், E - சிலோன்
மேலே காட்டப்பட்டுள்ள பெயர்கள் புராதனகாலத்தில் இலங்கைக்கு வழங்கிய பெயர்களாகும். பின்வரும் அந்நியர்களான இந்தியர், ஆங்கிலேயர், கிரேக்கர் ஆகியோர் இலங்கைக்கு வழங்கிய பெயர்களைக் குறித்துக்காட்டும் ஒழுங்கு முறையே,
1) ACE 2) CEA 3) ECA 4) BCE

25. கீழே தரப்பட்டுள்ள நூல்களுள் தம்பதெனியா யுகத்துக்குரிய நூல்களை மட்டும் கொண்ட தொகுதி,
1) சத்தர்மா லங்கார, பூஜாவளிய. இரகுவம்சம், பாறம் சதகய.
2) கவிசிலுமின, விசுத்திமார்க்க சன்னய, பூஜாவளிய, சிங்கள போதிவங்ச.
3) சித்த சங்கராவ, விசுத்திமார்க்க சன்யன, கவிசிலுமின, பூஜாவளிய.
4) கவிசிலுமின, பூஜாவளிய, இரகுவம்சம், மயூர சந்தேசிய.

26. உலகில் முதன்முதலில் இயற்கையைக் கருப்பொருளாக வைத்து ஓவியத்துறையை முன்னெடுத்தவர்,
1) பிக்காசோ. 2) பொக்காசியோ.
3) டாவின்சி. 4) மைக்கல் அஞ்சலோ.

27. உருவில் காட்டப்பட்டுள்ள குறியீடானது,
1) யுனிசெப் நிறுவனச் சின்னம்.
2) உலக கல்வி, சுகாதாரச் சின்னம்.
3) ஐ.நா. சபையின் சின்னம்.
4) உலகத் தொழிலாளர் சின்னம்.



28. பிரான்சுப் புரட்சி ஏற்பட்டகாலத்தினை தெரிவு செய்க.
1) 1875 2) 1789 3) 1782 4) 1818

29. உடனடியாகச் சரணடையுங்கள் இல்லாவிட்டால் தரைமட்டமாக்கி விடுவேன் என 2ம் உலகமகாயுத்த காலத்தில் ஹிட்லர் அறைகூவல் விட்ட நாடும் அந் நாட்டில் இரும்புமனிதனாக இருந்து பாதுகாத்து ஹிட்லருக்கு பதிலடி கொடுங்கள் என்ற கூறிய பிரதமரின் பெயரும் முறையேநோக்கினால் சரியாக அமையும் விடை
1) ரஷ்யா - லெனின் 2) இங்கிலாந்து - பிராங்கிளின்
3) இங்கிலாந்து - வின்சன்ட்சர்ச்சில் 4) ஐக்கிய அமெரிக்கா - ரூஸ்வெல்ட்

30. பாப்பாண்டவரின் தலைமையின் கீழ் இயங்கி வந்த றோமன் கத்தோலிக்க மதத்தைச் சீர்திருத்தம் செய்வதற்காக நெறி தவறிய போதகர்கள் பைபிளின் படி நடந்துகொள்ள வேண்டிய முறையைக் கட்டாயப்படுத்தப்பட்ட மாநாடு பின்வருவனவற்றுள் எது?
1) யார்லே மாநாடு 2) பப்பிற்ஸ் மாநாடு 3) ரென்ற் மாநாடு 4) மினசரி மாநாடு

31. மார்டின் லூதர்கிங்கின் மதச்சீர்திருத்தத்தின் பின் வேகமாகப் பரவிய புரட்டஸ்தாந்து மதத்தின் 3 பிரிவுகளைச் சரியாகக் காட்டும் விடை பின்வருவனவற்றுள் எது?
1) புரட்டஸ்தாந்து சேனை சபை, லூதரிசம் எங்கிளிக்கனிசம்
2) கத்தோலிக்க மெய்மறையலிசம், ஏழாம் நாள் திருச்சபை, இரட்சணிக சேனை சபை
3) றோமன் கத்தோலிக்கம் லூதரிசம், எங்களிக்கனிசம்
4) லூதரிசம், கல்வினிசம், அங்களிக்கனிசம்

32. (அ) (ஆ)
1) வில்லியம் ஹார்வே A டயஸ் சென்ற கடல்வழிப்பாதையில் சென்றவர்
2) கெப்லர் B கோள்கள் நீள்வட்டப்பாதையில் சூரியனைச் சுற்றுகின்றது
3) வாஸ்கொடகாம C அறிவீனத்தின் புகழ்ச்சி என்ற நூலை எழுதியவர்
4) இராஸ்மஸ் D கடல்மார்க்கமாக முதன் முதலில் உலகைச் சுற்றி வந்தவர்.
(அ) பகுதியில் உள்ள பெயர்களுடன் பொருந்தும் (ஆ) பகுதி செயற்பாடுகளைச் சரியாகக் காட்டும் விடை பின்வருவனவற்றுள் எது?
1) BACD 2) CADB 3) EDBC 4) DBAC

33. இலங்கையில் பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் 1848ம் ஆண்டு ஏற்பட்ட விவசாயக் காலத்திற்கு தலைமை தாங்கியவர்களை சரியாகக் காட்டும் விடைத்தொகுதி
1) கிவுலேகெதர, குடாபொல, மடுகல்ல
2) புறன்அப்பு, கெப்பற்றிப்பொல, மடுகல்ல
3) கொங்கொலகொடபண்டா, குடாபொலபிக்கு, புறன்அப்பு
4) கிவுலேகெதர, புறன்அப்பு, கெப்பற்றிப்பொல

34. இலங்கையைப் பிரித்தானியர் ஆட்சிசெய்த காலத்தில் பல்வேறுபட்ட யாப்பு முறைகள் அறிமுகம் செய்யப்பட்டது. அவற்றுள் நன்மைகள் காணப்பட்டது. அந்த வகையில் பத்தில் ஏழு பங்கு சுதந்திரத்தையே வழங்கியது. மூன்று அரச செயலாளர்களும் அரசியல் யாப்பில் காவல் நாய்களாக விளங்கினர் என்றும் குற்றச்சாட்டுக்கு உட்பட்ட யாப்பு பின்வருவனவற்றுள் எது?
1) மனிங் சீர்திருத்தம் 3) டொனமூர் யாப்பு
2) [illegible] 4) கோல்புரூக் சீர்திருத்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தம் நடந்த பூமிபோல தென்மராட்சியை மாற்றிய கடும் புயலும், பெருமழையும்!

யாழ்ப்பாணக் குடாநாடு நீண்டகால இடைவெளிக்கு பின்னர் இயற்கையின் சீற்றத்துக்குள்ளானது. மூன்று தினங்க ளாக பெரும் இரைச்சலுடனும் வேகத்துட னும் கூடிய புயலுடன் பெருமழையும் கொட்டி யாழ்ப்பாண மக்களை பெரும் உலுக்கு உலுக்கியது.

இந்தப் பெருமழையுடன் கூடிய புய லால் தென்மராட்சியில் பலத்த சேதங்கள் ஏற் பட்டுள்ளன. தென்மராட்சியின் பிரதேச செய லர் பிரிவுக்குட்பட்ட பகுதியான கிராம உத் தியோகத்தர் பிரிவுகளிலும் பெரும் அனர்த் தம் ஏற்பட்டுள்ளது. 24 ஆம் திகதி திங்க ளன்று சிறிதாக ஆரம்பித்த மழை செவ் வாய்க்கிழமை காற்றுடன் சேர்ந்து பொழியத் தொடங்கியது. இந்த கால நிலை மாற்றத்தால் தென்மராட் சிப் பிரதேசம் இருண்டு போய்க் கிடந்தது. புயல் காற்றுடன் கூடிய மழையால் மாண வர்கள் நலனை கருத்தில் கொண்டு பாட சாலைகள், அரச அலுவலகங்கள், வர்த்தக நிலையங்கள் என்பனவெல்லாம் நேரத்து டன் மூடப்பட்டன. இதனால் பொது மக்க ளது இயல்பு நிலை முடக்க நிலையடைந் தது.

## பாரபட்சமற்ற வகையில் எல்லோருக்கும் நிவாரணம் வழங்கப்பட வேண்டும்

### கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கின

தொடர்ந்து மழை பெய்தமையால் கடும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. மழை வெள் ளம் ஆறு போல கரைபுரண்டு ஓடத் தொடங் கியது. வீதிகளின் குறுக்காகவும் மழை நீர் பாய ஆரம்பித்தது. மழை வெள்ளம் வெளி யிடத்திற்குப் பாய்ந்து செல்வதற்காகக் கிரா மங்களால் அமைக்கப்பட்டிருந்த வாய்க் கால்ளையும் மேவிப் பாய்ந்தது வெள்ளம்.வரணி, மந்துவில், சரசாலை ஆகிய இடங்களில் இவ்வாறு வெள்ளம் ஓடியதைக் காண முடிந்தது.

தாழ்ந்த நிலப் பகுதியில் உள்ள வாழ் விடங்கள் எல்லாம் நீரில் மூழ்கின. நடுநிசி வேளை திடீர் என வெள்ளம் பெருக்கெடுத்து வீடுகளுக்குள் புகுந்துகொண்டது. இதனால் நித்திரையில் இருந்தவர்கள் 'திடுதிப்' என விழித்து தங்கள் குழந்தைகள் மற்றும் உடை மைகளைப் பாதுகாக்க முற்பட்டனர். வீட்டில் இருந்த உயரமான தளபாடங்களில் ஏறி அமர்ந்து விடியும் வரை விழித்து இருக்க வேண்டிய அவலவ நிலையும் மக்களுக்கு ஏற்பட்டது.

### வீடுகள் சேதம்

தாழ்நிலப் பகுதியில் இருந்த மனைகள் குறிப்பாக தென்மராட்சி பிரதேச செயலக பிரிவினுள் சுமார் 750 வீடுகள் முற்றாகச் சேதம டைந்துள்ளதாக தென்மராட்சி பிரதேச செயலக பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் தெரிவித்துள்ளார். அதே வேளை, 1965 வீடு கள் பகுதியாக சேதம டைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### மக்கள் இடம்பெயர்வு

தாழ்நிலப் பகுதியில் உள்ள குடியிருப்பு களில் வெள்ளம் புகுந்ததால் பொதுமக்கள் இடம்பெயர்ந்து அருகில் உள்ள பாடசாலை க்ள், ஆலயங்கள் போன்ற பொது இடங்களில் தங்கினர். சிலர் தங்கள் உறவினர் வீடுகளிலும் தஞ்சமடைந்தனர்.


தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீனி வாசன் தலைமையில் பொதுமக் களுக்கு உடனடியாகச் செய்ய வேண்டிய நடவடிக்கை கள் தொடர்பான விசேட கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது. பிரதேச செயலர் தலைமை யில் சமூக சேவை உத்தியோகத்தர், பிரதேச செயலக கிராம உத்தியோகத்தர்கள், நகர சபை, பிரதேச சபை பிரதிநிதிகள், சுகாதார வைத்தியதிகாரி பணிமனை பிரதிநிதிகள் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர். இதில் பொது மக்களுக்கு உடனடியாக மூன்று நாள் களுக்குத் தேவையான சமைத்த உணவு கள் வழங்கவும் நலன்புரி நிலையங்களுக்கு குடி தண்ணீர் வசதி செய்யவும் தீர்மானிக்கப் பட்டது. இதனடிப்படையில் கிராம உத்தி யோகத்தர்கள் பிரிவு ரீதியாக விவரங்கள் திரட்டப்பட்டன. தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் 33 நலன்புரி நிலையங் கள் அமைக்கப்பட்டு அங்கு மொத்தமாக 3197 குடும்பங்க ளைச் சேர்ந்த 11039 பேர் தஞ்ச மடைந் துள்ளார்கள் எனத் தெரியவந்தது. இவர் களுக்கு சமைத்த உணவு உடனடியாக வழங்கும் நடவ டிக்கை பிரதேச செயலரால் மேற்கொள்ளப்பட் டது. ஆனால் தென்ம ராட்சியில் வெள்ளத் தால் மொத்தமாக 5912 குடும்பங்களைச் சேர்ந்த 20,048 பேர் பாதிக் கப்பட் டுள்ள தாகவும் கூறப்படு கின் றது. இவர்களுக் குத் தேவையான உதவிகள் வழங்க நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளது எனவும் தெரிவிக் கப் பட் டுள்ளது.

### வெள்ள அனர்த்தத்தில் மரணம்

வெள்ள அனர்த் தத்தின்போது மட்டு வில் தெற்குப் பகுதி யில் வயோதிபர் ஒருவர் பனைமரம் வீழ்ந்து மரணமடைந்தார். இதே வேளை சாவகச் சேரி, பெருங்குளம் பகுதியில் வேகமாக பாய்ந்த வெள்ளத்தில் சிக்கிக் கொண்ட சிறுவன் ஒருவன் பெருங்குளம் சந்தியில் முகாமிட்டுள்ள படையினரால் உயிருடன் மீட்கப்பட்டான்.

### பாதிக்கப்பட்ட மக்கள் மீட்கப்படாமை

தென்மராட்சியின் கிழக்குப் பகுதிக் கிரா மங்களான தவசிகுளம், கெற்பேலி உள்ளிட்ட பகுதிகளில் வெள்ளத்தில் அகப்பட்ட மக்கள் மழை நின்றதன் பின்னரே இவர்கள் பின்னர் மீட்கப்பட்டனர். அதேபோல மந்துவில் மேற் குப் பகுதியிலும் வெள் ளத்தால் சூழப்பட்டவர் கள் மீட்கப்பட்டனர்.



### படையினர் வீடுவீடாகச் சென்று உதவினர்

வரணி, தாவளை, இயற்றாலைப் பகுதியில் வெள்ளத்தால் பாதிக் கப்பட்ட மக்களின் வீடுக ளுக்கு அதிகாலை முதல் வீடு வீடாகச் சென்று மக்களின் நலன்களை படையினர் கவனித்தனர்.

### மரங்கள் அடியுடன் சாய்ந்தன

காற்றுடன் கூடிய மழையினால் சகல பகுதிகளிலும் பல மரங்கள் வேருடன் சாய்ந் தன. தென்மராட்சியில் தோப்பாக நிற் கின்ற மா, பலா, வேம்பு, நாவல், அரசு ஆகிய மரங்க ளும் வேருடன் சாய்ந்தன. கிளைகளுடன் கற்பக தருவான பனை மரங்கள் முறிந்து வீழ்ந்த துடன், பல பனை மரங்கள் அடிவேருடன் சாய்ந்தன. சில இடங்களில் வீடுகளின் மீதும் மின்மார்க்கக் கம்பிகள் மீதும் வீழ்ந்து சேதங்களை ஏற்படுத்தின. வீதிகளில் சுயாதீனமாக வீழ்ந்து வீதிக்கு குறுக் காக பல மரங்கள் காணப்பட்டன. இதனால் வீதிப்போக்கு வரத்துக்கள் தடைப்பட்டன.

### தென்மராட்சிக்கான மின் விநியோகம் தடை

பெரும்புயல், காற்றினாலும் மழையி னாலும் தென்மராட்சிக்கான மின்விநியோ கம் முற்றாக செவ்வாய் (25.11.08)தொடக்கம் தடைப்பட்டுள்ளது. ஏ.9 வீதியில் கைதடிப் பகுதியில் உயர் அழுத்த மின்மாற்றிக் கம் பங்கள் சரிந்ததால் இத் தடை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் தென்மராட்சியின் ஏனைய பகுதிகளிலும் பல இடங்களில் உயர் அழுத்த மின்மார்க்கக் கம்பங்கள் சேதமாகி மின்கம்பிகள் அறுந்துள்ளன. அத்துடன் ஏனைய பகுதிகளில் 75 வீதமான தாழ் அழுத்த (230V) மின்மார்க்கக் கம்பங்கள் மீது மரங்கள் வீழ்ந்து முறிந்துள்ளதுடன் மின் மார்க்க கம்பிகளும் அறுந்து சேதமடைந் துள்ளன. இதனால் மழை ஓய்ந்து மக்களி டத்தில் இயல்பு நிலை தோன்றினாலும் மின்சார விநியோகத்தில் பெரும் இடைவெளி காணப்படுகின்றது. தற்பொழுது மின்விநி யோகத்தை சீர் செய்யவும் தூண்கள் நாட்டவும் நிலம் சதுப்பாக இருப்பதனால் பெரும் இடையூறு ஏற்பட்டுள்ளது. கிராமப் புறங்களில் படிப்படியாக மின்மார்க்கங்கள் செப்பனிட மின்சாரசபை சாவகச்சேரி அலு வலகம் துரித நடவடிக்கை மேற்கொண்டுள் ளது. மின் மார்க்கங்களைச் செப்பனிட நாளாந்த அடிப்படையில் தொழிலாளர்களை அமர்த் தியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### கல்வி நிலை

பாடசாலைகள் பலவற்றில் வெள்ளம் புகுந்துள்ளது. அத்துடன் சில பாடசாலைக ளில் பொதுமக்கள் தங்கவைக்கப்பட்டுள் ளார்கள். இதனால் மாணவர்களது வகுப் பறைக் கல்விகள், தவணைப் பரீட்சைகள் தடைப்பட்டுள்ளன.

### வீதிகளினூடாக போக்குவரத்துக்கள் பாதிப்பு

பெருமழையால் பல வீதிகள் வெள்ளத் தில் மூழ்கியுள்ளன. இதனால் அந்த வீதிக ளினூடான போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட் டுள்ளன. ஏ-9 பிரதான வீதியில் சாவகச்சேரி மடத்தடி, மீசாலை இராமாவில், நுணாவில், கொடிகாமம் பஸ் நிலையம், கொடிகாமம் நாவலடிப் பகுதிகள் வெள்ளத்தினால் நிரம்பி வழிந்தன. இதனால் பிரதான வீதியு டனான போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட் டன. இதனால் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்களும் தனியார் பஸ்களும் சேவையில் ஈடுபடமுடியவில்லை. சில இடங்களில் பிரதான வீதியில் சாவகச்சேரிப் பகுதியில் முன்னைய புகையிரதப் பாதை அமைந்திருந்த உயரமான வழியினூடாக பயணிக்க வேண்டியிருந்தது.

### அலுவலகங்கள் பாதிப்பு

அரச அலுவலகங்கள் உத்தியோகத்தர் களின் வரவின்மையால் மூடப்பட்டிருந்தன. சில அலுவலகங்கள் நேரத்துடனேயே மூடப்பட்டன. தென்மராட்சி பிரதேச செய லக அலுவலக உத்தியோகத்தர்களது வரவு குறைந்திருந்த போதிலும் பிரதேச செயலர் உட்பட சில கிராம உத்தியோகத்தர்கள், சமூக சேவை உத்தியோகத்தர்கள் தமது பணிகளை மேற்கொண்டனர். சாவகச்சேரி ஆதார வைத் தியசாலையும் தொடர்ந்து மக்களுக்கான பணியை வழங்கியது.

இவ்வாறு தொடர்ச்சியாக வீசிய காற்றும் தொடர்ந்த மழையினாலும் தென்மராட்சி யுத்தப் பிரதேசம்போல காட்சியளிப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

### வயல்கள் பாதிப்பு

தென்மராட்சியில் இவ்வருடம் கால போக நெற்செய்கையில் ஈடுபட்ட பெருந் தொகையான விளைநிலங்கள் வெள்ளத் துள் அமிழ்ந்து நாசமாகி வருகின்றன. இவ்வரு டம் பல விவசாயிகள் தரிசு நிலங்களைக் கூட வளமாக்கி நெற்செய்கையில் ஈடுபட்டனர். வயல் நிலங்கள் யாவும் பயிர்களை மூடி பெரு வெள்ளக்காடாக, கடல் போல நீருள் அமிழ்ந்து காணப்படுகிறது. குளங்கள், கிணறுகள் யாவும் மூடி ஒரே மட்டமாகக் காணப்படுகின்றன. கிராமங்களில் காணிகள், தோட்ட வெளிகள் யாவும் வெள்ளத்துள் மூழ்கியுள்ளன. இதனால் மரக்கறி வகையின் விலைகள் அதிகரித்துள்ளன.

புயல்காற்றும், மழையும் பொதுமக்களின் இயல்புநிலையைப் பெரிதும் சிதைத் துள்ளது. எனவே அரச அதிகாரிகள் பாதிக்கப் பட்ட பொதுமக்களுக்கு அரசிடமிருந்து உதவிகளைப் பெற்று சகல பொதுமக்க ளுக்கும் வேறு பாடுகள் இல்லாது குறிப்பாக அ.இ.உ. அட்டை என்ற பேதங்கள் இல்லாது நிவாரணம் வழங்க முன்வரவேண்டும்.

அருணன்


## மரண அறிவித்தல்கள்

### இளையப்பு பாலசிங்கம்

(உரிமையாளர் - பாலா ஜுவல்லர்ஸ்-நீர்கொழும்பு, சுதா ஜுவல்லர்ஸ் நீர்கொழும்பு, பாலசிங்கம் அடகு கடை, பருத்தித்துறை)

இருபாலையைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறை, ஓடக்கரை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இளையப்பு பாலசிங்கம் 04.12.2008 வியாழக்கிழமை நீர்கொழும்பில் காலமானார்.

அன்னார் அபிராமிப்பிள்ளையின் அன்புக் கணவரும் அருந் தவநாதன், அருந்தவநாயகி, நித்தியநாயகி, பவானி ஆகியோ ரின் அன்புத் தந்தையும் பாலரதனி, வல்லிபுரம், சிவபாலச்சந் திரன், இராசலிங்கம், சந்திரலிங்கம், செகராஜசிங்கம், குண சிங்கம் ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 07.12.2008 ஞாயிற்றுக் கிழமை நீர்கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*81, கடற்கரை வீதி,*
*நீர்கொழும்பு.*
*தொ.பே:- 0814928936*
*0777968150*
*0312222188*

தகவல்:
வ.சிவபாலச்சந்திரன்
நிரஞ்சனா தொலைத்தொடர்பு நிலையம்
ஓடக்கரை வீதி, பருத்தித்துறை.
021-2263100

### நாகமணி குணரத்தினம்

(ஓய்வுபெற்ற அதிபர் யா/பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்)

சூராவத்தையைப் பிறப்பிடமாகவும், சண்டிலிப்பாயை வசிப் பிடமாகவும் கொண்ட நாகமணி குணரத்தினம் (04.12.2008) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமணி- பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா- இரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மகேஸ் வரியின்(ஆசிரியை) பாசமிகு கணவரும், இரத்தினேஸ்வரன் (ஸ்ரீகாமாட்சி பல்பொருள் நிலையம், யாழ்ப்பாணம்), இரத்தின குமார்(டென்மார்க்), இரத்தினபாலா(பெரியபுலம் ம.வி), இரத்தின ராசா(பொறுப்பதிகாரி உப அலுவலகம் வலி.தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் பட்டினம்), இரத்தினமாலா(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாந்தினிதேவி, ஸ்ரீகலா, கணேஸ்வரி, செல்வசுதா, கண்ணதாசன் ஆகியோரின் அன்பு மாமனாரும், லோஜிதன், நிரூசன், பிரசன்னா, பிரதீபன், நிவர்ணா, லக்ஸ்சாந்தி, லாவண் ணியா, ஜெனுஷா, கயல், ஜெயன், திவ்வியன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(06.12.2008) சனிக்கிழமை மு.ப.10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"இரத்தினபவனம்"*
*சண்டிலிப்பாய்.*

தகவல்:
கு. இரத்தினராசா (மகன்)

## விற்பனைக்கு

இளைப்பாற்று அரச ஊழியரின் பாவனையில் உள்ள HONDA C70 Economic model, MOTOR CYCLE விற்பனைக்கு உண்டு. பதிவு இலக்கத்தின் கூட்டெண் 06, திருத்தி அமைக்கப்படாததும் நல்ல நிலையில் உள்ளதும்.

தொடர்பு:- ராம் நூபால்
726 கே.கே.எஸ். றோட் சிவலிங்கப் புளியடி யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 0779707879

## கிருஷ்ணா திருமண சேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரச உத்தியோ கத்தர்கள், 1976 M.B.B.S Doctor, 1974 M.B.B.S Doctor, 1976 B.Sc M.Sc, 1976 கொம்பியூட்டர் எஞ்சினியர், 1976 B.A பட்டதாரி இவர்களுக்கு அழகிய பெண்கள் தேவை. இன்னும் பல சாதகம் இருக்கிறது.

T. சுப்பையா 'அன்னை இல்லம்'
செங்குந்த வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0212229032

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர்.
(80477)

## விற்பனைக்கு

5தொன் ஏற்றக்கூடிய புத்தம்புதிய (டாட்டா) ட்ரக் உடன் விற்பனைக்கு உண்டு

19, முருகேசர் லேன், நல்லூர்.
(80478)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்வரத்தினம் நற்குணராசம்மா



சிறுப்பிட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் வதி விடமாகவும் கொண்ட திருமதி செல்வரத்தினம் நற்குணராசம்மா நேற்று (05.12.2008) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசா- பொன்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- மாணிக் கம் தம்பதியரின் அன்பு மருமகளும், சமாதான நீதிவான் சி.செல்வரத்தினம் (ஓய்வுபெற்ற அதிபர், யா/ஆவரங்கால் நடராசா இராமலிங்க வித்தியாலயம்) அவர்களின் அன்பு மனைவியும், சிவபாலன் (பெரியதம்பி), சிவகுமார் (லண்டன்), சிவமலர் ஆகியோரின் பாசமிகு தாயும், விமலாதேவி, பாராளன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், வலயக்கல்வி அலுவலகம், தென்மராட்சி)பாசமிகு மாமியும், ஆதிஷன், திவாகரன் (யா/பரியோவான் கல்லூரி), கீதாஞ்சலி(யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), நீராஞ்சலி(யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை) ஆகியோரின் பேர்த்தியும், தங்கம்மா, நவரத்தினம், குணரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(05.12.2008) வெள்ளிக்கிழமைஅவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சிறுப்பிட்டி மேற்கு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


*சிறுப்பிட்டி மேற்கு,*
*நீர்வேலி.*

(80474)

தகவல்:
செ.சிவபாலன்(மகன்),
வே.பாராளன்(மருமகன்).


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண் மூடும் சுவடுகள்....!



– நசத்தியபாலன்

ஊரடங்கு நேரத்துக்கு முன்னரே வாசற் கதவுகளைப் பூட்டி விடுவோமெனச் சென்றபோது, எதிர்வீட்டிலிருந்து பலத்த குரலில் எழுந்த அழுகையொலி எனது காதில் தெளிவாக விழுந்தது. பெண்களின் குரலில் ஒப்பாரியாய் எழுந்து அமைதியைக் குலைத்தது அவ்வழுகை ஒலி. ''சோமராகத்தான் இருக்கவேண்டும்'' என மனம் ஊகித்தது. சோமர் என ஊரிற் குறிப்பிடப்படுகின்ற ஒய்வுபெற்ற தபாலதிபர் சோமசுந்தரம் நீண்டநாள்களாகப் படுத்த படுக்கையாயிருக்கிறார். எண்பத்தேழு வயதைத் தாண்டியவர். ஆறு மாதங்களுக்கு முன்னர்தான் படியிற் தடக்குண்டு விழுந்ததில் இடுப்பெலும்பு உடைந்துபோய் அவர் படுக்கையில் விழ நேர்ந்துவிட்டது.

ஊரறிந்த பெரிய மனிதராய் வாழ்ந்த சோமரை நினைக்கிறது மனம். மனிதாபிமானமுள்ள ஒரு நல்ல மனிதராய் வாழ்ந்த அவரின் உதவும் பண்பு பலராலும் பாராட்டப்பட்ட ஒன்று. யாராவது சிரமப்படுகிறார் என்று அறிந்துகொண்டால் எப்படியாவது தன்னாலான ஒரு உதவியையாவது செய்யமாலிருக்க மாட்டார் அவர்.

சோமர் வீட்டை அடைகிறேன். அவரோடு நீண்டகாலம் பழகிவந்த நண்பன் என்கிற காரணமோ என்னவோ அவரது மூத்தமகள் ஓடிவந்து எனது காலைக் கட்டிக்கொண்டு கதறுகின்றாள். பொங்கிவந்த அழுகையை அடக்கமுடியாமல் நானும் அழுகிறேன்.

வீட்டிலிருந்தவர்களும், சத்தம் கேட்டு வந்தவர்களுமாய் சோமசுந்தரத்தின் உடலைப் பலகைக் கட்டிலில் கிடத்தி நடுக்கூடத்துக்கு எடுத்து வருகிறார்கள். நோயுற்றுக் கிடந்த காலத்தில் அவர் முகத்தில் தெரிந்த வேதனைச் சுவடுகள் மறைந்து ஆழ்ந்த அமைதியில் உறங்குவது போல கிடக்கிறார் சோமர். அவரது பழைய கம்பீரம் திரும்பி வந்துவிட்டது போல் படுகிறது எனக்கு. கட்டிலருகில் நின்ற சோமரின் இளையமகனை அழைக்கிறேன். ''அறிவித்தல்கள் குடுக்க ஒழுங்குகள் செய்திட்டியளா?''

''இனிக் காலையில தானே அதுகளைச் செய்யலாம்...''

''பேப்பருக்குக் குடுப்பம். 'லவுட்ஸ் ஸ்பீக்கரி'லும் அறிவிக்கவேணும்..'' என்கிறார் அவர்.

''ஓமோம் இப்பவெல்லாம் அதுதானே வழக்கம். அதோட உங்கட அப்பாவின்ர ஊரில உள்ள சிலருக்கும் அறிவிக்கவேணும்'' என்ற என்னிடம் சோமரின் மூத்த மருமகன், ''பேப்பரில குடுத்தால் தெரியவரும் தானே'' என்கிறார்.

''அது சரி பேப்பரில குடுக்கிறதுதான். அதேநேரம் மிகவும் வேண்டப்பட்ட ஆக்களுக்கு நேரில போய்ச் சொல்லுற மரபொண்டு இருக்குது தம்பி...'' என்கிற என்னைப் பார்த்து, ''நீங்கள் சொல்லுறது சரி. அப்பாவோட நெருங்கிப் பழகின சிலருக்குக் கட்டாயமாய்ச் சொல்லத்தான் வேணும்'' என்கிறார் சோமரின் மூத்தமகன்.

கூடத்தை விட்டு வெளியேறி வெளி விறாந்தையில் அமர்ந்த என்னருகில் வருகிறார் வேலுப்பிள்ளை மாஸ்ரர். எங்கட வட்டுக்கோட்டைப் பகுதியில் யாராவது காலமாயிற்றால் ஊர்ப்பகுதி இளந்தாரியள் சேர்ந்து 'இழவு' சொல்லப்போகிற பழக்கம் இப்பவும் இருக்குது.

'கணபதிப்பிள்ளை பண்டிதர் - முத்தம்மா தம்பதிகளின் மூத்த மகனும், செல்லத்துரை - பவளம் தம்பதியரின் மருமகனும், சிவநாயகியின் அன்புக் கணவருமான கனகராசா காலமாச்சோய்ய்..!' எண்டு மரண அறிவித்தல் சொல்லுற வழக்கம் இப்பவும் சில பகுதியில இருக்குது. வேண்டப்பட்ட ஆட்களின்ர வீடுகளில போய் இப்பிடி அறிவிப்பினம்.''

வேலுப்பிள்ளை மாஸ்ரர் சொல்வதை வியப்போடு கேட்டபடி நிற்கிறார்கள் சில இளைஞர்கள்.

*(இன்னும் சுவடுகள் பதியும்)*

# அன்னை.

சிறுவர் கதைகள் 08

போ.சத்தியன்

பள்ளிமுடிந்து வீடு வந்த செல்வி மிகவும் பரபரப்பாயிருந்தாள். வேகவேகமாய் சமையல் வேலைகளை முடித்து, அம்மாவுக்கு ஊட்டிவிட்டுத் தானும் சாப்பிட்டாள். முன்னதாகவே தோய்த்து அலுமாரியினுள் மடித்துவைத்திருந்த சீருடையை எடுத்துப்பார்த்தாள். ''எவ்வளவுதான் தோய்த்தாலும் இந்தப் பாழாய்ப்போன பழுப்பு நிறம் மறையாது'' என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டவள், பாதி அறுந்து தொங்கிய பொத்தானைத் தைத்து உறுதியாக்கினாள். சப்பாத்துக்களைக் கழுவிக் காய வைத்தாள். கண்ணாடி முன் வந்துநின்று தலைவாரி, தன்னிடமிருந்த கறுப்பு ரிப்பன்களையும், சிவப்பு ரிப்பன்களையும் மாறிமாறிக் கட்டி அழகு பார்த்தாள். இறுதியாக நாளைக்குச் சிவப்பு ரிப்பனையே கட்டிச்செல்வதென்றும் முடிவுசெய்தாள். பரிசளிப்பு விழா செல்வதற்கான ஆயத்த வேலைகளையெல்லாம் முடித்து விட்டு அம்மாவின் அருகே வந்தமர்ந்தாள்.

பள்ளிமுடிந்து வந்ததுமே தூங்கிக்கொண்டிருந்த தாயாரின் அருகே சென்று அவர் காதுகளில் ''அம்மா வகுப்பில் நான்தான் முதல் மாணவி'' என்று சொல்லிவிட்டாள். தான் சொல்லும் எல்லாவற்றையுமே கேட்கும் நிலையில் அம்மா இல்லை என்பது செல்விக்கு நன்கு தெரியும். ஆனால் அம்மாவைத் தவிர, மகிழ்ச்சியான அந்த விடயத்தை வேறு யாரிடம் சொல்ல முடியும் அவளால்? தூக்கம் கலைந்து, கண்கள் திறந்து எங்கோ வெறித்துப் பார்த்திருக்கும் தாயாரின் அருகில் சென்று அமர்ந்து அவர் நெஞ்சிலே தன்முகம் பதித்து நடந்த சம்பவங்களையெல்லாம் சொல்லுவாள் செல்வி. அப்படிச் சொல்லும்போதெல்லாம் மனதிலே நிறைந்திருந்த பாரம் குறைந்து, மனம் இலேசாகிப் போவதையும் உணருவாள். பேசிமுடித்தபின் அம்மாவின் முகத்தைப் பார்ப்பாள். அப்போதெல்லாம் ஆழ்ந்து தூங்கியிருப் பார் அம்மா. அன்புடன் தாயின் நெற்றியைத் தடவி, அவர் கன்னங்களில் முத்தமிட்டு மனதிலிருந்த கவலைகளெல்லாம் மறைந்து போனதொரு உணர்வோடு தனது வேலைகளைத் தொடருவாள் செல்வி.

அதிகாலையிலேயே எழுந்துவிட்டாள் செல்வி. குளித்து விட்டு மளமளவென்று வீட்டு வேலைகளையும் செய்துமுடித்தாள். சூடான கஞ்சியையும், மாத்திரைகளையும் எடுத்துக்கொண்டு அம்மாவினருகே சென்று அமர்ந்தாள். அம்மாவின் முகத்திலே இன்று ஏதோ ஒரு வித்தியாசம் நிலவியது. தன்னருகே வந்தமர்ந்த செல்வியைக் கனிவுடன் பார்த்துச் சிரித்தார் தாயார். செல்விக்கு மகிழ்ச்சி தாங்கமுடியவில்லை.

நோய்வாய்ப்பட்ட இரண்டு வருடங்களில் எப்போதுமே இவ்வளவு தெளிவாயிருந்ததில்லை அம்மாவின் கண்கள். ''அம்மா குணமாகிவிட்டாரோ?'' செல்வியின் மனதிலே பொங்கிய மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. 'படுக்கையிலிருந்தும் அம்மா துள்ளி எழுந்து என்னைக் கட்டிக்கொண்டு முத்தம் கொடுத்தால் எப்படியிருக்கும்?' தன் னந்தனியாகச் சென்றிடாது அம்மாவையும் பரிசளிப்பு விழாவுக்குக் கூட்டிச் சென் றிட செல்வி துடியாய்த் துடித்தாள். முதல் மாணவியாய் நான் பரிசு வாங்குவதைக் கண்டால் அவர் எவ்வளவு சந்தோஷப்படுவார்!

அம்மாவின் பார்வை இப்போது வேறு திசையில் திரும்பியிருந்தது. பரிசு வாங்கச் செல்லும் தனது அன்பு மகளை ஆசீர்வாதம் செய்வது போலிருந்த அன்பு நிறைந்த அம்மாவின் பார்வை ஒருசில நொடிகள்தான் நீடித்தது போலும். மீண்டும் பழைய நிலைதான். ''அம்மா! அம்மா!'' என்று அழைத்துத் தொண்டை வற்றியதுதான் மிச்சம். செல்வியின் குரலுக்கு எவ்விதமான உணர்ச்சிகளையும் காட்டமுடியாத நோய்வாய்ப்பட்ட அன்புத் தாயார் யன் னல் வழியாய்த் தெரிந்த அந்தத் தென்னை மரத்தையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தார்.

[மீண்டும் அன்னை வருவாள்]





# யாருமே காணாத ஒரு துளி கண்ணீர்



கோகுலராகவன்

ஒருநாள் பாடசாலை ஒன்றுக்குப் பயிற்சி வகுப்புக்குப் போயிருந்தேன். தேநீர் நேரத்தில் 'கன்ரீன்' பக்கம் சென்றபோது ''சேர்!'' என்று ஒரு குரல். அங்கு இன்னொரு பயிற்சி வகுப்பு நடைபெற்றிருக்கவேண்டும். அதில் பங்குபற்றிய ஒரு ஆசிரியை தான் என்னை அழைத்தவர்.

''சேர் என்னைத் தெரியாதா?''

''தெரியேலையே''

''சேர்! நான் ரோகிணி. உங்களிட்டைப் படிச்சனான்''

உற்றுப் பார்த்தேன்.

''சாத்திரி மகள்தானே?''

''ஓம் சேர்''

அந்தப் பிள்ளை 'கொலிச்சில்' படித்து, ஓராண்டு உள்ளகப் பயிற்சியில் இருக்கிறதாகச் சொன்னாள். வாழ்த்துத் தெரிவித்தேன்.

* * *

ஒருநாள் நீண்ட காலத்துக்குப் பிறகு ஊருக்கு போயிருந்தேன். ஊர்க்கடைக் கொத்துறொட்டி மிகவும் சுவையாக இருக்கும்.

சாப்பிடலாம் என்று உள்ளே போய்ச் சொல்லிவிட்டு அமர்ந்திருந்தேன்.

''சேர்! முட்டைக் கொத்தா? இறைச்சிக் கொத்தா?'' என்னைத் தெரிந்த பெடியன். யாராக இருக்கும்?

''என்ன சேர் யோசிக்கிறியள்? முட்டையா? இறைச்சியா?'' மீண்டும் அந்தப் பெடியனின் குரல்.

''முட்டைக் கொத்துத்தான். உம்மை எனக்குத் தெரியேல்லையே எண்டு யோசிக்கிறன்''

''சேர் நான் சிவதாஸன். மறந்து போனீங்களோ?''

''விநாயகமூர்த்தியின் மகனா?'' சந்தேகத்துடன் கேட்டேன்.

''ஓம் சேர்''

'விநாயகமூர்த்தி பெரிய கத்தரித் தோட்டக்காரர். செல்வாக்காக வாழ்ந்தவர். பிள்ளைகளைப் படிப்பிக்க விரும்பியவர். இவன் ஏன் படிக்கவில்லை? என்னுடைய பள்ளியில் 9ஆம் வகுப்பு வரை படித்த பிறகு வேறு பள்ளியில் O/L படிக்கப் போனவன். எங்கள் பள்ளிக்கூடத்தில் முதல் தர மாணவன். அவன் ஏன் இப்படி?' வினாக்களுடன் வெளியே வந்துவிட்டேன்.

***

ஒருநாள் 7ஆம் வகுப்பு மாணவர்களிடம் உங்களுக்கு விருப்பமான தொழில் என்ன என்று கேட்டேன். ஒவ்வொருவரும் ஒவ்வொரு தொழிலைச் சொன்னார்கள். டாக்டர், இஞ்சினியர், வக்கீல், எக்கவுண்டன், விதானையார், ஆசிரியர் என்று தமக்குத் தெரிந்த தொழிலைச் சொன்னார்கள்.

சிவதாஸின் முறை.

''உமக்கு விருப்பமான தொழில் என்ன?''

சட்டென்று எழும்பியவன் ''தோட்டம்'' என்றான்.

நான் ஆச்சரியப்படவில்லை. பிரபல தோட்டக்காரனின் மகன் அப்படித்தான் சொல்வான். அவர்கள் தோட்டத்தால் செல்வாக்காய் வாழ்பவர்கள். சிவதாஸன் வகுப்பில் முதல்தர மாணவன். அவன் பெரிய உத்தியோகம் பார்க்கமுடியும்.

இப்போது ரோகிணியின் முறை.

''உமக்கு என்ன தொழில் விருப்பம்?''

''ரீச்சர்''

இது நடந்து நான்கைந்து ஆண்டுகள் முடிந்துவிட்டன.

'வெள்ளத்தனையது மலர்நீட்டம் மாந்தர் தம்
உள்ளத் தனையது உயர்வு'

என்ற குறள் ஞாபகத்திற்கு வருகின்றது.

'ரோகிணி சொன்னபடி ரீச்சர் ஆகிவிட்டாள். சிவதாஸன் தோட்டம் செய்யாமல் ஏன் கொத்து றொட்டி அடிப்பவனாக மாறினான்?' சில கேள்விகளுக்கு விடை தேடுவது மிகவும் சிரமம் போலத்தான் தெரிகின்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கை அணியின் இங்கிலாந்துப் பயணம் ரத்து ஐ.பி.எல். போட்டியில் பங்கேற்பதில் சிக்கலில்லை!

லண்டன், டிச.06

இலங்கை அணியின் இங்கிலாந்துப் பயணம் ரத்துச் செய்யப்பட்டிருப்பதால், ஐ.பி.எல். போட்டியில் இலங்கை வீரர்கள் பங்கேற்பதில் இருந்த சிக்கல் தீர்ந்தது.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி அடுத்த ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் சிம்பாப்வேயுடன் ஒரு நாள் தொடரில் விளையாட இருந்தது. ஆனால் சிம்பாப்வேயுடன் விளையாட இங்கிலாந்து அரசு அனுமதி மறுத்ததால், இலங்கையை வரும்படி இங்கிலாந்து அழைத்தது. அவர்களின் கோரிக்கையை இலங்கை கிரிக்கெட் சபை ஏற்றுக்கொண்டது. ஆனால் அந்தச் சமயத்தில் 2ஆவது ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டி இந்தியாவில் நடைபெற இருப்பதால், இலங்கை அணி இங்கிலாந்து செல்வதில் சிக்கல் ஏற்பட்டது.

இலங்கை அணித் தலைவர் மஹேல ஜெயவர்த்தன, முரளிதரன் உட்பட 13 வீரர்கள் ஐ.பி.எல். ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருக்கிறார்கள். அவர்கள் இங்கிலாந்துப் பயணம் வேண்டாம், ஐ.பி.எல். போட்டியில் விளையாட விரும்புகிறோம் என்று தெரிவித்தனர்.

இதையடுத்து ஐ.பி.எல். ஒப்பந்த வீரர்களைத் தவிர்த்து 2ஆம் தர அணியை அனுப்பலாமா? என்பது பற்றி இலங்கை கிரிக்கெட் சபை ஆலோசித்து வந்தது. சில மாதங்களாக நீடித்த இந்தப் பிரச்சினை இப்போது முடிவுக்கு வந்து விட்டது.

இலங்கை அணி இங்கிலாந்துப் பயணத்தை ரத்துச் செய்து விட்டது. 'தற்போதைய சூழலில் எங்களால் அடுத்த ஆண்டு அங்கு வர முடியாது' என்று இங்கிலாந்து கிரிக்கெட் சபைக்குத் தெரியப்படுத்தி விட்டதாக இலங்கை கிரிக்கெட் சபைத் தலைமை நிர்வாகி துலிப் மென்டிஸ் நிருபர்களிடம் தெரிவித்தார்.

இலங்கை வர மறுத்ததால், இங்கிலாந்து கிரிக்கெட் சபை உடனடியாக மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபையுடன் பேச்சு நடத்தியது. அவர்களின் கோரிக்கையை ஏற்று மேற்கிந்தியத் தீவுகள் அணி இங்கிலாந்து செல்ல சம்மதம் தெரிவித்துள்ளது.

இதன்படி மேற்கிந்தியத் தீவுகள் அணி அடுத்த ஆண்டு மே மாதம் இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 டெஸ்ட் மற்றும் 3 ஒரு நாள் போட்டிகளில் பங்கேற்க உள்ளது. மே 6ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை இந்தத் தொடர் நடைபெறவுள்ளது.

# காயம் பிரச்சினையில்லை

## பொண்டிங்


மெல்போர்ன், டிச. 06

''மணிக்கட்டில் ஏற்பட்ட ...ம் முற்றிலும் குணமடைந்துவிட்டதால் ...ன்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொ...ில் பங்கேற்பேன்'' என அவுஸ்திரேலிய அணித் தலைவர் பொண்டிங் தெரிவித்து உள்ளார்.

கடந்த ஜூன் மாதம் அவுஸ்திரேலிய அணித் தலைவர் பொண்டிங், மணிக்கட்டு எலும்பு மற்றும் தசைநார் மறுசீரமைப்பு சத்திரசிகிச்சை செய்து கொண்டார். இவருக்குத் திடீரென வலதுகை மணிக்கட்டில் வலி ஏற்பட்டதை அடுத்து, பொண்டிங் விரைவில் ஓய்வு பெறுவார் என்ற செய்தி வெளியானது. இதற்கு மறுப்பு தெரிவித்த பொண்டிங், தனக்கு சத்திர சிகிச்சை செய்த வைத்தியர் கிரெக் ஹோவை சந்தித்தார்.

பின்னர் இது குறித்து பொண்டிங் கூறுகையில், ''வலது மணிக்கட்டில் ஏற்பட்ட காயம் முற்றிலும் குணமடைந்து விட்டதாக வைத்தியர் கிரெக் ஹோ கூறியுள்ளார். மணிக்கட்டில் சத்திரசிகிச்சை செய்து கொண்ட எந்த ஒரு வீரருக்கும் இடையிடையே வலி ஏற்படத்தான் செய்யும். ஆனால் இதுபற்றிக் கவலைப்பட தேவையில்லை. மேலும் எந்த ஒரு வலி நிவாரணமும் தற்போது தேவையில்லை என வைத்தியர் தெரிவித்துள்ளார். எனவே தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரில் பங்கேற்பேன்'' என்றார்.

# பங்களாதேஷுடனான ஒருநாள் போட்டி; இலங்கை அணியில் மீண்டும் ஜெயசூரியா



பங்களாதேஷில் இடம்பெறவுள்ள ஒருநாள் போட்டித் தொடரில் விளையாடவுள்ள இலங்கை அணியிலிருந்து வேகப் பந்துவீச்சாளர் சமிந்தவாஸ் நீக்கப்பட்டுள்ளார்.

பங்களாதேஷில் நடைபெறவுள்ள டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளுக்கான இலங்கை அணிகள் நேற்று அறிவிக்கப்பட்டன.

இதில் ஒருநாள் போட்டிகளில் விளையாடும் இலங்கை அணியில் சமிந்தவாஸ் இடம்பெறாத அதேவேளை, டெஸ்ட் போட்டியில் அவர் சேர்க்கப்பட்டுள்ளார்.

பங்களாதேஷிற்கான ஒருநாள் அணியில் அதிரடி ஆட்டக்காரர் சனத் ஜெயசூரியா மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளார். அதேவேளை சிம்பாப்வேக்குச் சுற்றுப்பயணம் செய்த அணியில் இடம்பெற்றிருந்த மஹேல உடவத்த நீக்கப்பட்டுள்ளார்.

திலகரட்ண டில்ஷானுக்கும் ஒருநாள் அணியில் வாய்ப்பு வழங்கப்படாத அதேவேளை டெஸ்ட் போட்டிக்கான அணியில் அவர் இடம்பெற்றுள்ளார்.

# மொஹாலியில் டெஸ்ட் வேண்டாம்!

லண்டன், டிச. 06

இந்தியா, இங்கிலாந்து அணிகள் மோதும் இரண்டாவது டெஸ்ட் போட்டியை மொஹாலியில் இருந்து வேறு இடத்துக்கு மாற்றவேண்டும் என இங்கிலாந்து ரசிகர்கள் கோரிக்கை விடுத்திருக்கின்றனர்.

சமீபத்தில் மும்பை மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தியதை அடுத்து இங்கிலாந்து அணி தொடரை ரத்துச் செய்துவிட்டு, நாடு திரும்பியது. இதையடுத்து அகமதாபாத்தில் நடக்கவிருந்த முதல் டெஸ்ட் சென்னையிலும், மும்பையில் நடக்கவிருந்த இரண்டாவது டெஸ்ட் மொஹாலியிலும் நடக்கும் என இந்திய கிரிக்கெட் சபை அறிவித்தது.

மொஹாலி, பாகிஸ்தானுக்கு அருகில் இருக்கிறது. இதனால் இப்போட்டியை வேறு இடத்துக்கு மாற்ற வேண்டும் என இங்கிலாந்து ரசிகர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது குறித்து 'டெய்லி டெலிகிராப்' பத்திரிகைக்கு இங்கிலாந்து ரசிகர்கள் அளித்த பேட்டியில், இலங்கை மற்றும் பாகிஸ்தானுக்கு இங்கிலாந்து அணி சுற்றுப்பயணம் செய்த போது போட்டியைக் காண செல்லும் போதெல்லாம் லேசான பயம் இருக்கும். ஆனால், இந்தியாவை மற்ற நாடுகள் போல கருத முடியாது.

இந்தியக் கிரிக்கெட் சபை தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்திருக்கும் என நம்புகிறோம். சென்னை டெஸ்ட் போட்டியை நேரில் பார்ப்பதில் சிக்கல் இல்லை. மொஹாலி, பாகிஸ்தானுக்கு அருகில் இருப்பதால் யோசிக்க வேண்டியுள்ளது. இதனால் இங்கிலாந்து அணி, இரண்டாவது டெஸ்டில் அதிக ஆதரவாளர்கள் இல்லாமல் விளையாடும் நிலை ஏற்படலாம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# மும்பை வீராங்கனைகளுக்கு சச்சின் டெண்டுல்கர் பயிற்சி

மும்பை, டிச. 06

மும்பை மகளிர் கிரிக்கெட் வீராங்கனைகளை நேற்று முன்தினம் சந்தித்த இந்திய அணியின் நட்சத்திர கிரிக்கெட் வீரரான சச்சின் டெண்டுல்கர் கிரிக்கெட் தொடர்பான நுணுக்கங்களை அவர்களுக்கு அளித்தார்.

அகில இந்திய அளவிலான சூப்பர் லீக் ஒரு நாள் கிரிக்கெட் தொடர் விரைவில் நடக்க இருக்கிறது. இதில் மேற்படி மகளிர் கிரிக்கெட் வீராங்கனைகள் கலந்து கொள்ள இருக்கின்றனர். அதற்கு முன்னதாக அவர்கள் டெண்டுல்கரை சந்தித்தனர்.

இங்கிலாந்து அணிக்கு எதிராக 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் அடுத்த வாரம் தொடக்க இருக்கிறது. இதற்கான வலைப் பயிற்சியை டெண்டுல்கர் நேற்று முன்தினம் துவக்கினார். பயிற்சி முடிந்த பின்பு அவர் மேற்படி வீராங்கனைகளைச் சந்தித்தார்.

மகளிர் வீராங்கனைகள் தங்களது மன வலிமையை அதிகரித்துக் கொள்ள வேண்டும் என்றும், மும்பை ஆடவர் கிரிக்கெட் வீரர்களை விட சிறப்பாக பங்களிக்க வேண்டும் என்றும் சச்சின் அவர்களுக்கு ஆலோசனை வழங்கினார். மும்பை அணியின் பயிற்சியாளரான அஞ்சலி பெட்னேகெர் தெரிவித்தார்.

மேலும், ''எங்களது துடுப்பாட்டக்காரர்கள் மற்றும் பந்து வீச்சாளர்களுடன் சச்சின் பேசினார். கிரிக்கெட் போட்டிகளின் போது, மனோரீதியாக வலிமை பெறுவது எப்படி என்பது குறித்து அவர் விளக்கமளித்தார்'' என்றும் அவர் கூறினார்.

# இங்கிலாந்து கிரிக்கெட் அணியினர் இந்தியா திரும்புவதில் புதிய சிக்கல்

லண்டன், டிச.06

இங்கிலாந்து கிரிக்கெட் அணி இந்தியா வந்து டெஸ்ட் போட்டித் தொடரில் விளையாடுவதில் புதிய சிக்கல் ஏற்பட்டிருக்கிறது.

முதல் டெஸ்ட் போட்டி சென்னையில் வருகிற 11ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரையும், 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி மொஹாலியில் வருகிற 19ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரையும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து இங்கிலாந்து கிரிக்கெட் சபை சார்பில் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில், 'கடந்த 72 மணி நேரத்தில் பாதுகாப்பு ஆலோசகர்கள் மற்றும் அரசின் உயர் அதிகாரிகளுடன் நடத்திய ஆலோசனைக்குப் பிறகு இங்கிலாந்து அணி, இந்திய டெஸ்ட் பயணத்தை தொடர, பயிற்சி ஆட்டத்துக்காக அபுதாபி செல்கிறது. இந்திய கிரிக்கெட் சபை நாங்கள் சொன்ன பாதுகாப்பு ஏற்பாடுகளை சரியான முறையில் அமுல்படுத்த வேண்டும்' என்று தெரிவித்திருந்தது.

இதனால் இங்கிலாந்து அணியின், இந்தியப் பயணத்தில் பிரச்சினை இருக்காது என்று தெரியவந்தது. முன்னணி வீரர்கள் அடங்கிய இங்கிலாந்து அணியினர் நேற்று முன்தினம் அபுதாபி புறப்பட்டுச் சென்றனர். அங்கு அவர்கள் சில தினங்கள் பயிற்சியில் ஈடுபடுகிறார்கள்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மீண்டும் புதிய சிக்கல் ஏற்பட்டுள்ளது. இந்தியாவில் விமானங்களை கடத்த தீவிரவாதிகள் திட்டமிட்டு இருக்கின்றனர் என ஈ-மெயில் மிரட்டல் வந்தது. இதையடுத்து விமானநிலையங்களில் பாதுகாப்பு பல மடங்கு பலப்படுத்தப்பட்டுள்ளது. இந்த புதிய மிரட்டலால் இங்கிலாந்து கிரிக்கெட் சபை தங்கள் அணியை அனுப்ப எடுத்த முடிவில் பின்னடைவு ஏற்படலாம் என்று தெரிகிறது.

இது தொடர்பாக அபுதாபி புறப்படும் முன்பு இங்கிலாந்து கிரிக்கெட் சபை நிர்வாக இயக்குநர் ஹக் மொரிஸ் கூறுகையில், ''விமான கடத்தல் மிரட்டல் கவலை அளிக்கிறது. மேலும் இந்த விவகாரத்தில் எங்களுக்கு போதிய தகவல் தேவைப்படுகிறது. சென்னையில் உள்ள பாதுகாப்பு ஆலோசகர் குழுவிடம் இன்று (நேற்று முன்தினம்) காலை நான் பேசினேன். முன் எச்சரிக்கை நடவடிக்கையாக என்னென்ன இருக்கிறது என்பதை பார்க்கவேண்டும். இது தொடர்பாக பாதுகாப்புக் குழுவினரிடம் இருந்து எங்களுக்குக் கிடைக்கும் தகவல்களை ஆய்வு செய்த பின்னர் தான் சில முடிவுகள் எடுக்க முடியும்'' என்றார்.

இதற்கிடையில் இந்தியா வந்துள்ள இங்கிலாந்து அணி பாதுகாப்பு ஆலோசகர் ரெக் டிக்காசன் எதிர்வரும் 7ஆம் திகதி அபுதாபி சென்று தனது பாதுகாப்பு அறிக்கையை அணியிடம் சமர்ப்பிக்கவுள்ளார். அதனைப் பொறுத்துத்தான் இங்கிலாந்து அணி அபுதாபியில் இருந்து இந்தியாவுக்குச் செல்வதா அல்லது தங்களது சொந்த நாட்டுக்குத் திரும்புவதா என்பது குறித்து இறுதி முடிவு செய்யப்படும். இங்கிலாந்து கிரிக்கெட் சபையிடமிருந்து நல்ல பதில் கிடைத்தால் இங்கிலாந்து அணி நாளை மறுதினம் இந்தியா செல்லும்.




# ஆபத்திலிருந்து இங்கிலாந்து வீரர்களை மீட்பது குறித்து அதிரடிப்படை ஒத்திகை!

சென்னை, டிச. 06

சென்னை டெஸ்ட் போட்டியில் விளையாடும் கிரிக்கெட் வீரர்கள் தங்கும் ஹோட்டலில் அசம்பாவிதம் ஏற்பட்டால் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது எப்படி எனும் விசேட ஒத்திகையில் அதிரடிப்படைக் காவலர்கள் ஈடுபட்டனர்.

சென்னை சேப்பாக்கத்தில் நடைபெற உள்ள இந்தியா, இங்கிலாந்து இடையிலான டெஸ்ட் போட்டிக்காக தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. வீரர்கள் தங்கவுள்ள நட்சத்திர ஹோட்டலில் பிரத்தியேக பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் வீரர்கள் தங்கியுள்ள ஹோட்டலில் தீவிரவாதிகளின் தாக்குதல் போன்ற அசம்பாவிதம் ஏதாவது நடைபெறுமானால் அப்போது மேற்கொள்ள வேண்டிய மீட்பு நடவடிக்கை குறித்த ஒத்திகை நிகழ்ச்சியில் அதிரடிப்படைக் காவலர்கள் ஈடுபட்டனர். எழும்பூர் புதுப்பேட்டையில் உள்ள ஆயுதப்படை பொலிஸ் வளாகத்தில் நேற்று முன்தினம் காலை இந்த ஒத்திகை நிகழ்ச்சி நடைபெற்றது.

மீட்பு நடவடிக்கை மற்றும் அப்பாவிகளை பாதுகாப்பாக வெளியேற்றுவது உள்ளிட்டவை குறித்து கவனம் செலுத்தப்பட்டன.

# இங்கிலாந்து வீரர்களுக்கு அபுதாபியில் பயிற்சி முகாம்

இந்தியாவுடன் டெஸ்ட் தொடரில் விளையாட உள்ள இங்கிலாந்து அணி வீரர்களுக்கு, அபுதாபியில் பயிற்சி முகாமுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து இங்கிலாந்து கிரிக்கெட் சபை நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கை விவரம் வருமாறு:-


இந்திய டெஸ்ட் தொடரில் விளையாட உள்ள இங்கிலாந்து அணி வீரர்கள் அபுதாபியில் தங்கியிருந்து பயிற்சி செய்வார்கள். அவர்களுடன் 9 வீரர்கள் அடங்கிய பயிற்சி அணியும் இந்த முகாமில் கலந்துகொள்ளும்.

பாதுகாப்பு ஆலோசகர் ரெக் டிக்கசன் அளிக்கும் அறிக்கையின் அடிப்படையில் ... இறுதி முடிவு அறிவிக்கப்பட உள்ளது. கிரிக்கெட் சபையின் மேலாண்மை இயக்குநா ஹக் மரிஸ், இங்கிலாந்து வீரர்களுக்கு நிலைமையை விளக்கி உள்ளார். வீரர்களின் பாதுகாப்பு 100 சதவீதம் உறுதி செய்யப்பட்டால் மட்டுமே தொடருக்கு அனுமதி அளிக்கப்படும்.

புதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டது உறுதியானவுடன், அடுத்த வார தொடக்கத்தில் இங்கிலாந்து வீரர்கள் அபுதாபியில் இருந்து இந்தியா செல்வார்கள்.

தொடரில் விளையாட வேண்டும் என்று எந்த வீரரையும் கட்டாயப்படுத்தவில்லை. சபை மற்றும் வீரர்களுக்கு பாதுகாப்பு நிலவரம் குறித்து விரிவான அறிக்கை அளிக்கப்படும். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பயிற்சியில் கலந்து கொள்வதற்காக இங்கிலாந்து வீரர்கள் நேற்று முன்தினம் அபுதாபி சென்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்திய தொழில் கூட்டமைப்பின் (சி.ஐ.ஐ.), இளம் இந்தியர்கள் பிரிவின் சார்பில் தீவிரவாத ஒழிப்புப் பேரணி நேற்றுமுன்தினம் நடந்தது. மெரினா கடற்கரை நேதாஜி சிலை அருகில் பேரணியை நடிகர் ஸ்ரீகாந்த், நடிகை த்ரிஷா ஆகியோர் கொடி அசைத்துத் தொடக்கி வைக்கின்றபோது........

# போரை நிறுத்துமாறு இலங்கை அரசைக் கடுந்தொனியில் எச்சரிக்கவேண்டும்; பிரதமரிடம் தமிழகத் தலைவர்கள் மனு

புதுடில்லி, டிச. 06

இலங்கை அரசை உடனடியாகப் போர் நிறுத்தம் செய்யும்படி இந்தியா கடுந்தொனியில் எச்சரிக்க வேண்டும். அமைதியான முறையில் தீர்வு காண இன்னொரு தரப்பினர் (புலிகள்) முன்வந்துள்ள போதிலும் கூட தமிழினத்தை கூண்டோடு அழிப்பதில் இலங்கை அரசு பிடிவாதமாக - மூர்க்கமாக ஈடுபட்டுள்ளது. எனவே, தமிழினப் படுகொலையைத் தடுத்து நிறுத்த இந்தியா தீவிரமான நடவடிக்கையில் ஈடுபட வேண்டும்.

- இவ்வாறு பிரதமர் மன்மோகன் சிங்கிடம் தமிழக முதல்வர் கருணாநிதி தலைமையில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கொடுத்த மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மத்திய அரசு தலையிட்டு உடனடியாகப் போர் நிறுத்தம் செய்து, அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தி தமிழக எம்.பி.க்கள் கடந்த 2ஆம் திகதி பிரதமர் மன்மோகன் சிங்கை டில்லியில் சந்தித்து மனுக் கொடுத்தனர்.

இதைத்தொடர்ந்து, தமிழகத்தை சேர்ந்த அனைத்துக் கட்சித் தலைவர்களுடன் டில்லி சென்ற முதல்வர் கருணாநிதி, நேற்றுமுன்தினம் பிரதமர் மன்மோகனை சிங்கைச் சந்தித்து மனு கொடுத்தார். அந்த மனுவில்மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

இலங்கையில் நீடித்து வரும் தமிழ் இனப் படுகொலை, மனித உரிமை மீறல் போன்றவற்றால் தமிழ் நாட்டு மக்களும், உலகெங்கும் வாழும் தமிழர்களும் கலக்கம் அடைந்துள்ளனர். அங்கு நடைபெறும் பேரழிவு நடவடிக்கைகளால் தமிழக அனைத்துக் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் அனைத்து சமூக அமைப்புகளின் தலைவர்களாகிய நாங்கள் மிகுந்த மனவேதனையுடன் இந்த மனுவைச் சமர்ப்பிக்கிறோம்.

முதல்வர் கருணாநிதி விடுத்த வேண்டுகோளை ஏற்று ஒரு மாதத்துக்குள்ளேயே இலங்கைத் தமிழர் நிவாரண நிதி ரூ.37 கோடிக்கு மேல் குவிந்தது. அத்தியாவசியப் பொருட்கள் திரட்டப்பட்டு, 80 ஆயிரம் குடும்ப பார்சல்களாக இலங்கைக்கு அனுப்பப்பட்டு, இலங்கைத் தமிழர்களுக்கு விநியோகிப்பதற்காக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண இந்திய அரசும் உண்மையுடன் சில முயற்சிகளை எடுத்தது. ஆனால், இலங்கை அரசு இதையெல்லாம் பொருட்படுத்தாமல், உலகத் தமிழர்களின் உணர்வுகளை மதிக்காமல் அப்பாவித் தமிழினத்தை அழிப்பதில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. எனவே, இந்த இனப் படுகொலையையும், அடிப்படை மனித உரிமை மீறலையும் இந்தியாவும், குறிப்பாக தமிழர்களும் பார்த்துக் கொண்டு அமைதியாக இருக்கக் கூடாது என்ற முடிவுக்கு வந்துள்ளோம்.

இந்த விடயத்தில் பிரதமர் இன்னும் அதிகமான, தீவிர நடவடிக்கையில் ஈடுபட்டு உடனடியாக போர் நிறுத்தம் செய்யும்படி இலங்கை அரசை வற்புறுத்த வேண்டும் என்று தமிழக அனைத்துக் கட்சிகள், மற்றும் சமூக அமைப்புகளின் தலைவர்களாகிய நாங்கள் தனிப்பட்ட முறையில் கேட்டுக் கொள்கிறோம்.

அமைதியான முறையில் தீர்வு காண இன்னொரு தரப்பினர் முன்வந்துள்ள போதிலும் கூட தமிழினத்தை அழிப்பதில் இலங்கை அரசு பிடிவாதமாக ஈடுபட்டுள்ளதையும் தங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகிறோம் - என்றுள்ளது.

## முக்கிய ஐந்து கோரிக்கைகள்

பாடசாலைக்குச் செல்லும் காலத்தில் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள காடுகளில் தஞ்சம் அடைந்துள்ள இளம் தமிழ்த் தலைமுறையைப் பாதுகாத்து, அமைதியை ஏற்படுத்த உறுதியாகவும், கண்டிப்புடனும் நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி தமிழகத் தலைவர்கள் முன்வைத்த முக்கிய கோரிக்கைகள் வருமாறு -

- உடனடியாகப் போர் நிறுத்தம் செய்யும்படி இலங்கை அரசுக்கு கடும் எச்சரிக்கை விட வேண்டும்.
- இரு தரப்பினரும் பேச்சு நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும்.
- பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு, தங்குமிடம், மருந்து போன்றவற்றை இலங்கை அரசு வழங்குவதை உறுதிப்படுத்த வேண்டும்.
- நிவாரணப் பொருட்களை செஞ்சிலுவைச் சங்கம் மூலம் விநியோகிக்க இலங்கை அரசு ஒத்துழைக்க வேண்டும்.
- இந்திய மீனவர்களை இலங்கை கடற்படையினர் சுடுவதையும், கொடுமைப்படுத்துவதையும் உடனடியாக நிறுத்த வேண்டும்.

# ஈழத் தமிழர் பிரச்சினையை ஐ.நாவுக்கு எடுத்துச் சென்று தீர்வு காண வேண்டும்

## மத்திய அரசிடம் ராமதாஸ் வேண்டுகோள்

புதுடில்லி, டிச. 06

ஈழத் தமிழர் பிரச்சினையில் இந்தியா நேரடியாகத் தலையிடுவதில் சிரமம் இருந்தால், இப்பிரச்சினையை ஐக்கிய நாடுகள் சபையின் கவனத்துக்குக் கொண்டுசென்று தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- இவ்வாறு மத்திய அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார் பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுநர் டாக்டர் ராமதாஸ்.

மேலும், இலங்கைப் பிரச்சினையில் இந்தியா நேரடியாக தலையிட முகாந்திரங்கள் உள்ளன. அங்கு உக்கிரமடைந்திருக்கும் போரினால் தமிழகத்துக்கு தஞ்சம் கேட்டு வரும் ஈழ அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இலங்கைக்கு சீனாவும் பாகிஸ்தானும் அளித்து வரும் ஆயுத உதவிகள் காரணமாக இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது - என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



டில்லியில் முதல்வர் கருணாநிதியுடன் சென்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் குழுவில் இடம்பெற்றிருந்த அவர், பிரணாப் முகர்ஜியிடம் கொடுத்த கடிதத்திலேயே இதனைக் குறிப்பிட்டிருந்தார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தவை வருமாறு -

தமிழர்கள் இலங்கையில் ஏராளமான எண்ணிக்கையில் கொல்லப்பட்டு வருகின்றனர். இந்தக் கொடூரமான மனித உரிமை மீறல் நடவடிக்கைகளைத் தடுக்க இந்தியா உடனடியாக நடவடிக்கையில் இறங்க வேண்டும்.

இப்பிரச்சினை குறித்து, தமிழகத்தில் இரண்டு முறை நடத்தப்பட்ட அனைத்துக் கட்சிகள் கூட்டத்திலும், சட்டசபையிலும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இருப்பினும் இதுவரை இப்பிரச்சினையில் தலையிட இந்தியா முன்வரவில்லை.

இவ்விடயத்தில் இந்தியா நேரடியாக தலையிட முகாந்திரங்கள் உள்ளன. இலங்கைப் பிரச்சினையால் தமிழகத்துக்கு தஞ்சம் கேட்டு வரும் அகதிகள் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போகிறது. மேலும் இலங்கைக்கு சீனாவும் பாகிஸ்தானும் அளித்து வரும் ஆயுத உதவிகள் காரணமாக இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் உள்ளது. குறிப்பாக கடலோரப் பகுதிகளுக்கு பெரும் அபத்து உள்ளது.

தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையின் தாக்குதல்கள் தொடர்கின்றன. இந்தக் காரணங்களால் இந்தியா நேரடியாகவே தலையிட முடியும். அவ்வாறு தலையிடுவதில் தயக்கம் இருந்தால் இப்பிரச்சினையை ஐக்கிய நாடுகள் சபையின் கவனத்துக்கு எடுத்துச் சென்று தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றுள்ளது.

# டில்லி விமான நிலையத்தில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம்!

## பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

புதுடில்லி, டிச. 06

டில்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில் நேற்று அதிகாலை துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டது எனக் கிடைத்த தகவலையடுத்து பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

விமானநிலையத்தின் 4ஆவது நுழைவாயிலில் அதிகாலை 1.15 மணியளவில் துப்பாக்கியால் சுடும் சத்தம் கேட்டது எனப் பயணி ஒருவர் விமானநிலைய நிர்வாகத்துக்கு தகவல் அளித்தார். இதையடுத்து மத்திய தொழில் பாதுகாப்புப் படையின் அதிவிரைவுப் படை, டில்லி பொலிஸுடன் இணைந்து உடனடியாக களத்தில் இறங்கியது. விமானநிலையம் முழுவதும் தீவிரமாகச் சோதனையிடப்பட்டன.

இதுகுறித்து விமானநிலைய பாதுகாப்புத் துறை ஆணையர் உதயன் பானர்ஜி கூறுகையில்

இருமுறை துப்பாக்கியால் சுடும் சத்தம் கேட்டது என சில பயணிகள் தொலைபேசியில் தெரிவித்தனர். எனினும் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் நிகழ்ந்ததற்கு ஆதாரம் எதுவும் இல்லாததால் அத்தகவலை உறுதிப்படுத்த முடியவில்லை - என்றார்.

# மீண்டும் இலங்கைக் கடற்படை அராஜகம் தமிழக மீனவரை ஓட ஓட விரட்டியடித்தது

இராமேஸ்வரம், டிச. 6

நடுக்கடலில் தமிழக மீனவர்களைத் தடுத்து நிறுத்திய இலங்கைக் கடற்படையினர், அவர்களிடம் தமிழில் பேசி தடிகள் மற்றும் பொல்லுகளால் தாக்கி - மீன் பிடி சாதனங்களைப் பறித்துக் கடலில் வீசி விரட்டியடித்தனர் எனத் தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் இதுகுறித்த தகவல்கள் வருமாறு -

இராமேஸ்வரத்தில் 600க்கும் மேற்பட்ட படகுகளில், மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றனர். மீன்பிடித்து கொண்டிருந்தபோது அங்கு வந்த இலங்கைப் படையினர், வானத்தை நோக்கிச் சுட்டு படகை நிறுத்தும் படி உத்தரவிட்டனர்.

படகின் அருகில் வந்து, ''அண்ணே, இந்தப்பக்கம் மீன் பிடிக்க இனிமேல் வராதீங்க'' என தமிழில் பேசி எச்சரித்தனர். படகை நிறுத்தாமல் சென்ற மீனவர்களைத் துரத்திப் பிடித்த இலங்கைக் கடற்படையினர், மீனவர்களை தடிகள் - பொல்லுகளால் அடித்ததோடு, மீன் பிடி சாதனங்களைக் கடலில் வீசி அராஜகம் செய்தனர் என்று கரை திரும்பிய மீனவர்கள் தெரிவித்தனர்.

# இராமேஸ்வரத்தில் கரையொதுங்கும் சடலங்கள், குண்டுதுளைத்த படகுகள்

## பொலிஸார் தீவிர சோதனை

இராமேஸ்வரம், டிச.5-

இராமேஸ்வரம் மற்றும் சுற்றுப்புற கடற்கரைகளில் அடுத்தடுத்து பிணங்கள் மற்றும் மர்ம படகுகள் கரை ஒதுங்கி வருவதால் கடலோரப் பகுதி முழுவதும் பொலிஸார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இலங்கையில் தற்போது போர் தீவிரமடைந்துள்ளதால் தமிழ ந்தில் கரை ஒதுங்கியுள்ள படகுகளில் பே ளிகள் யாரும் தப்பியபோது அந்த நாட்டுக் கடற்படையினரின் தாக்குதலுக்கு உள்ளானவையா என்று பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் படகில் வந்தவர்கள் இந்தப் பகுதியில் காயங்களுடன் ஊடுருவினார்களா என்றும் கடலோரப் பகுதிகளில் பொலிஸார் தீவிர தேடுதல் வேட்டை நடத்தி வருகின்றனர்.

இதற்கிடையே மண்டபம், இராமேஸ்வரம் கடற்கரையில் தொடர்ந்து பிணங்கள் ஒதுங்கி வருகின்றன. கடந்த சில தினங்களுக்கு முன்பு மண்டபம் கடற்கரைப் பகுதிகளில் அழுகிய நிலையில் 2 பிணங்கள் கரை ஒதுங்கின. நேற்று முன்தினம் அக்காள்மடம் கடற்கரையிலும் ஆணின் பிணம் ஒன்று கரை ஒதுங்கியது எனத் தெரிவிக்கப்படுகிறது.

# இரத்தக் கறைகளுடன் இலங்கைப் படகு மரக்காணம் அருகே ஆழ்கடலில் மீட்பு!

புதுச்சேரி, டிச.6

மரக்காணம் அருகே ஆழ்கடலில் இலங்கை மீனவர்களுக்குச் சொந்தமான இயந்திரப் படகு ஒன்று அனாதையாக நிறுத்தப்பட்டிருந்ததால் பெரும் பரபரப்பு - பீதி ஏற்பட்டன.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

புதுச்சேரியை அடுத்த மரக்காணம் ஆழ்கடலில் இயந்திரப்படகு ஒன்று நிறுத்தப்பட்டிருந்தது. அந்தப் படகில் யாரும் இல்லை. உடனே அந்தப் படகை மீனவர்கள் நாரிழைப் படகுகள் மூலம் கட்டி இழுத்து கரைக்குக் கொண்டு வந்தார்கள்.

தகவலறிந்த பொலிஸார் அந்தப் படகைச் சோதனையிட்டனர். படகில் இருந்த அறைகளின் கண்ணாடிகள் அடித்து நொறுக்கப்பட்ட நிலையில் இருந்தன எனவும், அங்கு சமையலுக்குப் பயன்படுத்தும் அரிசி மற்றும் வெட்டிய காய்கறிகள் இருந்தன எனவும் கூறப்படுகிறது. மேலும் படகின் பல இடங்களில் ரத்தம் உறைந்த நிலையில் காணப்பட்டது. படகில் வந்தவர்களது துணிமணிகளும், 'டயரி'கள் உட்பட முக்கிய ஆவணங்களை பொலிஸார் கைப்பற்றினர் எனத் தெரிகிறது.

இயந்திர படகில் சிங்கள கொடி பறந்து கொண்டிருந்தது. சிங்கள எழுத்துக்கள் அந்தப் படகில் எழுதப்பட்டு இருந்தன. எனவே அந்த படகு இலங்கை மீனவர்கள் ஆழ்கடலில் மீன் பிடிக்க பயன்படுத்தும் படகாக இருக்கலாம் என மீனவர்கள் கூறினர்.

# இலங்கை விடயத்தில் பிரதமருக்கு மதிப்பில்லை என்கிறது பா.ஜ.கட்சி

இலங்கைப் பிரச்சினையில் பிரதமர் மன்மோகன் சிங் கருத்துக்கு எந்த மதிப்பும் இல்லை. இந்த நேரத்தில் முதல்வர் கருணாநிதி, பிரதமரிடம் இதுகுறித்து வலியுறுத்துவது எந்தப் பலனையும் தராது - என்று பா.ஜ.க. தலைவர் இல. கணேசன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் சேலத்தில் அளித்த பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு-

இலங்கைப் பிரச்சினையில் பிரதமர் மன்மோகன் சிங் கருத்துக்கு எந்த மதிப்பும் இல்லை. பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி, '20 தீவிரவாதிகளை இந்தியாவிடம் ஒப்படைக்க மறுத்துள்ளார். பாகிஸ்தானை அடக்கிப் பணிய வைக்கும் ஒரே சக்தி பா.ஜ.க.தான்.

காங்கிரஸ், கம்யூனிஸ்ட், தி.மு.க. கட்சிகள் தவிர பிற கட்சிகளுடன் பா.ஜ.க. கூட்டணிக்குத் தயாராக உள்ளது. இதுதொடர்பாக கட்சிகளுடன் மறைமுக பேச்சு நடந்து வருகிறது.

அடிப்படையிலேயே இந்தியாவின் மீது அதிக பற்றுள்ள பா.ஜ.க. ஆனால் கம்யூனிஸ்ட்களின் தலைமை இடம் ரஷ்யாவில் உள்ளது. அவர்களுக்கு தேசப்பற்று இல்லை. எல்லை கடந்த பற்று மட்டுமே உள்ளது - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று நண்பகலில் வியாழ மாற்றம்

யாழ்ப்பாணம், டிசெ.6

இன்று வியாழமாற்றம் நடைபெறுகிறது. வியாழ பகவான் தனது ராசியிலிருந்து மகர ராசிக்கு முற்பகல் 11.10மணிக்கு இடம்பெயர்வதாக வாக்கிய பஞ்சாங்கம் தெரிவிக்கிறது.

வியாழபகவான் இன்று இடம்பெயர்ந்த பின்னர் சுமார் ஒரு வருடத்துக்கு மகர ராசியில் ராகுவுடன் சேர்ந்து நீச சஞ்சாரம் செய்வார் என்று சோதிடர்கள் தெரிவித்துள்ளனர்.

வியாழமாற்றத்தை ஒட்டி இன்று விசேட பூசைகள், அபிஷேகங்கள் நடைபெறுகின்றன. சிவன் ஆலயங்களில் ஹோமங்களும் தெட்சணாமூர்த்திக்கு விசேட பூசைகளும் இடம்பெறுகின்றன.

இதே வேளை வியாழமாற்றம் இம்மாதம் 9ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2மணிக்கு நடைபெறுவதாக திருக்கணித பஞ்சாங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பிரபல ஊடகவியலாளர் ஜோ. அரியரட்ணம் காலமானார்



யாழ்ப்பாணம், டிசெ.6

யாழ்ப்பாணத்தின் பிரபல ஆங்கில ஊடகவியலாளரான ஜோ. அரியரட்ணம் கொழும்பில் நேற்றுக் காலமானார்.

சுகவீனமுற்றிருந்த இவர், கொழும்பில் உள்ள தனியார் மருத்துமனையில்நேற்று வெள்ளிக்கிழமை தமது 63 ஆவது வயதில் மரணம் எய்தினர்.

(18 ஆம் பக்கம் பார்க்க)

# நான்கு தமிழ் எம்.பிக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பு மாவட்ட எம்.பிக்களான சேனாதிராஜா ஜெயானந்தமூர்த்தி, அரிய நேத்திரன் பாக்கியசெல்வம், யாழ். மாவட்ட எம்.பிக்களான செல்வராஜா கஜேந் திரன், கனகலிங்கம் சிவாஜிலிங்கம் ஆகிய நான்கு எம்.பிக்கள் தொடர்பான விடயங் களை ஒட்டியே நேற்று கொழும்பு பிரதம நீதி வான் நிஷாந்த ஹப்புஆராய்ச்சி முன் னிலையில் குற்றப் புலனாய்வுப் பொலி ஸார் விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பித் தனர்.

அந்த விண்ணப்பத்தில் தெரிவிக் கப்பட்டிருந்த விடயங்களின் சாராம்சம் வருமாறு:-

ஜெயானந்த மூர்த்தி, அரியநேத்திரன், கஜேந்திரன் ஆகிய மூவரும் 2006 ஜூன் 26ஆம் திகதி ஜேர்மனியில் இடம்பெற்ற 'பொங்கு தமிழ்' நிகழ்வில் இலங்கை அரசைக் கடுமையாக விமர்சித்தும், தனி இராச்சியம் ஒன்று நிறுவவேண்டும் என்று கோரியும் உரையாற்றியுள்ளனர். தனி நாட்டுக்காகப் போராடும் புலிகள் இயக்கத் தலைவருக்கு ஒத்துழைப்பும், உதவியும் வழங்குமாறு வெளிநாட்டுத் தமிழர்களி டம் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து, கடந்த நவம்பர் 14 ஆம் திகதி ஜெயானந்தமூர்த்தியிடமும், 18 ஆம் திகதி அரியநேத்திரனிடமும், 19 ஆம் திகதி கஜேந்திரனிடமும் நாம் வாக்குமூலம் பெற்றோம்.

மேற்படி 'பொங்குதமிழ்' நிகழ்வு தொடர்பாக எம்மிடம் உள்ள 'சிடி'யைப் போட்டுக் காட்டினோம். அதில் உள்ளவை தாங்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிதான் என அவர்கள் வாக்குமூலத்தில் ஒப்புக்கொண்டு ஊர்ஜிதப் படுத்தியுள்ளனர்.

இதுபோன்று அவுஸ்திரேலியாவில் இந்த ஆண்டு நடைபெற்ற 'பொங்கு தமிழ்' நிகழ்வில் சிவாஜிலிங்கம் உரையாற்றியுள்ளார். எனினும், அவர் இன்னும் நாட்டுக்குள் மீளவராமையால் அவரிடம் வாக்குமூலம் எதனையும் இன்னும் பதிவு செய்ய முடியவில்லை.

இவர்கள் பிரிவினைக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்யமாட்டோம் என்று தெரி வித்து சத்தியப் பிரமாணம் செய்தே எம்.பிக் களாகப் பதவியேற்றுள்ளனர். ஆனால், அதற் கும் அரசமைப்புக்கும் முர ணாகச் செயற்பட்டு பிரிவினைக்கு ஒத்துழைப்பு, அனுசரணை, உற்சாகம் அளிப்ப தோடு, உதவியும் வருகிறார்கள்.

எனவே, இவ்விடயம் தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கவும், மேலும் விசாரணை செய்யவும் தீர்மானித்துள்ளோம்.

ஆகையால், இந்த எம்.பிக்களை நாட்டை விட்டு வெளியேறக்கூடாது என்று உத்தரவு ஒன்றைப் பிறப்பிக்குமாறு வேண்டுகிறோம். - இப்படி அந்த விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதனைப் பரிசீலித்த நீதிவான், சம்பந்தப்பட்ட எம்.பிக்களின் கருத்தை அறியாமல் இத்தகைய உத்தரவைப் பிறப்பிக்க முடியாது எனக் குறிப்பிட்டதோடு, இந்த விடயத்தைப் பற்றி ஆராய்வதற்காக சம்பந்தப்பட்ட எம்.பிக்களை எதிர்வரும் 10 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு பணிக்கும் அழைப்பாணையை அனுப்புவதற்குக் கட்டளையிட்டார்.

இந்த நான்கு எம்.பிக்களில் கஜேந்திரன், ஜெயானந்த மூர்த்தி, சிவாஜிலிங்கம் ஆகிய மூவரும் ஏற்கனவே வெளிநாட்டில் உள்ளனர். அரியநேத்திரன் நேற்று கொழும்பில் தங்கியிருந்தார். (சி)

## சேவை நயப்பு வாழ்த்து



தீவகக் கல்வி வலயத்தில் சேவைக்கால ஆசிரிய ஆலோசகராகக்(சமய பாடம்) கடமையாற்றி 04.12.2008 ஆம் திகதி ஓய்வுபெற்ற

**செல்வி இ.ஜெயலட்சுமி**

அவர்களின் சேவை நயப்பு வாழ்த்து.

*அன்பினால் அகிலத்தை ஆட்கொண்ட சக்தியதாய்*
*பண்பெனும் இருப்பினில் பகர்சைவ நெறி பகன்று*
*கண்ணாகக் கடமையிலே கண்ணியமாய் நடைபயின்ற*
*ஜெயலட்சுமி அம்மா நீடுழி வாழியவே!*

அன்பர்கள்.

## துயர் பகிர்கிறோம்

யா/பெரியபுலம் மகாவித்தியாலயத்தின் ஊழியர் கு.இரத்தினபாலா அவர்களின் தந்தையார்

**குணரத்தினம்**

அவர்களின் மறைவையொட்டி ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக் கின்றோம்.

*அதிபர், ஆசிரியர்கள்,*
*கல்வி சாரா ஊழியர்கள்.*

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



பிறப்பு 20 - 01 - 1936

இறப்பு 06 - 11 - 2008

**அமரர் இளையதம்பி கந்தையா (மணியம் மாமா)**

06.11.2008 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் இ.கந்தையா அவர்களது 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளும் இன்று (06.12.2008)சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. அன்றையதினம் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

*குப்பிளான் தெற்கு,*
*ஏழாலை.*

குடும்பத்தினர்
(நா.ஜெகநாதன்).

**விற்பனைக்குண்டு**
PANA SONIC LCD PROJECTOR
உடன் விற்பனைக்குண்டு.
MODEL NO.: PT-AE 300 E, PT -AE 200 E
தொடர்பு:- சோதி ஸ்ருடியோ,
மல்லாகம் சந்தி, மல்லாகம்.

**தவறி விட்டது**

மனோகரன் நிரோஜன் ஆகிய எனது அஞ்சல் அறிமுக அட்டை தொலைந்து விட்டது. நான் O/L பரீட்சை எழுத வேண்டும். கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன். கண்டெடுத்தவர்கள் தந்து உதவவும்.

நேட்டிலிப்பாய், கோண்டாவில் மேற்கு, GS J/117

**வேலை ஆள்கள் தேவை**
அனைத்து வெதுப்பக வேலைகளும் தெரிந்த அனுபவமிக்க மின்வெதுப்பியும் இயக்கக் கூடிய வேலை ஆள்கள் தேவை.
**காங்கேயன் வெதுப்பகம்.**
*கே.கே.எஸ். வீதி, மல்லாகம்.*

**ஆட்டோ சாரதி தேவை**
35 வயதுக்கும் 50 வயதுக்கும் இடைப்பட்ட ஆட்டோ ஓட்டுநர் தேவை.
(சாரதி அனுமதிப்பத்திரமுள்ளவர்)
யாழ். நகர்ப்பகுதியில் வசிப்பவர் விரும்பத்தக்கது.
தொடர்பு: 021 222 8250
077 1387556

**கிறிஸ்ரல் சென்ரர்**
புதிய கல்வி ஆண்டு- 2009
ஆரம்பம் 2008.12.09
வகுப்பு:- 03, 04, 05, 06, 07, 08, 09, 10, 11
தனித்துவமான ஆசிரிய குழுவுடன்
நெல்லியடியில் மு.ப 9.00மணி செவ்வாய் | திக்கத்தில் பி.ப 3.00மணி செவ்வாய்
"வாரத்தில் மூன்று புலமைப் பரிசில் பரீட்சைகள்"
★ அன்பழகன்
★ BOND
★ கொழும்பு எக்ஸ்பிரஸ்
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
நிர்வாகி: க.யோகேந்திரன்.

## திருத்திவாசிக்கவும்

உதயன் பத்திரிகையில் 05.12.2008 திகதியன்று இரண்டாம் பக்கத்தில் வெளியான கிறிஸ்தோபர் றேமன் சலேஷியஸ் தொடர்பான கண்ணீர் அஞ்சலி விளம்பரத்தில் அன்புத் தாயார் என்றிருப்பது தவறு. அதனை அன்புத் தந்தையார் என்று திருத்திவாசிக்கவும்.

**விளம்பரமுகாமையாளர்.**

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 26 ★ 08 ★ 1936



உதிர்வு 20 ★ 11 ★ 2004

**நாராணி சுப்பையா திருநாவுக்கரசு**

*(உரிமையாளர் விஜயா கூல்பார், பஸ்நிலையம்)*

*திதி: நவமி (06.12.2008)*

ஆண்டுகள் நான்கு சென்றாலும்
ஆறவில்லை உங்கள் பிரிவுத் துயர்
*ஓம் சாந்தி!*

*101/1, முருகமூர்த்தி வீதி,*
*வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.*

மனைவி,
பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்கள்

## மருசலீன் யோன்பிள்ளை



**(இளைப்பாறிய ஆசிரியர்)**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் தற்போது சுழிபுரத்தில் வசித்து வந்தவருமாகிய மருசலீன் யோன்பிள்ளை அவர்கள் (03.12.2008) புதன்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வமணியின் (ஆசிரியை, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை) அன்புக் கணவரும் நேரா (ஆசிரியை, தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாலயம்), சந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் மகாவின் அன்பு மாமனாரும் அனோஜன், ஆருஜன், அட்சயன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03.12.2008 சுழிபுரத்தில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"சோதிவாசா",*
*காளுவன், சுழிபுரம்.*

தகவல்:
நேரா (மகள்).

## திருமதி விஜயரத்தினம் இரத்திரதேவி

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை கலட்டி அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் இல: 121, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பு, வெள்ளவத்தையில் வசித்தவருமான திருமதி விஜயரத்தினம் இரத்திரதேவி நேற்று (05.12.2008) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீனியர் துரையப்பா - செல்லம்மா தம்பதியினரின் அருமை மகளும் காலஞ்சென்ற மதியாபரணம் விஜயரத்தினத்தின் (இலங்கை வங்கி) அன்பு மனைவியும் ஜெயதேவி, ஜெயக்குமார் (ACI Ltd, Ratmalana) விஜயலஷ்மி ஆகியோரின் பாசமிகு அன்னையும் ஸ்ரீநிவாசன் (Dental Surgeon), சாந்தி, ஸ்ரீஹரன் (Post Master, Havelock Town) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆரணி, சிவதாகினி, அஸ்வினி (சைவ மங்கையர் வித்தியாலயம்), ஜெய்சாந், சஞ்ஜெய் (பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), லக்ஷனா (சைவமங்கையர் வித்தியாலயம்), பிரணவன் (றோயல் கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (06.12.2008)சனிக்கிழமை இல. 32, பாமன் கடை லேன் , (Parman Kada lane) வெள்ளவத்தையில் அஞ் சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நாளை (07.12.2008) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெற்று, கல்கிசை பொது மயானத்தில் காலை 9.30 மணிக்கு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*இல.32, பாமன் கடை லேன்,*
*வெள்ளவத்தை கொழும்பு - 06*
*தொ.பே. 011 4919980*

(சி)

தகவல்:
குடும்பத்தினர்.

## சுப்பிரமணியம் சுந்தரலிங்கம்

*(முன்னாள் வருமான வரி உத்தியோகத்தர், பிரபல வெற்றிலை வியாபாரி, திருநெல்வேலி)*



தலையாழியைப் பிறப்பிடமாகவும் இல.58, லோட்டஸ் வீதி, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சுந்தரலிங்கம் நேற்று (05.12.2008)வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-அன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-கௌரியம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் விமலாதேவியின் அன்புக் கணவரும் வாசுகி (கனடா), மாதவி (மாவட்ட திட்டமிடல் செயலகம், யாழ்ப்பாணம்), தேவகி (ஆசிரியை, யாழ்.ஸ்ரீவைத்திலிங்க வித்தியாசாலை), கண்ணன் (இந்தியா), மதன் (கனடா), பிரதீபன்(இந்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயச்சந்திரன் (கனடா), சந்திரதாஸ் (ஆசிரியர், இடைக்காடு மகாவித்தியாலயம்), கந்தவனச்செல்வன் (ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி), ஆகியோரின் அன்பு மாமனாரும் தட்ஷா, அபிஷா, சாகித்தியன், சகானன், ஆரபி, விசாகன், தேனுஷகி, அபினன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2008) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப. 2 மணியளவில் தகனக்கிரியைக்காக யாழ். கோம்பயன் மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.58 லோட்டஸ் வீதி,*
*வண்ணார்பண்ணை.*

(80506)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

 மாநகர சபை, யாழ்ப்பாணம் 

# பாகிஸ்தானில் குண்டுவெடிப்பு 16 பேர் பலி; 80 பேர் காயம்

கராச்சி, டிச.06

பாகிஸ்தான், பெஷாவார் நகரில் ஷியா பிரிவினர் நடத்திய தொழுகையின்போது நேற்று மாலை குண்டுவெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. இதில் 16 பேர் உயிரிழந்தனர். 80க்கும் மேற்பட்டோர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர் என சர்வ தேசச் செய்திஏஜன்சிகள் தெரிவித்தன.

எனினும், இழப்புக்கள் மேலும் அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது.

இந்தக் குண்டுவெடிபின்போது ஷியா இன முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பகுதியில் உள்ள கட்டடம் ஒன்று முற்றாகத் தீக்கிரையாகியுள்ளது எனவும், அந்தப் பகுதியில் மின்சாரம் தற்காலிகமாகத் தடைப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தை அடுத்து அந்தப் பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. சம்பவத்தின் பின்னர் அங்கு பொலிஸாரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருக்கிறது எனவும் அச்செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

## கனகராயன்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொலைவில் உள்ள இப்பகுதியை கைப் பற்றியுள்ளனர் என பாதுகாப்புஅமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை இதன் மூலம் ஓமந்தையிலிருந்து 2 கிலோ மீற்றர் பகுதியை இராணுவத்தினர் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளனர் எனவும் தெரிவிக் கப்படுகிறது. (சி)

## சூறாவளியின் கரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அளவிலான முன்னேற்றத்தை எதிர்பார்கலாம் என்றும் -

வடக்கு - கிழக்கு, வடமத்திய மாகாணங்களில் காற்றுடன் கூடிய மழை பெய்யக் கூடும் என்றும் - அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், வட-கிழக்கு மற்றும் கிழக்குக் கடலோரங்களில் கடற்கொந்தளிப்புக் காணப்படும். ஆங்காங்கே இடியுடன் கூடிய மழையும் பெய்யலாம் - எனவும் அந்தப் பிந்திய காலநிலை அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

### நண்பகல் அறிக்கை

இதேவேளை -

நேற்று நண்பகல் 12 மணிக்கு காலநிலை அவதான நிலையம் வெளியிட்ட அறிக்கையில்-

மத்திய வங்காள விரிகுடாவில் உருவாகியிருந்த தாழமுக்கமானது சூறாவளியாக உருவாகி மட்டக்களப்பின் கிழக்குத் திசையில் இருந்து 600 கிலோ மீற்றர் தூரத்தில் மையம் கொண்டுள்ளது. நாட்டின் வடக்கு, வடமத்திய, கிழக்குப் பிரதேசங்களில் இடி மின்னலுடன் கூடிய தொடர்ச்சியான மழையும் ஓரளவு பலமான காற்றும் எதிர்பார்க்கப்படுகிறது. நாட்டின் ஏனைய பகுதிகளில் இடையிடையே மழை பெய்யக்கூடும். அத்துடன் கிழக்கு, வடகிழக்குப் பகுதிகளில் கடற்கொந்தளிப்பு எதிர்பார்க்கப்படுகின்றது.

கிழக்குக் கடற்கரையை அண்மித்த கடற்பிரதேசங்களில் காற்று மணித்தியாலத்துக்கு 40 - 50 கிலோ மீற்றர் வேகத்தில் வடகிழக்காக வீசுவதோடு ஏனைய கடற்கரைப் பிரதேசங்களில் வடமேற்கு, மேற்கு திசைகளில் வீசக்கூடும். சில வேளை அதன் வேகம் மணித்தியாலயத்துக்கு 60 - 70 கிலோ மீற்றராக அதிகரிக்கவும் வாய்ப்புள்ளது - என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

அந்த அறிக்கையின் தகவல்களின் அடிப்படையில் -

பிரதேச செயலர்கள், உதவி அரசாங்க அதிபர்கள், சகல திணைக்களத் தலைவர்கள் ஏனைய நிறுவனங்கள் மற்றும் பொது மக்கள் மிகவும் உன்னிப்பாக கவனஞ் செலுத்தி பொருத்தமான முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு அரச அதிபர் க.கணேஷ் அறிவுறுத்தியிருந்தார்.(அ)

## பெற்றோல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய விலையில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோலைப் பெற்றுக் கொள்ள முடியும் எனப் பெற்றோலியக் கூட்டுத்தாபன யாழ். அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (50)

## அழைப்பாணை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த அழைப்பாணை விடுக்கும் உத்தரவை நேற்று மாலை அவர் விலக்கிக்கொண்டார் என சட்டவட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விடயம் தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனை பெற்று அதனடிப்படையில் மேல் நடவடிக்கைகளை எடுக்கவும் அவர் குற்றப் புலனாய்வுப் பொலிஸாருக்கு நேற்றுமாலை உத்தரவு பிறப்பித்தார் என்றும் தெரியவந்தது.

நீதிமன்றத்தின் இத்திடீர் தீர்மான மாற்றத்திற்கான காரணம் தெரியவரவில்லை.

நீதிமன்றத்தின் புதிய உத்தரவுப்படி நான்கு எம்.பிக்களுக்கும் அழைப்பாணை அனுப்பப்படாதபோதிலும், குற்றப்புலனாய்வுப் பொலிஸாரின் விண்ணப்பம், முன்னர் தீர்மானிக்கப்பட்டபடி எதிர்வரும் 10ஆம் திகதி மீண்டும் கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்படும் எனத் தெரிகிறது. (அ-சி)

# ஜனாதிபதி நாடு திரும்பினார்

கொழும்பு, டிசெ.6

துருக்கி நாட்டுக்கான நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக் கொண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று நாடு திரும்பியுள்ளார் என்று ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி தனது துருக்கி விஜயத்தின் போது அந்நாட்டு ஜனாதிபதி அப்துல்லா குல்லுடனும், துருக்கி வர்த்தக சமூகத்தினருடனும் இரு தரப்பு பேச்சுக்களை மேற் கொண்டிருந்தார்.

இவ்விஜயத்தின்போது, இரு நாடுகளுக் குமிடையே நேரடி விமான சேவை மற்றும் கைதிகள் பறிமாற்றம் என்பன தொடர்பாக இரு தரப்பு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டதுடன்இ பயங்கரவாதத்தை ஒழிப்பதில் இரு நாடுகளும் இணைந்து பணியாற்றுவதென இரு தலைவர்களும் உடன்பட்டனர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## வன்னி அகதி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பில் நோர்வே அகதிகள் கவுன்ஸின் தன்னார்வத் தொண்டரான 28வயது இளைஞன் கொல்லப்பட்ட சம்பவத்தை அவர் கண்டித்துள்ளார்.

இலங்கையில் பணிபுரியும் தன்னார்வத் தொண்டர்களுக்கு சகல உதவிகளையும் சகல தரப்புக்களும் வழங்கவேண்டும் என்று வலியுறுத்தியுள்ள அவர், இவரது மரணம் குறித்து நீதிவிசாரனை இடம்பெற வேண்டும் என்று கூறியுள்ளார். (அ-1)

## சகலரும் சேர்ந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் மன்னாரில் ஆரம்பித்த இராணுவ நடவடிக்கை கொஞ்சம் கொஞ்சமாக அக்கராயனில் வந்து நிற்கின்றது. இந்த இராணுவ நடவடிக்கை மூலம் மக்களை பெரும் அவலங்களுக்கும், துன்பங்களுக்கும் உட்படுத்தி போராட்டத்திலிருந்து அந்நியப்படுத்தும் ஒரு தந்திரோபாயத்தை சிங்களப் பேரிணவாத அரசு செய்து கொண்டுவருகின்றது. அவர்களுடைய திட்டம் எங்களுடைய மக்களால் ஏற்கனவே முறியடிக்கப்பட்டுள்ளது.

### பின் நகர்ந்து நிற்பது எங்களின் இராணுவ வியூகம்

அவர்கள் நினைப்பதுபோல மக்கள் வேறு புலிகள்வேறல்ல. நாம் எல்லோரும் தமிழர்கள் என்பதை ஒரே சக்தியாக நின்று இந்த உலகத்திற்கு வெளிப்படுத்தி நிற்கின்றோம். இதனால் சிங்களப் பேரினவாதம் பெரிய தோல்வியை இன்றைக்கு சந்திப்பதற்குத் தயாராகிக்கொண்டிருக்கின்றது. எங்களுடைய மக்கள் இவ்வாறு பின்னுக்கு நகர்ந்தது எங்களுடைய இராணுவ வியூகம், எங்களுடைய தந்திரோபாயம் எங்களுடைய பேராட்ட வரலாற்றில் நாம் நிறையஅனுபவங்களை நிறையப் பாடங்களைக் கற்றிருக்கின்றோம்.

நிறையச் சம்பவங்களுக்கு நாங்கள் முகம்கொடுத்திருக்கின்றோம். ஜெயசிக்குறு காலத்தில் கூட இதேமாதிரியான நிலைமைதான் இருந்தது. ஆனையிறவில் இராணுவம் நின்றது. 18 மாதங்களாக சிங்கள அரச பயங்கரவாதத்தால் மேற்கொள்ளப்பட்ட அந்த இராணுவ நடவடிக்கை ஓரிருநாள்களுக்குள் சிங்கள அரசபடைகள் இருந்த இடம்தெரியாமல் விரட்டப்பட்டன. சிங்கள அரச பயங்கரவாத வரலாற்றில் என்றுமே இல்லாத பெரிய தோல்வியை சிங்கள அரசும், படைகளும் அன்று சந்தித்தன.

இன்றைக்கு ஏற்பட்டிருக்கும் இந்த நிலையை நாங்கள் வெற்றிகரமாக எங்களுக்குச் சாதகமாக மாற்றவேண்டும்.

### மக்கள் களத்தில் நிற்கிறார்கள்

அதற்காகத்தான் கரும்புலிகள் இவ்வாறான தாக்குதல்களை நடத்துகின்றார்கள். இவர்களுடன் இணைந்து எமது மக்கள் களத்தில் நிற்கின்றார்கள். ஆயிரத்திற்கும் அதிகமான எமது மக்கள் போராளிகளோடு போராளிகளாக களமுனைகளில் நிற்கின்றார்கள். இன்றைக்கு எமது விடுதலைப் போராட்டம் மக்கள் போராட்டமாக மலர்ந்திருக்கின்றது. இதில் ஒன்றை எம்மால் எதிர்வு கூறமுடியும். சிங்கள அரச பயங்கரவாதம் ஓயாத அலைகள் - 03 இல் அடிவாங்கியதைவிட எதிர்காலத்தில் படுதோல்வியைச் சந்திக்கப்போகின்றது - என்றார். (அ-1)

## யுத்த நிறுத்தத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் அந்த வட்டாரங்கள் உறுதியாகத் தெரிவித்தன.

எனினும், யுத்தத்தை நிறுத்துமாறு இலங்கை அரசை வற்புறுத்துவதற்காக இந்தியா தனது வெளிவிவகார அமைச்சரை விரைவில் கொழும்புக்கு அனுப்ப முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுகின்றது. அது குறித்துக் கேட்டபோதே கொழும்பு அரசுத் தலைமையுடன் தொடர்புடைய வட்டாரங்கள் மேற்கண்டவாறு தகவல் வெளியிட்டன.

அந்த வட்டாரங்கள் மேலும் கூறியவை வருமாறு:-

யுத்தத்தை நிறுத்தும்படி இந்தியா கோரும் என நாம் நம்பவில்லை. அப்படி யுத்தத்தை நிறுத்துமாறு இந்தியா கோருமானால்-

யுத்தம் நிறுத்தப்பட்ட வேளையில் தம்மைப் பலப்படுத்தித் திரும்பவும் யுத்தத்துக்குச் செல்வதற்குத் தம்மைத் தயார்புடுத்தும் நடவடிக்கைகளிலோ, யுத்த நிறுத்தத்தை மீறும் செயல்களிலோ புலிகள் ஈடுபடமாட்டார்கள் என்ற உத்தரவாதத்தை புதுடில்லி தரமுடியும் என்றால் மட்டுமே யுத்த நிறுத்தம் குறித்து இந்தியா பேசமுடியும் என்பதை அவர்களுக்கு (இந்தியாவுக்கு) தெளிவாக எடுத்துரைப்போம்.

புலிகள் குறித்து - அவர்களின் போக்கு மற்றும் செயற்பாடுகள் பற்றி - தம்மால் உத்தரவாதம் தரமுடியாத நிலையில் இருக்கும் இந்தியா, புலிகளை நம்பி யுத்தநிறுத்தம் செய்யும்படி எங்களை எப்படிக் கோரமுடியும்? - என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (சி)

## பிரபல ஊடகவியா...

(17 பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்திலிருந்து அனைத்துலக செய்தி நிறுவனங்களான ரொய்ட்டர், ஏ.எ.ப்.பி, சி.என்.என், ஹொங்கொங்கில் உள்ள "ஸ்ரார்" தொலைக்காட்சி மற்றும் அல் ஜசீரா தொலைக்காட்சி ஆகியவற்றின் செய்தியாளராக பணியாற்றிய இவர் தமிழ்ப் பகுதிகளின் செய்திகளை சர்வதேசத்துக்கு அறிவித்து வந்தார்.

இவரது பூதவுடல் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்படவுள்ளது. அதற்கான ஏற்பாடுகளை சுதந்திர ஊடக இயக்கம் மேற்கொண்டு வருகின்றது. (அ)

தேவை
யாழ். நகரில் பிரபல கணினி நிறுவனம் ஒன்றிற்கு Computer Programing (ctt, Java, VB Script, Java Script) கற்பிப்பதில் அனுபவமுள்ளவர்கள் தேவை.
10ம் திகதிக்கு முன் Biodata இனை அனுப்பி வைக்கவும்.
சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
விளம்பர இல:- 31υ2
மே/பா. உதயன்.

பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சிநெறிகள் ஆரம்பம்
GIT (G.C.E A/L)
ICT (Grade 10,11)
Kids Programming (Year1-10)
MSO, DTP, VISUAL BASIC
Hardware
ஆசிரியர் :-திரு.சி.பிரணவன்
Start on: 10.12.12.2008
Softview Computer College
55, Arasady Road, Jaffna. T.P: 021 2225170

SUBRA (14) கல்வி நிறுவனம்
கல்வி ஆண்டு 2009
ஆரம்பம் 07.12.2008 (ஞாயிறு)
சித்தன்கேணி- மு.ப. 10.00
வட்டுக்கோட்டை- மு.ப. 11.00
★ எமது தரமும் தகுதியும் மிக்க ஆசிரிய குழு
★ நாம் இப்பிரதேசத்தவர். உங்களுக்கு நம்பிக்கையானவர்கள்
★ கடமை- கண்ணியம்- கட்டுப்பாடு இதுவே எமது வெளிப்பாடு.
2007ல் 10A பெறுபேறு S.சுகிர்தன், P.லம்போதரன், S.வக்சலா, T.திருமகள்
2007ல் புலமைப்பரிசில் 28 மாணவர்கள்

பிறைற்றின் கல்வி நிலையம்
சாவகச்சேரி
கல்வியாண்டு 2009
ஆரம்பம்:- 10.12.2008, புதன் பி.ப 4.00

தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் 156வது ஜன்ம தினம் (18.12.2008)
பருத்தித்துறை ஸ்ரீ ராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் பக்தி பூர்வமாக அனுஷ்டிக்கப்படும். மதியம் விசேட பூஜையை அடுத்து மாலிசந்தி, கரவெட்டி மின் அத்தியட்சகர் தந்த விவரக் கொத்து பிரகாரம் இப்புனித தினத்தில் முதல் கட்டமாக 38 அலுவலர்களுக்கு புதிய ஆடை சேவாச்சிரமத்தால் வழங்கப்படும்.
செயலாளர்.

கணக்கீடு
P.பகீரதன் B.B.A(F.M.Spl)
A/L 2010
கட்டுப்பாட்டுக் கணக்கியல் Sat, Sun 8 - 9
ஆரம்பம்:- 7.12.2008 Sun- 8 am
விடுமுறை கால வகுப்புக்கள்
A/L 2009
பங்குடமை முடிவுக் கணக்கு Mon, Fri 7.15 - 9
ஆரம்பம்:- 8.12.2008 Mon-7.15am
NEC
Clock Tower Road, Jaffna

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
தரம் :- 4 முதல் O/L வரை (தமிழ்மொழி மூலம்)
தரம் :- 6,7 ஆங்கில மொழி மூலம்.
தரம் :- 5 புலமைப்பரிசில்
ஆரம்பம்:- 07.12.2008
காலை :- 9.30 மணிக்கு.
அனைத்து மாணவர்களும் தவறாது சமுகமளிக்கவும்
சயன்ஸ் அக்கடமி
நல்லூர். ⟷ அரியாலை.

21ஆவது வருட கல்விச் சேவையில்....
கல்வியாண்டு-2009
தரம்1 முதல் O/L வரையான
புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
07-12-2008 ஞாயிறு 10.00 மணி
★ எமது தனித்துவமான ஆசிரியர் குழு
★ புதிய அனுமதிகளை இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம்.
உயர் கல்விக்கு வழிகாட்டும் ஒரே நிறுவனம்.
நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

Microsoft Certified
Systems Engineer (USA)
★ 100% செய்முறைகளுடன் கூடிய நிறைவான வகுப்புக்கள்
★ Microsoft நிறுவன அதிபர் Bill Gatesஇன் கையொப்பத்துடன் கூடிய சர்வதேச தர சான்றிதழ்
★ Network Manager, System Admin., System Engineer போன்ற வருமானம் கூடிய வேலைவாய்ப்பு
★ கணனித்துறையில் வேலை செய்வோருக்கு சர்வதேசதகுதி
★ வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்
★ ComTIA A+ (Hardware Technician-AUSTRALIA) கற்கை நெறிக்கு 100% சலுகைக் கட்டணம்.
புதிய பிரிவுகள் ஆரம்பம் 09.12.2008 08.00AM
Become an Engineer
விபரங்கள் நேரில்
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS
Supported By UNDP/JRRP

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.12.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org